Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර | பக்கம் 24 ரூபா 30.00
பெப்ரவரி 13 - 19, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1053

# கிளிநொச்சியில் பல்கலை வளாகம்




## அமைச்சர் டக்ளஸ் சாதனை



## சர்வதேச போர்க்குற்றங்கள்...

பகுதி – II




காதல் வானில்
சிறகடிக்கும் - இள
நெஞ்சங்கள் வாழ்வில்
ஜெயித்திட இனிய
வாழ்த்துக்கள்

## காதலர் தின சிறப்புக் கவிதைகள்

## கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவடைந்ததா?

## ௐ அஷ்ட ஐஸ்வர்யங்களை வழங்குபவள்

குபேரனுடன் தொடர்புகொண்ட எட்டு செல்வக் கருவூலங்களுக்கும் தலைமைத் தெய்வமாகத் திகழ்பவள் அன்னை மகாலட்சுமி. இதனை மார்க்கண்டேய புராணம் தெளிவுற விளக்குகிறது. லட்சுமிகள் எட்டு, அதனையே 'அஷ்ட லட்சுமிகள்' எனறு அழைக்கின்றோம்.

செல்வம், ஞானம், உணவு, மனவுறுதி, புகழ், வீரம், நல்ல புதல்வர்கள், விரும்பியதை விரைவாக முடிக்கும் ஆற்றல் இவையே அந்த அஷ்ட ஐஸ்வரியங்களாகும். இந்த அஷ்ட ஐஸ்வரியங்களையும் ஒருவனால் பெறமுடியும். அதற்கு அந்தத் திருமகளின் அருட்கடாட்சம் இருக்கவேண்டும்.

அன்னை மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை ஒன்று மட்டுமே இதற்கு போதுமானது. ஆலய வழிபாடும் அப்பழுக்கில்லாத அழகிய (உருவம் அல்ல) உள்ளம்கொண்ட எவரும் திருமகளின் திருவருளை எளிதில் பெற்றுவிடலாம். ஆலயங்களில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அன்னை மகாலட்சுமியை ஆலயங்களுக்கு சென்று வணங்கி வழிபடலாம்.

ஸ்ரீசூக்தம், கனகதாரா ஸ்தோத்திரம், மகாலட்சுமி அஷ்டோத்திரம் என துதிப்பாடல்களை பாடியும் தியானித்து அன்னை மகாலட்சுமியை வணங்கி வழிபடலாம். இயலாதவர்கள் வீடுகளில் திருக்கேற்றி வைத்து தீபச்சுடரையே மகாலட்சுமியாகக் கருதி வழிபடலாம்.

## ஆன்மீகம் — உங்கள் குழந்தைகள்!

ஆண்டவர் இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த விழாவை இன்று கொண்டாடுகிறோம். "ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" என்று திருச்சட்டத்தில் எழுதியுள்ளபடி, இயேசு காணிக்கையாக கொடுக்கப்பட்டார். இந்த விழாவின்போது, பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் இறைவன் தந்த கொடை என்பதால், அனைத்துக் குழந்தைகளும் ஆண்டவருக்குச் சொந்தமானவர்களே. எனவே, அவர்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். வழிபாட்டு முறையில் மட்டுமல்ல, வாழ்விலும் அவர்களை இறைவனின் பணிக்கு அர்ப்பணிக்கவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் தங்களைப் பராமரிக்கவேண்டும் என எதிர்பார்ப்பது நியாயம்தான்.

இருப்பினும், சமூகத்தின்மீது அக்கறையுள்ள பெற்றோர், தங்கள் பிள்ளைகள் தங்களுக்காக வாழாமல், இந்த சமூகத்துக்காக உழைப்பவர்களாக, இறைபணி ஆற்றுபவர்களாக வரவேண்டும் என்றே எண்ணவேண்டும். அன்னை மரியா அப்படித்தான் சிந்தித்தார். எண்ணற்ற புனிதர்கள், மறைசாட்சியரின் பெற்றோரும் அவ்வாறே நினைத்தனர். நாமும் அவ்வாறே எண்ணி நம் குழந்தைகளை ஆண்டவருக்கு, இந்த உலகிற்கு அர்ப்பணிப்போம்.

## உடையில் ஒழுக்கம் பேணுவோம்

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். புத்தாடை அணியும் எவரும் தமக்கு வசதியிருப்பின் தமது பழைய உடையை ஓர் ஏழைக்குக் கொடுத்து விடவும். புதிய ஆடையை அணியும் ஒருவர் பின்வரும் பிரார்த்தனையைச் செய்யவும்.

எனது வெட்கத்தை மறைத்துக்கொள்ளவும் என் வாழ்க்கையில் என்னை அலங்கரித்துக்கொள்ளவும் இந்த ஆடையை எனக்கு அளித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தாகுக என்று.

புதிய ஆடை ஒன்றை அணியும்போது எவராயினும் மேற்சொன்ன துஆவை ஓதுவாராயின் அல்லாஹ் அவரை இம்மையிலும், மறுமையிலும் தனது பாதுகாப்பின்கீழ் வைத்திருப்பார்.

அல்லாஹ் மனிதகுலத்துக்கு மாத்திரம் வழங்கிய ஓர் அருட்கொடை ஆடை, இது மற்றெல்லா ஜீவராசிகளுக்கும் மறுக்கப்பட்டிருப்பதை நாம் மனதிற் கொண்டு உடையில் ஒழுக்கம் பேணுவோம்.

எம்.சீ.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1050



### பாராட்டுக்குரியது

### இது எப்படி இருக்கு?

எல்லாப் பைக்கிலும்
பெரிசாய் இருந்தால்
சின்ன எனக்கு
நீதான்டா பெரிசு! - இது
எப்படி இருக்கு?

பாண்டியூர் பொன்.நவநீதன்.

### விஞ்ஞானத்தின் முன்னேற்றம்

சிறுவன் சிகரம் தொட
முயல்கிறான்
பெரியோரின் கூட்டறிக்கையும்
பெடியன் கின்னஸ் சாதனை
படைப்பான் என்று கூறுகிறது
எந்திரத்தின் கூச்சல்
என் காதில் இப்படி ஒலித்தது!
மனித மாமிசம் தன்னைப்
படைத்தாலும்
தானாக இயங்கி
சாதனை படைக்கப் போகுதாம்
இறைவனுக்கு மனிதன் காட்டும்
விஞ்ஞான முன்னேற்றம் போல்!

மிகிந்தலை A.பாரிஸ்

## கவிதைப் போட்டி இல 1053




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26. 02. 2014

கவிதைப் போட்டி இல. 1053 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பயம்

பாரிய உந்துருளி வரிசையின்
பக்கத்தில் காணும் சிறிய
உந்துருளியில் உந்தி உருண்டோட
விழையும் என் ஆசைக்கு
உதவுவார்களோ உதைத்து
விரட்டுவார்களோ எனப் பயந்து
பின் நிற்கும் சிறுவனின்
பயத்திற்கு பாரில் என்ன?

பீ.எஸ்.ஏ.தாஹீர், காத்தான்குடி-03.

### பீதி

சிற்றினங்களைப்
பேரினங்கள் அடித்து
நொறுக்குவது போல்
தன் சிறு வண்டியையும்
பெரு வண்டிகள் அடித்து
நொறுக்கிவிடுமோ
எனப் பீதியுடன்
காத்து நிற்கும் சிறுவன்.

அ.சந்தியாகோ, கண்டி.

### பந்தயம்

வாழ்க்கைப் பந்தயத்தில்
எதிர் நீச்சல்போட
சில்லுடைந்தாலும்
பல்லுடைந்தாலும் பரவாயில்லை
வெல்வோம் என்ற வேக்காட்டில்
ஓட்டப்பந்தயத்தில்
பயிற்சி பெறுகிறானோ
இச் சிறுவன்?

K.M.A. அஸீஸ், சாய்ந்தமருது-11

### முன்னோட்டம்

இன்றைய சிறுவர் நாளைய
தலைவர் என கேள்விப்பட்டேன்
நாளை உங்களின் இடத்திற்கு
வர விரும்பிகின்றேன்
அதற்கான ஒரு முன்னோட்டமே இது.

ஜெ.ஜெயலக்ஷன், கோண்டாவில்

### மாற்றங்கள்...

வளர்ந்து வரும் வாழ்வியல்
மாற்றங்களுக்கேற்ப
மாறிவரும் வகையான
வாகனங்களும் அதனால்
பல விபத்துக்களும்...
இதையெல்லாம்
அறியாத உனக்கும்
உன் அளவில் ஓர் வாகனமா...?

வி.தர்ஷிகா, சூராவத்தை.

### என் சேவை

கொஞ்ச நாள்தான் - இந்த
வாழ்வு என்றாலும்
கொண்டவனுடன் முடியட்டும்
உன் கரம் பிடித்து
ஊரெல்லாம் வலம் வந்தேன்
அக்கரம் வலுவிழந்தாலும் - என்
உயிர் உள்ளவரை
என்றும் என் சேவை
தொடரும்...

எஸ்.மது, களபாவோடை.

## உங்கள் பக்கம்

### மிகுதி அகதிகளை மீள்குடியேற்றுவது எப்போது?

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உன்னிச்சை, பாவற்கொடிச்சேனை போன்ற பிரதேசங்களில் இருந்து சுமார் 93 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் 1987 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர்.

அவர்கள் யுத்தம் முடிவடைந்த போதிலும் இதுவரையிலும் தங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான சூழல் ஏற்படுத்தப்படவில்லை.

எனினும் தங்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கான விருப்பத்தினை இப்பிரதேச மக்கள் நீண்ட நாட்களாக வெளிப்படுத்திவருகின்றனர்.

2011ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 12 குடும்பங்கள் வரையில் மீளக்குடியேறிய போதிலும் ஏனையவர்களைக் குடியமர்த்துவது தொடர்பில் அதிகார மட்டத்தில் போதிய கவனம் செலுத்தப்படாமையினால் எஞ்சியவர்கள் தொடர்ந்தும் காத்தான்குடிப் பிரதேசத்தில் அகதிகளாகவே வாழ்ந்துவருகின்றனர்.

இதுதொடர்பில் ஆராயும் கூட்டமொன்று அண்மையில் காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போதிலும், எதுவிதமான ஆக்கபூர்வமான முடிவுகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

எனவே, கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சொந்த மண்ணை விட்டுப் பிரிந்து முகாம்களில் வாழ்கின்ற குறித்த பிரதேச மக்களின் மீள்குடியேற்றத்தில் உரிய அமைச்சர்கள், அதிகாரிகள் தங்களது மேலான கவனத்தைச் செலுத்தி அவர்களது வாழ்வு மீண்டெழ உதவவேண்டும்.

ப.கோமளவள்ளி, மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வார்மலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




### சுவாரசியமான பக்கம்

வாசகர்கள் மத்தியில் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருக்கும் முரசே! உண்மைகளை உரக்க எடுத்துக் கூறுகின்றாய்.

அரசியல்ரீதியாக மக்கள் எவ்வாறான முடிவுகளை எடுக்கவேண்டுமென எடுத்துக்கூறுகிறாய். இன்னும் பல இன்னோரன்ன - சுவாரசியமான விடயங்களைத் தருகிறாய். முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

எஸ். கோஷிகா, கல்வியங்காடு

## வாசகர் சாலை

### தவறுகள் திருத்தப்பட வேண்டும்

வணக்கம்! சென்ற வாரம் வெளி யான மாணவர்களைப் பாதிக்கும் ஆசிரியர் இடமாற்றம் கட்டுரை இன்று சாலப் பொருத்தமானதே. ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது உரிய அதிகாரிகள் விடும் தவறுகளை அப்பட்டமாகவும், தெளிவாகவும் முரசு எடுத்துக் கூறியுள்ளது.

இதனால் மாணவர்களின் கல்வியில் ஏற்படும் தளம்பல் நிலையையும் கட்டுரை ஆசிரியர் விபரித்திருந்தார். இதனால் மாணவர் சமூகம் பாதிக்கப்படும் என்பதும் உண்மையே.

என். சர்மா, தெல்லிப்பளை.

### தித்திப்பு

தெவிட்டாத தேனமுதாம்
உன் பக்கங்கள் - அதை இன்பமாய்
பருகிட - பல்சுவை அம்சங்கள்
அரசியல் நன்னெறி கொண்டு
மக்கள் வழி நடத்துகிறாய்
வாசகர் நலன் கருதி
சூடு - சுவை- சுவாரசியம்
குன்றாமல் - இன்றுபோல்
என்று தித்தித்திடுவாய்!

என்.அரவிந்தன், கொள்ளுப்பிட்டி.

### வேண்டுகோள்...

தினமுரசின் அண்மைய கால முன்னேற்றத்தைக் கண்டு என் மனம் பூரிப்பு அடைகின்றது.

கூடுதலான அம்சங்களை முரசு சேர்த்துக் கொண்டிருக்கின்றது. ஆசிரியருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். ஆனாலும் 'க்ரைம்' வராமல் இருப்பது கவலையளிக்கிறது. கட்டுரைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

எஸ்.சாமினி, எட்டியாந்தோட்டை.

### வீறுநடை போடுவாயா?

தன்நிலை சார்ந்து மறைந்து போயுள்ள உண்மைகளை உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டிக் கொண்டிருக்கிறது முரசு. எப்போதும், வெளிச்சத்தை கைக்குள் அடக்காமல் பரந்துபட வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் தினமுரசு தனிப்பட்ட தன்மை வாய்ந்தது. அண்மைக் காலமாக முரசு வீறுநடை போட மறுக்கின்றது. 'க்ரைம்' ஏன் இடம்பெறுவதில்லை. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றங்களுக்கும் அதில் இடம்கொடுப்பாயா?

சா.காராளன், யாழ்ப்பாணம்.

# கூட்டமைப்பினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றோம்

## வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சீற்றம்

கடந்த காலத் தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்தபோதிலும் தொடர்ச்சியாக அவர்களினால் ஏமாற்றப்பட்டு வருவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். பருத்தித்துறை நகரில் அமைக்கப்பட்டுள்ள அங்காடி தொகுதியைப் பயன்படுத்துவது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியை நாடிய குறித்த வர்த்தகர்கள் மேற்கண்டவாறு தமது குமுறலை வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் கூட்டமைப்பினரின் உணர்ச்சிபூர்வமான பரப்புரைகளை நம்பி அவர்களுக்கு வாக்களித்தபோதிலும் அவர்களிடமிருந்து மக்கள் நலன் சார்ந்த எந்தவொரு வேலைத்திட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தொடர்ந்தும் சுயநலன் சார்ந்த செயற்பாடுகளினால் மக்களை அவலங்களுக்குள் தள்ளுகின்ற செயற்பாட்டினையே கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பல்வேறு மட்டங்களிலும் மக்கள் பாதிப்புக்களைச் சந்தித்துவருகின்றனர்.

## சுகாதார மாதுக்களுக்கு ஸ்கூட்டிகள்!

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தள வைத்தியசாலைக்கு 2 மில்லியன் ரூபாய்கள் பெறுதியான மருத்துவ உபகரணங்கள் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் கடமையாற்றும் 22 மருத்துவ மாதுகளுக்கு தலா 200,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்கூட்டிகள் திருகோணமலை, பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கி கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் மன்சூர் இதனைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.கருணாகரண், மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி கௌ.ஞானகுணான், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அத்தியட்சகர் அனுசியா ராஜ்மோகன், யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி பிரகாஷ் துலாதர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வருமானத்தை அதிகரிப்பதால் மாத்திரமே வறுமையை போக்க முடியும்!

### பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்

குடும்ப வருமானத்தை அதிகரித்தால் மாத்திரமே வறுமையை ஒழிக்கமுடியுமென பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிராம மட்ட அபிவிருத்தி தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "வீதிகளை அபிவிருத்தி செய்வதால் மாத்திரம் மக்களின் வறுமையை போக்கமுடியாது. குடும்ப வருமானத்தை அதிகரித்தால் மாத்திரமே வறுமையை ஒழிக்கமுடியும்.

இதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இந்த வருடத்தில் பௌதீக அபிவிருத்தியையும் வாழ்வாதார அபிவிருத்தியையும் மேற்கொள்ளவுள்ளது. இந்த நிலையில் மக்களின் தேவைகள், அவர்களுக்கான திட்டங்கள், வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள், பௌதீக அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை கேட்டறியப்படுகின்றன.

மக்களிடம் பெறும் திட்டங்களை உள்வாங்கி அவற்றைக்கொண்டு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பதுடன், தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கவேண்டும்" என்றார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி நகரசபை முதல்வர் எஸ்.எச்.அஸ்பர், பிரதி தலைவர் எம்ஐ.எம்.ஜெஸீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மீண்டும் நுரைச்சோலை அனல் மின் நிலையம்

பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காகவே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும், வர்த்தக மற்றும் நடவடிக்கை பிரிவின் பிரதி பொதுமுகாமையாளருமான செனஜித் தசநாயக்க தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும், இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார்.

மேலும் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக தற்போது 200 மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடிவதாக, எவ்வாறாயினும், தேவை ஏற்படும் பட்சத்தில் மின் உற்பத்தி நிலையத்தை செயலிழக்கச் செய்யும் எண்ணத்துடனேயே சோதனை பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சந்திரிக்கா சொல்வது உண்மையா?



"விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று பலத்த முயற்சிகளை செய்தேன். ஆனால், விடுதலைப் புலிகள் என்னை கொல்ல முயற்சித்தார்கள்" என இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பெங்களூர் வாழும் கலை பயிற்சி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மகளிர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"நான் இலங்கையின ஜனாதிபதியான பின், எல்லா சந்தர்ப்பங்களிலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவே விரும்பினேன். ஆனால் புலிகள், தம்முடன் பேச்சுவார்த்தைகளில் அரசு அதிகாரிகள் கலந்துகொள்வதை விரும்பவில்லை. எனவே சர்வதேச மத்தியஸ்தஸ்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டுமென நான் கோரினேன்.

நான் ஆரம்பித்துவைத்த வைத்தியசாலைகளில் விடுதலை புலி போராளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. தேர்தலுக்கு இரண்டு தினங்கள் முன்னதாகவும், அதன்பின்னரும் புலிகள் என்னைக் கொல்ல முயற்சித்தனர்" என அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

தற்போது யுத்தம் முடிவடைந்து, அவையெல்லாம் பழைய கதையாகி விட்டன.

இப்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு தலைவர் இரா.சம்பந்தன், கடந்த ஜனவரி 26ஆம் திகதி ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில், "இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழர்கள் தரப்பில் தவறவிட்ட வாய்ப்புகள், வீணடித்த வாய்ப்புகள் என்று இன்றைக்கு நீங்கள் எதையெல்லாம் குறிப்பிடுவீர்கள்?" என்ற கேள்விக்கு பதிலளித்தபோது, "சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சி யின் ஆரம்பக் காலத்தில் தமிழ் மக்கள் பிரச்சினையில் மிக ஆக்கபூர்வமான, முற்போக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தார். அதை நாம் பயன்படுத்தி கொண்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

இதுதொடர்பாக எனது ஆலோசனையை பிரபாகரனிடம் சொன்னேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எனது ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சந்தர்ப்பம் இழக்கப்பட்டது" என்றார்.

சந்திரிகா சொல்வது உண்மையா, பொய்யா என்பதை, சம்பந்தனிடம்தான் கேட்கவேண்டும். முன்பு புலிகள் இருந்த காலத்தில், அவர் இதுபற்றி வாய திறந்ததில்லை. ஆனால், இப்போது கேட்டால், நிச்சயம் சொல்வார்.

ஏனென்றால், அப்போது சந்திரிக்கா வழங்கிய குண்டு துளைக்காத காரிலே பயணம் செய்தவர், இப்போது அவர் எந்தப் பயமும் இல்லாமல் கருத்துக்கூறும் நபராக உள்ளரே!

## கோடிகளை வழங்கிய கொடையாளிகள்




பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் மற்றும் அவரது மனைவி பிரிஸில்லாசான் இருவரும் அதிக நன்கொடை வழங்கிய அமெரிக்கர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். இந்த இளம் தம்பதி 2013ஆம் ஆண்டு 97 கோடி அமெரிக்க டொலர்கள் சமூகப் பணிகளுக்காக நன்கொடையாக வழங்கியுள்ளனர். 2013ஆம் ஆண்டு அதிக நன்கொடை கொடுத்தவர்கள் 50பேர் பட்டியலை தி குரோனிக்கில் ஓப் பிலெந்தராபி இதழ் வெளியிட்டுள்ளது. இதில், முதலிடத்தில் ஜுக்கர்பெர்க் மற்றும் அவரது மனைவி உள்ளனர்.

முதல் 50 இடங்களைப் பிடித்தவர்கள் மொத்தம் 770 கோடி அமெரிக்க டொலர்களை நன்கொடையாக அளித்துள்ளனர். 290 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள நன்கொடையாக வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

இது முந்தைய 2 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நன்கொடையின் ஒட்டு மொத்த அளவாகும். நாட்டின் பெரும் கொடையாளியாக இருந்த சிலர் 2013ஆம் ஆண்டின் பெரும் கொடையாளிகள் பட்டியலில் முதல் 50 இடத்தில் இடம்பெறவில்லை. காரணம் முந்தைய ஆண்டு வழங்குவதாக உறுதியளித்திருந்த தொகை, 2013-ல் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதனை முந்தைய 2012-ம் ஆண்டுக்கான நன்கொடையாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டது. இதனால் அவர்கள் அதிக தொகை வழங்கியிருந்தாலும், 2013-ம் ஆண்டுக்கான கணக்கில் குறைவான தொகையே பதிவாகி இருந்தது.

மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா இருவரும் 18.13 கோடி அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர். ஆனால், 2004ஆம் ஆண்டு 330 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்குவதாக உறுதியளித்து இருந்தனர். அத்தொகையில் இது கழிக்கப்பட்டுவிட்டது.

அதிக தொகை கொண்ட முதல் 30 நன்கொர்டைகள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கபட்டுள்ளன. அதேசமயம் இத்தொகை பெரும்பாலும் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் துறைகளுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. கட்டடங்களுக்காகக் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிலர் இறப்புக்குப்பின் உயில் எழுதிவைத்து, அச்சொத்துகளும் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் 50 பெரும் கொடையாளிகள் பட்டியலில் ஜோர்ஜ் மிச்செல், 3ஆம் இடத்தில் நைக் நிறுவன தலைவர் பிலிப் நைட் மற்றும் அவரது மனைவி பெனலோப், 4ஆம் இடத்தில் நியூயோர்க் முன்னாள் மேயர் மைக்கேல் புளும்பெர்க் ஆகியோர் உள்ளனர்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## வெட்டிப் பேச்சுக்கள்

" எமது தீர்மானங்களையும், சர்வதேசத்தின் நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டாலே அரசுடன் பேச்சுவார்த்தை, எம்மை மதிக்காவிட்டால் பேச்சுக்கு இடமே இல்லை" இப்படி கூட்டமைப்பு கூறியிருக்கின்றது.

"நிபந்தனையற்று பாராளுமன்றத் தேர்வுக்குழுவில் பங்குகொண்டு கூட்டமைப்பு இந்திய மாநிலங்களுக்கு ஒப்பான அதிகாரம் பற்றியோ, வேறு அதிகாரங்கள் பற்றியோ பேசவேண்டும்" இப்படி அரசாங்கம் கூறியிருக்கின்றது.

"கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும், வடக்கு மாகாண சபையை கலைக்கவேண்டும்" இப்படி சிங்கள கடும்போக்குவாதிகள் உறுமிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு தீர்வாக ஆனந்த சங்கரி அன்று கோரிய இந்திய மாநில மாதிரியையே இன்று சம்மந்தரும் கோருகின்றார். கூட்டமைப்பு தனி நாட்டைக் கோரவில்லை. ஆகவே இதையாவது இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு வழங்கி, தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்துக்கான சமிக்ஞையை ஏற்படுத்தவும், சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முன்வர வேண்டும் என்று அரசுக்கு தற்போதைய நெருக்கடியிலிருந்து தப்பு வதற்கு தேசிய தமிழ் ஊடகங்கள் அறிவுரை கூறிவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதைக் கொடுத்து, தமிழ் மக்களுக்கு நல்லிணக்கத்தைக் காட்டினால் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையையோ, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களையும் சர்வதேசம் குறிப்பாக அமெரிக்கா தூக்கிப்பிடிக்காது. இலங்கைக்கு செங்கம்பள வரவேற்பளித்து பொது மன்னிப்பு வழங்கிவிடும் என்று எந்த சர்வதேசமும் இதுவரை கூறியதில்லை. அப்படி நடந்துவிடும் என்று தமிழ் ஊடகங்களும், கூட்டமைப்பும் கூறுவது எந்த அடிப்படையிலிருந்து என்பது எவருக்கும் தெரியாது.

இதுதான் இன்று தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான அரங்கில் உருட்டப்பட்டுக் கொண்டிருக்கும் தாயக் கட்டை. இந்த சலசப்பையும், ஊகிப்புக் களையும் தன்மானமுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் நம்பவேண்டும். நம்பாவிட்டால் உங்களுக்கு தேசிய உணர்வு இல்லை.

அன்று இந்தியா, நேற்று அமெரிக்கா, பிரிட்டன், இன்று ஐ.நா சபை, நாளை அந்தமான் தீவுகளில் ஒரு தீவில் உள்ள விதானை ஈழத்தமிழரைப் பற்றி பொழுபோக்காக ஏதாவது கூறினால் நமக்கு காட்டப்படுவது அந்தமான்தீவு. இன்று சர்வதேசத்தைவிட்டால் தமிழ் மக்களுக்கு தீர்வு கூட்டமைப்பின் கூடாரத்துக்குள்ளும் இல்லை, முதலமைச்சரின் சபைக்குள்ளும் இல்லை என்று அவர்கள் கையை விரித்துவிட்டார்கள். அன்று பிரபாகரனை நம்மவர்கள், "அண்ண ஆமியை உள்ளவிட்டு அடிப்பார் என்று கூறியது போல் இன்று சம்மந்தர் சர்வதேசத்திடம் இழுத்துக் கொண்டுபோய் அரசுக்கு உதைப்பார்" என்று வெட்கமில்லாமல் கதை அளந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவுக்கு மாநிலமும், இலங்கைக்கு மாகாணமும் என்றாலும் மத்திய அரசின் ஆளுனர் இருப்பார். மாகாணத்தை நடத்தத் தெரியாதவை மாநிலத்தை கேக்கினமாம். "கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன கதைதான்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



கிளிநொச்சியில்

# பல்கலை வளாகம்
# அமைச்சர் டக்ளஸ் சாதனை

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் உருவாக்கத்தினூடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வடபகுதி மக்களுக்கு ஒரு நிலையான செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளார் என வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த புதன் பெப்ரவரி 05ஆம் திகதி கிளிநொச்சி அறிவியல் நகரில் அமையப் பெற்றுள்ள விவசாய பொறியியல் பீடங்களுக்கான கட்டடத்தொகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகளை அமைச்சர் பார்வையிட்ட பின் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறியிருக்கின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கை மத்திய அரசுடன் கொண்டிருக்கும் அணுகுமுறையூடாகவே இதையும் சாதிக்கமுடிந்தது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

"இதையும் சாதிக்க முடிந்தது" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பதே ஏற்கெனவே, அபிவிருத்தி, வேலைவாய்ப்புகள், உட்கட்டுமானப் பணிகள் என்பவற்றில் சாதித்துக் காட்டியிருப்பதையும், தீர்வுத்திட்டம் உட்பட தமிழ் மக்களுக்கான தேவைகளை இணக்க அரசியல் ஊடாக பெற்றுக்கொள்ள முடியுமென்றும் கூறுவதாகவே உணர்த்துகின்றது.

சிங்கள அரசும், தற்போதைய ஆளுனரும் வடக்கு மாகாண சபையை செம்மையாக இயங்க விடுகின்றார்களில்லை என்றும் தடைகளைப் போடுகின்றார்கள் என்றும், வட் மாகாணத்திலுள்ள அரச அதிகாரிகள் ஒத்துழைப்பாக பணியாற்றுகின்றார்களில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் கடந்த நான்கு மாதமாக அழுதுகொண்டிருக்கையில், அதே சிங்கள அரசையும், அதே ஆளுநரையும், அரச அதிகாரிகளையும் பக்குவமாகவும், அனுபவ முதிர்ச்சியுடனும் அணுகி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கே உரிய பாணியில் வேலைகளை முன் நகர்த்தி சாதிக்கின்றார்.

இவற்றுக்காக யாருக்கும் அடிமையாக இருப்பதுமில்லை, சலுகையாகப் பெறுவதுமில்லை. சாணக்கியமாக சாத்தியமான பாதையில் எமது வெற்றிகளுக்காக உழைப்பதுதான் இணக்க அரசியலுக்கான எனது வரைவிலக்கணமாகும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சர் இவ்வாறு கூறினாலும், முதலமைச்சரும், கூட்டமைப்பினரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை அமைச்சர் அரசின் பகையாளியானால் அமைச்சர் கூறும் இணக்க அரசியலுக்கு புதிதாய் ஒரு தெளிவுரை கொடுத்து அதற்குள் கூட்டமைப்பினரும், முதலமைச்சரும் ஹீரோக்களாகி விடுவார்கள். தமிழ் ஊடகங்களும் அப்படியானதொரு சூழலில் இணக்க அரசியலுக்குள் பல தந்திரோபாயங்கள் இருப்பதைக் கண்டுபிடித்து முன்னுரிமை கொடுப்பார்கள்.

சுருக்கமாகக் கூறினால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்தால் அது சும்மா இணக்க அரசியல், ஒன்றுமே செய்யாமல் வெறும் அறிக்கையும், அழுகையுமாக இருந்தால் அது தன்மானத் தமிழ்த் தேசியத்தின் வீரியமான அரசியல். இப்படித்தான் தமிழர் ஊடகங்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

யார் எதைக் கூறினாலும், எத்தனை விமர்சனங்களைச் செய்தாலும் அமைச்சரின் சாதனைகளை தமிழ் மக்களின் வரலாற்றிலிருந்து அழிக்கமுடியாது என்பதை கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தையும், விவசாய பீடத்தையும் நிறுவுவதில் வரலாறுகள் கடந்த பாடத்தையும் அதை சாதித்த அமைச்சரின் சாதனையையும் விரிவாக முன்வைக்கும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் விரிவான தகவல்களை படிக்கும்போது புரிந்து கொள்ள முடியும்.

பேராசிரியரின் உரையின் தொடர்ச்சியைப் பார்க்க லாம். 1980ஆம் ஆண்டு கிளிநொச்சியிலே விவசாய பீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் பேராசிரியர் துரைராஜா அவர்களின் காலத்தில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி 1990ஆம் ஆண்டு விவசாய பீடத்தை கிளிநொச்சியிலே ஆரம்பித்தோம். ஆனால், முதன்முதலாக நியமிக்கப்பட்ட பீடாதிபதி அப்பீடத்தை பொறுபேற்கும் முன்னதாகவே மரணித்துவிட்டார். பின்னர் அடுத்ததாக நியமிக்கப்பட்ட பீடாதிபதி பீடத்தை பொறுப்பேற்றிருந்த நிலையில் மரணமாகிவிட்டார். அதன் பின்னரும் நாம் முயற்சி யைக் கைவிடவில்லை. தொடர்ந்து ஐந்து வருடங்கள் இப்பீடத்தினை இயக்கி வந்தோம். ஆனால், அன்று விரிவுரையாளர்களாக கடமையாற்றிய ஐந்து பேரும் விவசாயத்துறையை சாராத விரிவுரையாளர்களாக இருந்த போதும் விரிவுரைகளை சிறப்பாக மேற்கொண்டு வந்தார்கள் எனக் குறிப்பிட்ட அவர்,

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்டுவந்த நிலையில் 1996ஆம் ஆண்டு கிளிநொச்சியில் ஏற்பட்ட யுத்தத்துடன் விவசாய பீடத்தின் செயற்பாடுகள் யாவும் முடங்கிப்போனது. அதன்பின்னர் வசந்தி அரசரத்தினம் உள்ளிட்ட சிலர் மருத்துவ பீடத்தில் முக்கிய பதவி நிலையில் இருந்ததனால் அவர்களின் உதவியுடன் விவசாய பீடத்தை மருத்துவ பீடத்தின் ஒரு பகுதியில் வைத்து இயக்கிவந்தோம். பின் அயல் காணியில் மூன்று சிறிய கட்டடங்களை அமைத்து விவசாய பீடத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோம். ஆனால், இன்று இப்பீடத்திற்கு மிகப்பெரும் வளாகம் கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. பீடாதிபதி மிகுந்தன் மற்றும் சிவமதி ஆகியோர் மிகுந்த ஆவலுடன் இப்பீடங்களை வளப்படுத்தி வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும் 1978ஆம் ஆண்டு கிளிநொச்சியில் விவசாய பீடத்தினை அமைக்கவேண்டும் என்றநோக்கில் சிவப்பிரகாசப் பிள்ளை, வைத்தியர் குமார் பேபி ஆகியோர் உட்பட்ட குழுவினர் கிளிநொச்சிக்கு வருகை தந்து காணிகளையும் பார்வையிட்டதோடு அதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார்கள். இதேவேளை, 1978ஆம் ஆண்டிலிருந்தே பொறியியல் பீடத்தையும் இங்கு கொண்டுவருவதற்காக பேராசிரியர் நித்தியானந்தன் அவர்களும் பின்னர் பேராசிரியர் துரைராஜா அவர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். ஆனால், அம்முயற்சி கைகூடவில்லை எனக் குறிப்பிட்ட பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை.

ஆயினும், 2002ஆம் ஆண்டு நான் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தான் கடமையாற்றிய காலப்பகுதியில் இப்பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் இயக்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றபோதும் அதை ஆரம்பிப்பது தொடர்பான ஸ்திரமற்ற நிலைப்பாடுகள் காணப்பட்டதனால் அந்த சந்தர்ப்பமும் கைநழுவிப்போனதாக தெரிவித்தார். ஆனால், இன்று இவ்விரு பீடங்களையும் ஆரம்பிப்பதற்கான சூழல் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினத்தின் காலத்தில் கைகூடியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் வடபகுதி மக்களுக்காக ஒரு நிலையான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். அதற்கு அவர் நிச்சயமாக அவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்பதாக பல தடவைகள் கூறிவந்தார். அதாவது முன்னாள் அமைச்சர் இராசதுரை அவர்கள் விபுலானந்தர் அக்கடமியை அமைத்தார். அது இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றது. அவ்வாறான நிலையான செயற்திட்டமே எமது மக்களுக்கு நிலையான உயர்வைத் தரும் எனவும் நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். அதற்கமைவாக இவ்வளாகத்தின் உருவாக்கத்தினூடாக அவர் அச்செயற்திட்டத்தினை நடைமுறைப் படுத்தியிருக்கின்றார் என்றே கருத முடியும் எனத் தெரிவித்த அவர்,

இந்த பீடங்களுக்கான காணியைப் பெறுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மிக அதிகமாக முயற்சித்துள்ளார். கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தின் திறப்புவிழாவின்போது பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும் என்றநோக்கில் தெரிவு செய்யப்பட்ட இக்காணி தொடர்ந்தும் அதே நோக்கிற்காக பயன்படுத்தவேண்டும் என்ற சிந்தனையுடன் அவர் ஜனாதிபதியிடம் இக்காணியைப் பெறுவதற்கான கோரிக்கையை விடுத்தார், அமைச்சரின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவிக்கமுடியாத ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையிலும் ஜனாதிபதி அமைச்சரின்மீது கொண்டிருக்கும் பற்றின் பிரகாரமும் அக்காணியை பெற்றுத்தருவதற்கு மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஒப்புதலளித்தார் என சுட்டிக் காட்டினார்.

பொதுவாக இக்காணியைப் பெறுவதென்பதில் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் மிக நேர்த்தியான அரசியல் அணுகு முறையினூடாக விலைமதிப்பற்ற சொத்தை இன்று யாழ்.ப்ல் கலைக்கழகம் பெற்றிருக்கின்றது எனவும் குறிப்பிட்ட பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அமைச்சர் தொடர்ந்தும் இப்பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டுக்கு பங்காற்றத் த்யாராகவே உள்ளார். அவ்வாறான பரந்த மனப்பான்மை கொண்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். அவர் இவ்விரு பீடங்களும் இங்கு இயங்குகின்ற நிலையில் இப்பகுதியை யா[illegible] பல்கலைக்கழகத்தின் வளாகமாக மாற்றுவதற்கும் முயற்சித்து வருகின்றார். மேலும் இங்கு புதிய பீடங்களையும் துறைகளையும் இயக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக விளையாட்டுத் துறையை இங்கு இயக்குவதற்கு சாத்தியமான சூழல் நிலவுவதனால் அதனை பொறுப்பேற்பதற்கு விவசாய பீடமும் தயாராக இருக்கின்றது. எனவே அத்துறை நிச்சயமாக இங்கு ஆரம்பமாகும். எனவும் தெரிவித்தார்

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் மேம்பாட்டில் மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் [illegible]த் தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றனர். எனவே கிளிநொச்சி ம்ாவட்டம் விரைவான மேம்பாட்டை ஷட்டும் என்பதில் ஐயமில்லை. கிளிநொச்சி அவ்வாறான மேம்பாட்டை எட்ட வேண்டியதும் அவசியமானது. ஏனெனில், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றதாகவே யாழ். மாவட்டம் காணப்படுகின்றது. யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்பு யாழ். மாவட்டத்தில் மிக அதிகளவான சனத்தொகை குறைவடைந்துள்ளது. இல்லாதுவிடின் அங்கு சுமார் 11 இலட்சம் வரையான மக்கள் வாழவேண்டிய நிலை உருவாகி இருக்கும். அவ்வாறு இருப்பின் அங்கு இன்றிருப்பதைவிடவும் நீர்ப் பிரச்சினையும் மற்றும் தொழில் வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் மக்கள் முகங்கொடுக்க நேரிட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டதோடு யாழ். மாவட்ட மக்களும் இப்பகுதிகளில் வந்து குடியேறுவதற்கான காணிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு அனைவரும் துணை புரியவேண்டும் எனவும் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# தொடரும் ஏமாற்றங்கள்

அவள் முன்னே செதுக்கப் பட்டிருந்தது. கடினம் நிறைந்த பயிற்சிக்களம் அது தந்த அனுபவங்கள் அடிக்கடி நினைவுகளைக் கிழறும் எண்ணங்களால் மனசிற்குள் காயமாய் பதியப்பட்ட சம்பவங்கள் யாவையும் நினைத்து நினைத்துக் கலவரப்படும் துயரங்கள் யாவையும் மறந்து அங்கே அன்பினி.

எல்லா வகையான சந்தோசங்களையும் பிரமாண்டம் நிறைந்த கனவுகளையும் பறித்துக் கொண்டுபோகவும் ஒரு நாள் உதிக்குமென்பதை அவர்கள் அறியாத ஒருநாள் அந்தக் கரிய நாள் விடிந்தது. சாவு தங்களைக் காவுகொள்ளுமென்ற கனவுகளை அவர்கள் காணவில்லை. இரத்தத்தால் அந்த வளாகம் சிவக்குமென்று சிந்தித்திருக்கவில்லை. தங்கள் உறவுகள் தங்களை இழந்து துடிப்பார்கள் என்று எதையுமே அறிந்திராத அந்த நாள் விடிந்து கிபீர் விமானங்கள் செஞ்சோலை' வளாகத்தினுள் குண்டுகளை இறக்கிவிட்டுப் பறந்துபோனது.

எத்தனையோ குருத்துக்களின் கனவும் வாழ்வு பற்றிய விருப்பங்களும் சிதைந்துபோனது. கனவு-களை வளர்த்துக் கனவுகள் நனவாகுமென்ற முனைப்போடு வாழ்ந்த அவர்களது உலகத்தை துயரம் தின்று கொண்டது. சில மணித்துளிகளில் அந்தக் கோரம் நிறைந்த துயரம் நிகழ்ந்து முடிந்தது.

இரத்தச் சேற்றில் சிறுமிகள் தத்தளிக்க குண்டுப் பறவைகள் குண்டுகளைக் கொட்டிப்போனதன் முடிவாக ஓகஸ்ட் 14 ம்நாள் 2006 உலகமே அதிர்ந்தது. 52மாணவிகளின் உயிர்களை இழந்துபோனது தேசம். உயிர்களின் இழப்போடு துயரங்கள் முடியாத மிச்சம் கால்களை கைகளை உடலில் பல பாகங்களை பலர் இழந்து போயினர். யுத்தத்தின் ஓர்மம் நிறைந்த கைகளால் அன்றைய நாளைக் காலம் பதிவுசெய்து கொண்டது.

ஊடகங்களில் அவர்களும் அந்த நாளும் சோக இசையோடு சொல்லியெழுத முடியாத கனவு-களோடு சிதைந்துபோன சிறுமிகளை நினைவு கூர்ந்துகொண்டிருந்தது. பத்திரிகைகளில் அவர்கள் முகப்புச் செய்திகள் ஆகினர். அவர்களை நினைத்து இரங்கல்களும் இலக்கியப் பற்றாளர்களால் அவர்கள் கவிதைகளாக கதைகளாக நினைவுகளாகப் பதியப் பட்டனர். அந்தத் துயர் நிறைந்த நாளை எவராலும் மறக்க முடியாத வடுவை அந்த நாள் தந்துபோனது.

அந்த நாள் அன்பினிக்கும் கரியநாளாய் அவளது கனவுகளைச் சிதைத்துபோனது. இரத்தச்சேற்றில் அவளும் கிடந்தாள். அசைந்து எழுந்து ஓட எத்தனித்தாள். இயலவில்லை அவளைப் பிடித்துக் கட்டி வைத்தாற்போல அசைய முடியவில்லை. கால்களை ஊன்றி நிமிர்ந்துவிட எத்தனித்தாள். எதையுமே செய்ய முடியவில்லை. முகமெங்கும் இரத்தமாயிருப்பதைக் கைகளால் தொட்டுப்பார்த்துத் தெரிந்துகொண்டாள். அங்கங்கே அழுகையும் முனகலும் கேட்டுக்கொண்டிருந்தது. அவளது ஞாபகங்களிலிருந்து எல்லா ஒலிகளும் தூரமாகிக் கொண்டிருந்தது.

ஆழம் நிறைந்த வெளிகள் ஊடாகவும் அவலம் நிறைந்த தெருக்கள் ஊடாகவும் ஏதோவொரு பாரம் அவளது சந்தோசங்களையும் அவள்போன்ற சிறுமி களின் உயிர்களையும் பறித்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தது. யமனின் கால்கள் ஒவ்வொருவராய் மிதித்துக்கொண்டு போகின்றதுபோல நினைவுகள் தொலைந்து கொண்டிருந்தது. அன்பினியின் அழகை மறைத்து அவள் குரல் அடங்கிப்போக எங்கோ அவள் இழுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தாள்.

கண்கள் விழித்து நினைவுகளை விறாண்டினாள். ஒவ்வொன்றாய் நிகழ்வுகளைத் தோண்டித் தேட-னாள் ஞாபகங்களை. தான் இருக்கும் இடம் தன்னருகில் இருக்கும் மனிதர்கள் யாவரையும் ஞாபகத்திற்குள் கொண்டுவந்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் அவள் கண்ணுக்குள் காட்சிகள் இரத்தமாய் வழியத்தொடங்கியது. தன்கால்களைத் தேடினாள். முழங்கால் வரையும் சுற்றப்பட்டிருந்த துணிகளுக்குக் கீழ் எதுவுமில்லை. என்ரை கால்?

அவள் தனது கால்களைத் தேடிக் கத்தியழுதாள்.

தலையை நிமிர்த்திக் கைகளை எடுத்துக் கன்னங்களைத் தொட்டுப்பார்த்தாள். சுற்றப் பட்ட வெள்ளைத் துணிக்குள்ளால் இரத்தம் கசிந்தது. நம்பிக்கைகள் அறுந்து நொருங்கியது. எத்தனையோ பேர் வந்தார்கள், சுகம் விசாரித்தார் கள் வார்த்தைகளால் நம்பிக்கையை விதைத் தார்கள். எதையுமே கேட்கும் நிலையில் அவள் இல்லை. எல்லோர் மீதும் எரிந்து விழுந்தாள்.

அசைய, எழுந்து இயங்க எல்லாவற்றிற்கும் அவளுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. இப்போதைய அவளது ஏக்கமெல்லாம் எப்படி நடப்பது? எப்படிச் சுயமாகத் தனக்கான எல்லாவற்றையும் கவனிப்பது? அவளது சுதந்திரத்துக்கான பலமாயிருந்த கால்கள் பறிக்கப்பட்டதன் துயரம்தான் அவளை நித்திரை கொள்ளவிடவில்லை. இரவுகளில் அவள் உறங்க தூக்க மாத்திரைகளும் நோவை மறைக்கும் மயக்க மருந்துகளுமே அவளை இயக்கிக் கொண்டிருந்தன. காலிழந்தவர்கள் பலரைக் கண்டிருக்கிறாள். அவர்களுடன் பணியாற்றியிருக்கிறாள். அவர்களுக்காகவும் பணியாற்றியிருக்கிறாள். ஆனால் தனது கால்களை இழந்த போதுதான் காலின் அவசியத்தை அவள் அதிகம் உணர்ந்துகொண்டாள்.

கனவுகள் போலப் பொழுதுகள் ஒவ்வொரு நாளும் ஓடியோடிப் போய்க்கொண்டிருந்தது. காயங்கள் ஆறத்தொடங்கியது. அடுத்த கட்டம் அவள் மருத்துவமனையை விட்டு வெளியில் செல்லும் நேரமது.

மருத்துவமனையிலிருந்து விடுதலையாகி ஊனமுற்றோர்களைத் தாங்கி வைத்திருந்த நவம் அறிவுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டாள். அவளது தேவைகள் யாவற்றுக்கும் யாராவது ஒருவர் வந்து உதவும்வரை எல்லாவற்றிற்கும் காவலிருக்க நேர்ந்தது. சக்கர நாற்காலிக்குள் அவளது இயக்கம் ஒடுங்கிப்போனது.

**அந்த** நேரங்களில் எல்லாம் அந்த அக்காதான் அவளை ஆறுதல்படுத்தித் தேற்றித் தெளியவைத்தாள்.

அன்பினியை மக்களுக்குள் இறங்கிப் பணி யாற்ற அந்த அக்கா அவளுக்கான அனுமதியைக் கொடுத்தாள். அன்பினி பெண்களின் பிரச்சினைகள் தேவைகள் போன்ற விடயங்களைச் சேகரித்து வரத்தொடங்கினாள். அவற்றைத் தனது எழுத்தால் மெருகிட்டு சுதந்திரப்பறவைகளுக்கு இதர வெளியீடுகளுக்கெல்லாம் கொடுத்தாள். தன்னால் இயன்ற மாற்றங்களை தமிழ்ப் பெண் களுக்குள் செய்யும் முனைப்போடு பெண்களோடு இணைந்து சமூகக்களத்தில் இறங்கினாள்.

அதன் ஒரு கட்டமாக 2006ஆவணி செஞ் சோலை வளாகத்தில் நடைபெற்ற பயிற்சி நெறியில் கலந்துகொண்டு அங்கே கலந்து கொண்டிருந்த பிள்ளைகளுடன் அவளும் ஒருத்தியானாள். சிரிப்பாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்திருந்தது வளாகம். அவள் வயதிலும் அவளில் இளையவர்களும் அங்கே கலந்து கொண்டனர்.

அங்கிருந்து பல புதிய தோழிகளைச் சேர்த்துக்கொண்டாள். புதியதோர் உலகம் அங்கே

(ஏமாற்றங்கள் தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 100

மணியம்

**இந்த** விடயத்தைச் சொல்லும்போது இன்னொரு விடயமும் எனக்கு ஞாபகம் வருகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதில் பட்டப்படிப்பை மேற்கொண்ட முதலாவது தொகுதி மாணவர்கள் சிலரை இன்றும் ஞாபகத்தில் வைத் துள்ளேன். அவர்களில் ஒருவர் மு.திருநாவுக்கரசு. இவர் தனது பட்டப்படிப்பின் முடிவில் சமர்ப் பித்த ஆய்வுக் கட்டுரை 'வடக்கில் (அல்லது யாழ்.குடாநாட்டில் என்று ஞாபகம்) இடதுசாரி இயக்கத்தின் தேற்றம்' என்ப தாகும். அதற்கான தகவல்கள் திரட்டுவதற்காக அவர் எமது மார்க்கிச - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத் துக்கு வந்தபோது அவருடன் பரிச்சயம் ஏற்பட்டது.

அன்றுமுதல் என்னுடன் நட்புடனும், மிகுந்த மரியாதை யுடனும் பழகிவந்த ஒருவர் அவர். பின்னர் அவர் தனி யாகவும், 'ஈழநாதம்' ஆசிரியர் ஜெயராயுடனும் சேர்ந்து பல அரசியல் ஆய்வுக் கட்டுரை களையும் எழுதி வெளியிட்டார். மு.திருநாவுக்கரசு தன்னை ஒரு பொதுவான ஆள் மாதிரி காட்டிக்கொண்டு பல இயக்கத்த வர்களுடனும் பழகிவந்தாலும், புலிகள் மீதுதான் அவர் அதிக அபிமானம் வைத்திருந்தார். யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருந்த எனது கடைக்கு அவர் அடிக்கடி வந்து அரசியல் விடயங்களைக் கதைப்பார். அடிப்படையில் மு.திருநாவுக்கரசு தமிழ் தேசிய வாதியாக இருந்தாலும், மார்க்சியத்தை ஏற்பவராகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் தன்னைக் காட்டிக்கொள்வார். ஆனால் பிற்காலத்தில் அன்ரன் பாலசிங்கத்துக்கு அடுத்ததாக புலிகளின் அரசியல் ஆலோசகர் போலவும் அவர் செயற்பட்டார்.

மு.திருநாவுக்கரசுவின் 'பிரசித்த பெற்ற' சில கருத்துக்களை நான் இங்கு குறிப்பிடுவது அவசியம். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அவர்சொன்ன ஆலோசனை இந்தியா, இலங்கை உட்பட தென்னாசியாவிலுள்ள அத்தனை நாடுகளும் ஒரே நாடாக இணைந்து தென்னாசிய சம்மெளனம்' (South Asian Federation) என்ற பெயரில் இயங்க வேண்டும் என்பதாகும்!

ரெலோ இயக்கத்தை புலிகள் தடைசெய்யப் போகிறார்கள் என்ற விடயம் முன்கூட்டியே மு.திருநாவுக்கரசு போன்றவர் களுக்குத் தெரியும். அதன் காரண மாக என் போன்றவர்களுக்கும் தெரியவந்தது. ரெலோ இயக்கத் தைத் தடை செய்வதற்கு சில நாட்கள் முன்னதாக புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் எனது கடைக்கு அருகாமையில் வந்து திருநாவுக்கரசுவைச் சந்தித்தார். பின்னர் இருவருமாக பல்கலைக் கழகத்துக்குள் சென்று எனது கடைக்கு நேரே உள்ள மலைவேம்பு மரத்தினடியில் அமைந்திருந்த சீமெந்து இருக்கையில் அமர்ந்து நீண்டநேரம் சம்பாசித்தார்கள்.

புலி முக்கியஸ்தர் போன பின்பு என்னிடம் வந்த மு.திருநாவுக்கரசு, புலிகள் ரெலோவைத் தடைசெய்யப் போவதாகவும், அதுபற்றி தனது அபிப்பிராயத்தைக் கேட்கவே அந்த புலி முக்கியஸ்தர் வந்த தாகவும் சொன்னார். அதற்கு திருநாவுக்கரசு சொன்ன பதிலைக் கேட்க நான் ஆவலாக இருந்தேன். ஏனெனில் மற்றைய இயக்கங்களைத் தடை செய்வது ஜனநாயக விரோதம் என திருநாவுக்கரசு அந்தப் புலி முக்கியஸ்தருக்கு எடுத்துரைத் திருப்பார் என நான் எதிர்பார்த் தேன். ஆனால் திருநாவுக்கரசு புலி முக்கியஸ்தருக்குச் சொன்ன ஆலோசனை, ரெலோவைத் தடைசெய்வது பிரச்சினை இல்லை. ஆனால் அதை பொது மக்கள் ஏற்கக்கூடிய விதத்தில், அவர்களுக்குத் தகுந்த விளக் கத்தை கொடுக்கவேண்டும் என்பதாகும்!!

புலிகள் 1995 ஒக்ரோபரில் 2 மணித்தியால இடைவெளியில் யாழ்ப்பாண மக்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். அந்த நேரத்தில் யாழ்.பல்கலைக்கழ மருத்துவ பீடத்திலிருந்த முக்கிய மான உபகரணங்கள், மருந்துகள், யாழ்.போதனா வைத்தியசாலையில் லிருந்த மருந்துகள் - உபகரணங் கள், தனிப்பட்ட வர்த்தக நிறுவனங் களில் இருந்த நானாவிதமான பொருட்கள் என எல்லாவற்றையும் லொறி லொறியாக வன்னிக்குக் கொண்டுசென்றார்கள். அந்த நேரத்தில் மு.திருநாவுக்கரசு ஓர் அபூர்வமான ஆலோசனையை புலிகளிடம் முன்வைத்ததாக அறிந்தேன். அதாவது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தையே வன்னிக்குக்கொண்டு சென்று தலைமறைவாக (Underground) செயற்பட வைப்பதற்கு புலிகளுக்கு ஆலோசனை வழங்கினாராம்!!! (யாழ்.பல்கலைக்கழகத்தில் குறைந்தபட்சம் ஓர் உதவி விரிவுரையாளராகத்தன்னும் வருவதற்கு மு.திருநாவுக்கரசு எடுத்த முயற்சிகள் பலனளிக்காத தால், ஒருவித விரக்தியில் அவர் இருந்தார். வன்னிக்கு புலிகள் பல்கலைக்கழகத்தைக் கொண்டு போயிருந்தால், புலிகள் திருநாவுக்கரசுவை சிலவேளை-களில் அதன் உபவேந்தராகவே நியமித்திருக்கவும் கூடும்!)

நான் இங்கு சொல்லவந்த மிக முக்கியமான விடயம் என்ன வென்றால், 1990 ஒக்டோபரில் புலிகள் வடக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை உடுத்த துணியுடன் சில மணித்தியால அவகாசத்தில் விரட்டி அடித்தார்கள். அதற்கு சில நாட்கள் முன்னதாக ஒருநாள் மு.திருநாவுக்கரசு என்னிடம் வந்து முஸ்லீம்களின் போக்கு சரியில்லை என்றும், அவர்கள் இப்படியே போனால் அவர்களை வடக்கிலிருந்து வெளியேற்றும் சூழ்நிலை ஏற்படலாம் என்றும் சொன்னார்.

அவரது கருத்தை நான் அப்பொழுது அவ்வளவு பாரதூரமாக எடுக்கவில்லை. ஆனால் சில நாட்களில் அவர் சொன்னது போலவே, புலிகள் முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து விரட்டி அடிக்கிறார்கள்.

இதை நான் இங்கு ஏன் சொல்கிறேன் என்றால், புலிகள் தமது இயக்கத்தில் உள்ளவர்கள் சொல்கிறதைத்தான் கேட்டு நடப்பது வழமை என்றாலும், இயக்கத்துக்கு வெளியே இருந்த தமக்கு மிகவும் நெருக்கமான மு.திருநாவுக்கரசு, சிதம்பரநாதன் போன்றவர்களின் ஆலோசனை களையும் அவ்வப்போது கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே.

மு.திருநாவுக்கரசு 1995 இடப் பெயர்வின் பின்னர் வன்னிக்குச் சென்று புலிகளின் தீவிரமான ஒரு பிரச்சாரகராக மாறிச் செயற் பட்டார். 2009இல் புலிகள் முற்று முழுதாக அழிக்கப்பட்ட பின்னர் இராணுவத்திடம் சரணடைந்து, இடம்பெயர்ந்த மக்களுக்கென அமைக்கப்பட்ட முகாம்களில் வந்து தங்கியவர்களில் அவரும் ஒருவர். "மடியிலை கனம் இருப் பவனுக்குத்தான் வழியிலை பயம் இருக்கும்" என்பதுபோல, தனது புலித் தொடர்புகள் சம்பந்தமாக பயத்துடன் இருந்த மு.திரு நாவுக்கரசு, பின்னர் சில தொடர்புகளைப் பயன்படுத்தி மன்னார் ஊடாக வள்ளத்தில் இந்தியாவுக்குத் தப்பிச்சென்று, இப்பொழுது அங்கு 'அஞ்ஞாத வாசம்' செய்கிறார்.

எனது நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுவதுபோல, இவர் கள் எல்லோரும் 'தண்ணீர் வற்றின குளத்து தாமரைக் கிழங்குகள்'. எப்பொழுது மீண்டும் (புலி) மழை பொழிகிறதோ, அப்பொழுது கிசுகிசுவென முளைப்பதற்குத் தயாராக உறங்கு நிலையில் இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைக் கண்டு அஞ்சிய புலிகளும், இதர தமிழ் தேசிய வெறியர்களும்!

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 1990களின் முற் கூறில் இருந்த நிலைமை பற்றி காந்தி அடிக்கடி விசாரிப் பதற்கு ஒரு காரணம் இருந்தது. நான் அப்பல்கலைக்கழகத்துக்கு முன்னால் ஒரு புத்தகக் கடையை நடாத்தி வந்ததினால் மட்டும், அவன் அங்குள்ள சூழ்நிலைகள் பற்றி விசாரிக்கவில்லை.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 89

பா.ராகவன்

ஹிட்லர் ஆட்சியில் முதல் ஐந்தாண்டுகளில் இந்தச் சித்திர வதைக் கூடங்களில் சுமார் எண்ணூறு யூதர்களும் ஆயிரத்து நானூறு கம்யூனிஸ்டுகளும் கொல்லப் பட்டார்கள் என்று ஒரு கணக்கு இருக்கிறது.

ஆனால், 1938ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் ஆஸ்திரியாவை அபகரித்துக்கொண்ட பிறகு ஹிட்லரின் அதிகார எல்லைக்குட்பட்ட பிராந்தியத்தில் வசிக்கும் யூதர்களின் எண்ணிக்கை குப்பென்று ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரமாக உயர்ந்துவிடவே, இன்னும் ஏராளமான சித்திரவதைக்கூடங்களை எழுப்பி, இன்னும் ஆயிரக்கணக்கில் யூதர்களைக் கைது செய்யவேண்டிய 'அவசியம்' நாஜிகளுக்கு உருவாகி விட்டது.

ஹிட்லரின் ஆஸ்திரியப் படை எடுப்பு நடந்துமுடிந்த இருபதாவது நாளில் மட்டும் ஆஸ்திரியாவில் சுமார் ஐநூறு யூதர்கள் கொல்லப் பட்டார்கள்.

ஒரே நாளில் நடந்த இச்சம்பவம் ஒட்டுமொத்த யூத குலத்தையும் குலைநடுங்கச் செய்துவிட்டது. யூத குலத்தை மட்டுமல்ல. பல்வேறு உலக நாடுகளும் ஹிட்லரைப் பார்த்து பயப்படத் தொடங்கியதன் ஆதாரக் காரணம் இதுதான்.

அவரது நாடு பிடிக்கும் வேட்கையைக் காட்டிலும் இந்த யூத வெறுப்பு மிகத் தீவிரமாக இருப்பதைக்கண்டு வெறுப்புற்ற முதல் தேசம் பிரிட்டன்.

பரிதாபத்தின் பேரில் பிரிட்டன் சுமார் நாற்பதாயிரம் ஜேர்மனிய யூதர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. மேலும் சுமார் இருபதாயிரம் ஆஸ்திரிய யூதர்களும் பிரிட்டனுக்கு அனுப்பிய ஜேர்மனிய பெற்றோர்களைப் பிறகு தனியே நாஜிகள் 'கவனித்து' அவர்களுக்கு மரண தண்டனை அளித்து விட்டார்கள்!

ஆரம்பத்தில் நூற்றுக் கணக்கில் இருந்த இந்த இனப்படுகொலைகள், ஹிட்லரின் கணக்கில் ஒவ்வொரு நாடாகச் சேரச்சேர, ஆயிரங்களையும் இலட்சங்களையும் தொடத் தொடங்கியது. ஹிட்லர் ஒரு தேசத்தின்மீது படையெடுத்தார் என்றால், அங்குள்ள ஒரு தேசத்தின்மீது படையெடுத்தால் என்றால் அங்குள்ள அரசல்ல யூதர்கள்தான் முதலில் அலறினார்கள்.

எப்பாடு பட்டாவது ஹிட்லர் எட்டிப்பார்க்க முடியாத ஏதாவது ஓரிடத்துக்குப் போய்விடமாட்டோமா என்று ஏங்கிக் கதறினார்கள்.

தினசரி நூற்றுக்கணக்கான யூதர்கள் திருட்டுத்தனமாகத் தம் தேசத்தைவிட்டு எல்லைதாண்டி வெளியே போவது வழக்கமாகிவிட்டது. இது மற்ற பிறதேசங்களுக்கு மிகப் பெரிய பிரச்சினையாகிப்போனது. அவர்களால், யூதர்களை வராதீர்கள் என்றும் சொல்லமுடியவில்லை. வருபவர்களை வைத்துக்கொண்டு பராமரிக்கவும் முடியவில்லை. ஏனெனில் அத்தனை ஐரோப்பிய தேசங்களுமே அன்றைக்கு யுத்தத்தின் ஓர் அங்கமாக விளங்கின. எல்லோரும் எல்லோரையும் அடித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் ஹிட்லர் கட்சி. இன்னொரு பக்கம் பிரிட்டன் கட்சி.

ஆனால் எப்படித் தப்பிப்பது?

அவர்கள் எப்படி யோசிப்பார்கள் என்பதை முன்கூட்டியே ஹிட்லர் யோசித்து வைத்திருந்தார். ஆகவே அவர் ஒரு காரியம் செய்தார். எந்தெந்த தேசத்தைக் கைப்பற்றுகிறாரோ, அந்தந்த தேசங்களின் எல்லைகளை முதலில் மூடச்சொன்னார். ஜேர்மனியின் எல்லைகளும் மூடப்பட்டன. வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகள் தேசமெங்கும் செய்யப்பட்டது. யூதரல்ல, ஒரு கொசுகூட எல்லை தாண்டி வெளியே போகமுடியாத படிக்கு பாதுகாப்பு ஏற்பாடுககளை பலப்படுத்திவிட்டு ஹிட்லர் 'சிரித்தார்'. அந்தச் சிரிப்புக்குக் கண்ணை மூடிக் கொண்டு கொல்லுங்கள் என்று அர்த்தம்.

ஹிட்லரின் யூத வெறுப்பு – அல்லது யூத இன ஒழிப்புத் திட்டம் எத்தகையது என்பதை எத்தனை பக்கங்கள் வர்ணித்தாலும், அதன் முழுவீரியத்துடன் புரிந்துகொள்வது கஷ்டம். ஹிட்லரின் காலத்தில் ஜெர்மனியில் வாழ்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே அது புரியும். அதுகூட ஓரளவுக்குத்தான். ஹிட்லர் காலத்து ஜெர்மனிய யூதர்களுக்கு மட்டுமே தெரிந்த பேயாட்டம் அது. ஒரு யூதரை முதன்முறையாகப் பார்க்கும்போதே, அவர் பிணமாக இருந்தால் எப்படியிருப்பார் என்று சிந்திக்கத் தொடங்கிவிடுகிற கூட்டமாக இருந்தது நாஜிக்கட்சி. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், சாதனையாளர்கள் என்று எந்த விதமாகவும் அவர்கள் பிரித்துப் பார்க்கவிரும்பவில்லை. யூதர் என்கிற ஓர் அடையாளம் போதுமானதாக இருந்திருக்கிறது.



> "ஹிட்லரின் ஆஸ்திரியப் படையெடுப்பு நடந்துமுடிந்த இருபதாவது நாளில் மட்டும் ஆஸ்திரியாவில் சுமார் ஐநூறு யூதர்கள் கொல்லப்பட்டார்கள். ஒரே நாளில் நடந்த இச்சம்பவம் ஒட்டுமொத்த யூத குலத்தையும் குலைநடுங்கச் செய்துவிட்டது. யூதகுலத்தை மட்டுமல்ல. பல்வேறு உலக நாடுகளும் ஹிட்லரைப் பார்த்து பயப்படத் தொடங்கியதன் ஆதாரக் காரணம் இதுதான்.
>
> ஒரு யூதரை முதன்முறையாகப் பார்க்கும் போதே, அவர் பிணமாக இருந்தால் எப்படி இருப்பார் என்று சிந்திக்கத் தொடங்கி விடுகிற கூட்டமாக இருந்தது நாஜிக்கட்சி."

இதன்மூலம் பிரிட்டனுக்கு உயிர் தப்பிப் போகமுடிந்தது. இந்த அறுபதாயிரம் யூதர்கள் தவிர பத்தாயிரம் யூதக் குழந்தைகளையும் பிரத்தியேகமாக பிரிட்டன் தத்தெடுத்து, அவர்களின் எதிர்காலத்துக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாக அறிவித்தது.

இந்த இடப்பெயர்ச்சியில் பல்லாயிரக்கணக்கான பெற்றோர் தம் குழந்தைகளைப் பிரிந்து தனித்து வாழவேண்டியிருந்ததது. குழந்தைகள் மட்டுமாவது பிழைக்கட்டுமே என்று அவர்களை

பிரிட்டனின் அணியில் இருந்த தேசங்கள்கூட யூதர்கள் விஷயத்தில் முடிவெடுக்க மிகவும் திணறிக்கொண்டு இருந்தார்கள். சரித்திரத்தின் பழைய பக்கங்களில், அவர்களும் யூதர்களைக் கொடுமைப்படுத்தியவர்களாகவே இருந்ததுதான் காரணம். பரிதாபப்பட்டு யூதர்களை உள்ளே விட்டால், நாளைக்கு அவர்களால் நமக்கு என்னென்ன பிரச்சினைகள் வருமோ என்கிற அச்சம். அத்தனை ஐரோப்பிய தேசங்களுக்கும் இருந்தது. எப்படியாவது தப்பித்து பாலஸ்தீனுக்கு ஓடிவிடவேண்டும் என்பதுதான் அத்தனை யூதர்களின் எண்ணமும்.

துப்பாக்கியால் சுடுவது, கத்தியால் அங்கம் அங்கமாக வெட்டி எடுத்துக்கொள்வது ஆசைஆசையாக பெற்றோல் ஊற்றிப் பற்றவைத்து வேடிக்கை பார்ப்பது, கொதிக்கும் வெந்நீர்த் தொட்டிகளில்போட்டு, உடல் பொசுங்கிப்போவதை ரசிப்பது, விசவாயு அறைகளில் கூட்டம் கூட்டமாக நிர்வாணப்படுத்தி நிற்கவைத்து, மூச்சுத்திணறி ஒவ்வொருவராக விழுவதைப் பார்த்து மகிழ்வது, சிறு பிளேடுகள் அல்லது ரம்பம் கொண்டு மேல் தோல் முழுவதையும் அறுத்து உரித்தெடுப்பது என்று எத்தனை விதமான குரூரங்கள் சாத்தியமோ அத்தனையையும் அவர்கள் யூதர்களின்மீது பிரயோகித்தார்கள். எதுவுமே பதிவாகாத கொலைகள். கொன்றது அனைத்தும் காவல்துறையினர் என்பதால் நீதிமன்றங்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அல்லது நீதிமன்றங்களுக்கு இன்னார் காணவில்லை என்று காவல் துறையினர் ஒவ்வொரு யூதருக்கும் வழங்கும் இறுதிச் சான்றிதழுக்கு ஒப்புதல் தரும் வேலையை மட்டும் நீதிமன்றங்கள் செய்துவந்தன.

1939 செப்டெம்பருக்கு முன்பு வரை யூதப் படுகொலைகள் ஒரு சம்பிரதாயத்துக்காக, இரகசியமாக மேற்கொள்ளப்பட்டன.

(தொடரும்...)

# சொர்க்கம் உன் கையில்...

**கணவன்** - மனைவியிடம் பிணக்கு ஏற்படுவதற்கான முக்கியமான காரணங்கள் உடற்கோளாறு, நீங்கா அயர்வு, அன்புக் குறைவு, உடலுறவில் ஏமாற்றம், வாழ்க்கையிலேயே ஒருவித வெறுப்பு ஆகியவையேயாகும் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

பெண்கள் தங்கள்மீது தங்களின் கணவர்கள் அன்பைச்சொரிய வேண்டுமென்று ஆசைப்படுகின்றார்கள். தங்கள் கணவர் தங்களைப் பாராட்டவேண்டும், தங்கள்மீது தன்னுடைய வேலைமீது புகழ்மாலை சூட்டவேண்டும் என்று பெண் மனம் விரும்புகிறது. இத்தனை பெரும்பாலான ஆண்கள் உணர்வதே இல்லை. தங்களுடைய மனைவிக்கு அதிகமான உரிமைகளோ, அதிகமான அதிகாரங்களோ அளித்துவிடக்கூடாது என்று எண்ணி அவர்களை என்னவோ தங்களுடைய வீட்டிற்குவந்த வேலைக்காரியாக எண்ணிக்கொண்டு அவர்களுடன் எப்பொழுதும் கண்டிப்பாக இருக்கிறார்கள். அவர்கள் சிறுசிறு தவறுகள் இழைத்து விட்டாலும் அவர்கள்மீது சிடுசிடுவென்று பாய்கிறார்கள். பலன்? கணவன் - மனைவி போராட்டம்தான்.

இதற்கு மாறாக கணவர்கள் தங்கள் மனைவிகள்மீது தங்களுக்குள்ள அன்பை வெளியே காட்டவும் அவர்களுக்குச் சிறுசிறு அன்பளிப்புக்கள் கொடுக்கவும் (அல்வா கொடுத்தல்) அவர்களுடைய சமையலைப் புகழ்ந்து ஓரிரு பாராட்டு மொழிகள் (நன்றாக இல்லாவிட்டாலும்) சொன்னால் எவ்வளவோ நன்றாயிருக்கும்! இன்பம் தேடி வந்துவிடும்.

விலங்குகள், பறவைகள் கூடத்தங்களின் பெடைகளுக்காக எவ்வளவோ தியாகங்கள் செய்யும்பொழுது கணவர்கள் அவ்விதம் தங்களின் மனைவியருக்காகச் செய்யாதிருப்பது வருந்தத்தக்கதாகும். பொறிபறக்கும் கானகத்தில் எவ்வாறு ஆண் யானை, பெண் யானை உண்டபின் தண்ணீரை உட்கொள்கிறதென்றும், தன்னுடைய மடப்பெடை வெய்யிலின் கொடுமையில் வருந்துவதைக் கண்டு ஆண் புறா இறக்கை விரித்து அதற்கு நிழல் அளிக்கிறதென்றும் கோடை வெய்யிலில் அவதியுறும் பெண்மானுக்கு அதன்மீது வெய்யில் விழா வண்ணம் ஆண் மான் எவ்வாறு நிழல் நல்குகிறது என்று கூறும் பின்வரும் அடிகள் அவர்களுக்குச் சிறந்த அறிவு வழங்கும் என்று நம்புகிறேன்.

பெண்கள் இயற்கையிலேயே அழகுப்பிரியர்கள், தங்களை அழகுபடுத்திக் கொள்வதிலே அவர்கள் பெரிதும் இன்பம் கொள்கின்றனர். அதில் ஏற்படும் எத்துன்பத்தையும் அவர்கள் துன்பமாகக் கருதுவதில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன்னை அழகு ராணி என்று எண்ணிக்கொண்டே தன்னை அழகு செய்துகொள்கின்றாள். அதற்குச் சில கிழவிகள்கூட விலக்கில்லை.


பெண்கள் தங்களின் கணவரைப் பார்த்து தங்களுக்குவேண்டிய பொருள்களை வாங்கித்தருமாறு கேட்கும்போது அவர்களின் கணவர் அவர்கள் கேட்பதில் சிலவற்றையாவது இயன்றவரை வாங்கிக்கொடுத்து அவர்களை மகிழ்விப்பதே தங்களுடைய இல்வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கிக்கொள்வதற்குச் சிறந்த வழியாகும். அதைவிடச் சிறந்த வழி அவர்கள் கேட்காமலேயே அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொடுத்து அவற்றை அணியச்செய்து பாராட்டுவதாகும்.

இந்த நேரத்தில் கொழும்பிலுள்ள எனது நண்பர் அண்மையில் கூறிய விடயம் இந்த இடத்தில் பொருந்தும் என்று கருதுகிறேன். திருமண நிகழ்விற்கான அழைப்பு ஒன்று வந்துவிட்டால் அன்பளிப்புக்கான செலவை விட மேலதிகமாக ஐயாயிரம் ரூபா தேவை என்றான். ஏன்? எனக் கேட்டேன். அந்தக் கன்றாவியை ஏன்டா கேட்கிறாய். "மனுசிக்கு பேஷியல் செய்வதற்கு காசு கொடுத்தாகவேண்டும்" என்றான். இது கொடுமையிலும் கொடுமை அல்லவா! பெண்கள் ஆண்களின் பணப்பையை கவனத்தில் கொள்ளவேண்டும். அல்லாவிடில் சொர்க்கம், நரகமாகிவிடும்.

பெண்களின் மற்றொரு இயல்பு என்னவெனில் தங்களின் கணவர் தங்களின் பெரும்பாலான நேரத்தைத் தங்களுடன் இருந்த பேசிக் கழிக்கவேண்டும் என்று விரும்புவது. ஆனால் ஆண்களின் இயல்போ வாழ்க்கைப் பிரச்சினையிலேயே பெரும்பாலும் ஈடுபட்டுள்ளது.

எனவே அதுபற்றிச் சிந்தித்துக்கொண்டு சற்றுநேரமாவது அவர்கள் தனித்திருக்கவேண்டும் என்று விரும்புகின்றார்கள். அவ்விதம் செய்வதே மனைவி விரும்புவது இல்லை. தங்களை நேசிக்கவில்லை என்றும், தங்களை நேசித்தால் தங்கள் கணவர் தங்களுடன் "கலகல" என்று பேசிச் சிரித்துக்கொண்டிராது ஒதுங்கித் தனித்திருப்பாரா என்று அவர்கள் தவறாக எண்ணிக்கொள்கின்றார்கள்.

ஒரு மருத்துவரின் மனைவி நஞ்சை அருந்து இருந்துவிட்டாள். காரணம் என்னவென்று மருத்துவருக்குத் தெரியவில்லை. ஒருநாள் எதிர்பாராதவிதமாக அவர் தம்முடைய இறந்த மனைவியின் நாட்குறிப்பைப் பார்க்க நேர்ந்தது. அதில் அவள் எழுதியிருந்த செய்திகள் அவளுடைய இறப்பைவிட அவருக்கு அதிகமான மனஅதிர்ச்சியை தந்துவிட்டது. அப்படி அவள் இவளுடைய என்ன எழுதியிருந்தாள்?"



சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

(தொடரும்...)

# ஜெனிவா கூச்சல் தலை நிமிர வழி செய்யுமா?

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

**ஆயுத** வன்முறைகள் கோலோச்சி இருந்த கடந்த 30 வருட காலப்பகுதிக்குள் எல்லா அழிவுகளும் அட்டூழியங்களும் நடந்தேறியிருக்கின்றன என்பது ஒன்று. நடந்த அழிவுகளிலிருந்து மக்களைத் துரிதமாக எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்று சிந்திப்பது மற்றொன்று.

இலங்கையில் ஆயுத வன்முறைகள் கோரத் தாண்டவமாடிய சங்கதிகள் ஒன்றும் இரகசியமாக இடம்பெற்று முடிந்த ஒரு விடயமல்ல. அந்நேரங்களில் எல்லாம் வெளியுலகம் தனது கண்களை அகலத் திறந்துவைத்துக் கொண்டுதான் இருந்தது.

அப்போதெல்லாம் அவர்கள் பாதுகாப்பதாகக் கூறும் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் என்று எல்லா விடயங்களும் இருந்தன.

ஆயுத வன்முறைகள் எங்கெல்லாம் அசுரத் தாண்டவமாடுகிறதோ அங்கெல்லாம் மனிதப் பாதுகாப்பு, மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன சிறிதளவும் இருக்காது.

படை படையாகத் தற்கொலையாளிகளைத் தயார்ப்படுத்தி கடைசி நிகழ்வாக ஆட்டுக்கறியோடு சாப்பாடும் கொடுத்து, அருகில் அமரவைத்து அழகிய வர்ணப்படமும் எடுத்துக்கொண்ட நிகழ்வுகள் இருந்தன.

அந்தத் தற்கொலையாளிகள் தாமும் தமது இன்னுயிரைப் பலி கொடுத்ததோடு, இன்னும் எத்தனையோ பேரை வெடித்துச் சிதற வைத்த நிகழ்வுகளையும் இப்பொழுது மனித உரிமைகளுக்காக கூச்சல் போடும் உலகம் கண்டுகொண்டுதானிருந்தது.

இவை ஒன்றும் இரகசியமாகவோ அல்லது இருட்டோடு இருட்டாகவோ நடந்துவிடவில்லை. உலக ஊடகங்களில் இவை பிரபலமாக இடம்பிடித்த விடயங்கள்தான்.

தற்கொலையைச் சிறப்பிப்பதற்கும் அதனை ஊக்குவித்து மகிழ்விப்பதற்கும், வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட வாரத்தைப் பிரகடனம் செய்து மாவீரர்கள் எனக் கூறிக்கொண்டு வருடத்தில் ஒரேயொரு முறை உரையாற்றியபோது அவற்றையும் உலக ஊடகங்கள் முக்கிய நிகழ்வாக படம் பிடித்துக்காட்டின.

இவை இருந்துவிட்டு எப்போதாவது நடந்துவிடவில்லை. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மனிதர்களை அழிவுக்குட்படுத்திய தினம் நவம்பர் மாதத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டே வந்தது.

வருடாந்தம் கொலைகளுக்கான பிரகடனத்தைச் செய்து மேலும் அழிவு-களை மேற்கொள்வதற்காகக் கட்டியம் கூறும் அந்த உரையை முன்பக்க முதன்மைச் செய்தியாகப் பிரசுரிக்க நமது ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு காத்திருந்தன.

அமைதிக்குச் சவால்விடுப்பதும் எதிரி என அவர்கள் கருதிய அடுத்தவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுப்பதுமான அந்த உரை உலக ஊடகங்களில் இடம்பிடித்தன.

சொந்த இனம், மாற்று இனம், ஆயுத மோதல்களில் சம்பந்தப்படாதோர், சிறுவர், வயோதிபர் என்றில்லாமல் எல்லோருமே படுமோசமாகப் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

ஜனநாயகமற்ற அராஜக ஆட்சி நிலவிய கால கட்டம் அது. அதனால் அவலங்களும் அழிவுகளும் அசுரத் தாண்டவமாடின. மூளைச்சலவை செய்யப்பட்ட அனைவரும் கொலை வெறியோடு அலைந்துதிரிந்தார்கள். வணக்கஸ்தலங்களில் இருந்தவர்கள், வழிபாட்டில் ஈடுபட்டவர்கள், துறவிகள், நடுநிசியில் உறங்கிக் கொண்டிருந்தோர், பச்சிளம் பாலகர்கள், கடலிலும் குளத்திலும் மீன்பிடிக்கச் சென்றோர் என எல்லோருமே கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு கொல்லப்பட்ட பொது மக்களில் எவருமே ஆயுதமேந்தியிருக்க வில்லை. அவ்வாறிருந்தும் இவர்களில் எவருமே ஆயுததாரிகளால் விட்டுவைக்கப்படவும் இல்லை. பூண்டோடு அழிக்கப் பட்டனர்.

அவர்கள் அராஜக ஆட்சி செலுத்திய பிரதேசத்திலிருந்து ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒரு சில மணித்தியாலங்களில் இனச் சுத்திகரிப்புச் செய்து துரத்தியடிக்கப்பட்டுமிருந்தார்கள்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் இலட்சக்கணக்கானவர்கள் தங்கள்மீது யுத்தக் குற்றம் இழைக்கப்பட்டதற்கான வாழும் சாட்சிகளாக உள்ளார்கள்.

உண்மையில் இவர்கள் சிறுபான்மைத் தமிழர்களின் அல்லது சிறுபான்மையினரின் நலன்கள்மீதும் மனித உரிமைக் கோட்பாடுகளின் மீதும் அக்கறையுள்ளவர்களாக இருந்திருந்தால் இத்தகைய பேரழிவுகள் நடப்பதற்கு முன்னாலேயே கடந்த கால அழிவுகளை அனுபவங்களாகக் கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

எல்.ரீ.ரீ.ஈ. இயக்கம் உலகிலேயே மூர்க்கத்தனமானதும் கொடூரமானதுமான இயக்கம் எனப் பெயர் பெற்றது. அதன் தலைவர் Ruthless Leader (நம்பகத்தன்மையற்ற தலைவுன்), என Discovery இன் Sri Lanka Guide என்ற நூல் தலைப்பிட்டுள்ளது.

எனவே இத்தகையதொரு கொடூரம் மேற்கொள்ளப்பட்டதும் மேற்கொள்ளப் படுவதற்குச் சாத்தியம் உள்ளதுமான அத்தனை மனித உரிமை மீறல்களையும் தடுத்து நிறுத்துவதற்கு மனித உரிமைகளுக்காகப் பாடுபடுகின்ற அமைப்புக்கள் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இழப்பைச் சுமந்துகொண்டு அவலங்களோடு வாழும் அகதிகளின் துயர் துடைக்கப்படுவதாக இருந்தால் சர்வதேச விசாரணை, யுத்தக் குற்றம் என்று கூக்குரலிடுகின்ற இந்தக் கோமாளிகளின் கூச்சல்களில் மக்கள் மயங்கி இனிமேலும் இளம் சந்ததியினரின் எதிர்காலத்தை வீணாக்கிவிடக் கூடாது.

உலகில் கடந்த வரலாறுகளின் அடிப்படையில் பார்த்தால் பாதிக்கப்பட்ட மக்களை வைத்து இவர்கள் பிழைப்பு நடத்தினார்களே தவிர, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை கொண்டுவரக்கூடியதாக உருப்படியாக எதுவும் செய்யவில்லை.

விரும்பினால், ஆயுத வன்முறைகளின் உக்கிரத்தினால் இப்பொழுது சகலவற்றையும் இழந்து ஓட்டாண்டியாகி நிற்கும் மக்களுக்கு உதவுவதே நம் முன்னுள்ள கடமையும் பொறுப்புமாகும்.

வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துகொண்டு எதிர்ப்புக்கொடி பிடிப்பதுதான் பொருத்தமானது என்று நினைப்பது வடிகட்டிய முட்டாள்தனமாகவே எதிர்காலம் வரலாறு பதிக்கும்.

மற்றப்படி மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதாக கூறிக்கொள்வோர் பாதிக்கப்பட்ட மக்களை மீளமைக்கும் எந்த நடவடிக்கைக்கும் உதவப்போவதில்லை. இதற்கான வரலாறுகள் அனுபவப் பாடங்களாக நம் கண்முன்னே இருக்கின்றன.

ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர், பலஸ்தீன், சிரியா, மியன்மார் என்று உலகெங்கணும் அதிகாரத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கெதிராக இவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.

சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் கைப்பொம்மைகளாக இவர்கள் இருக்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.

ஈராக்கில் நடந்த; நடந்து கொண்டிருக்கும் மனிதப் பேரவலங்கள், படுகொலைகள் மிகக்கிட்டிய காலத்தில் நடந்த மிகப்பெரிய உதாரணங்களாகும்.

தினமும் நூற்றுக்கணக்கானோர் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் கொல்லப்படுகிறார்கள். இதற்கெல்லாம் யாரையும் பொறுப்பாளிகளாகவோ குற்றவாளிகளாகவோ காணும் துணிவு அவர்களுக்கில்லை.

எனவே இத்தகைய வீணர்களின் பிதற்றல்களில் மயங்கி, இழந்தது போக எஞ்சியிருப்பதையும் இழக்கும் நிலைக்கு பாதிக்கப்பட்ட மக்கள் வந்துவிடக்கூடாது. இழப்புக்களும் படிப்பினைகளும் நமக்கு மீண்டெழும் பாடமாக இருக்கட்டும். வேகமாகவும் விவேகமாகவும் சிந்திப்போமாக!!

# தற்கொலை மரணங்களும் உண்டாகும் பாதிப்புகளும்

**இன்றைய** உலகம் வேகமாக நகர்ந்துகொண்டு இருக்கிறது. இதற்கு அமைவாக மனித குலத்தின் செயற்பாடுகளும், புதிய புதிய கண்டுபிடிப்புக்களும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. என்ன சாதனைகளைச் செய்யலாம்... செவ்வாய் கிரகத்தில் மரக்கறிப் பயிர்களை நாட்டலாமா? என்றெல்லாம் விஞ்ஞானிகள் மண்டையை போட்டுக்குழப்பி வெற்றியும் கண்டுவருகின்றார்கள். இந்தச் சாதனைப் பட்டியல்களினால் மனித குலம் மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருக்கும்நிலையில் மனித குலத்தின் இன்னொரு வகை செயற்பாடு முழு மனிதர்களையும் திகைப்பில் ஆழ்த்திவருகின்றது! அச்சப்பட வைக்கின்ற விடயம் தான் தற்கொலை மரணங்கள்.

ஒரு மனிதன் தன் ஆயுளையும் - உயிரையும் அழித்துக் கொள்ள எடுக்கும் முயற்சியாக தூண்டுகோலாக இந்த தற்கொலை மரணங்கள் அமைகின்றன. இத்தகைய தற்கொலைச் சம்பவங்கள் ஏன் நடக்கின்றன?, எதற்காக நடக்கின்றன?? என்ற வினாவுக்கு விடை கிடைப்பது அரிதாகவே உள்ளது.

ஒருவருடைய மனதில் தோன்றும் விரக்தி, தோல்வி, ஏமாற்றம், தாங்கமுடியாத மனஉளைச்சல், குடும்பத்தின் பிரிவு உட்பட இன்னும் பல காரணிகளினால் மனித உயிர்களை தற்கொலை என்னும் பெயரினால் மாய்த்துக் கொண்டு வருகின்றார்கள்- கட்வுளால் படைக்கப்பட்ட மனித உயிர்கள் வாழ்வதற்காகவும், மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காகவுமே படைக்கப்பட்டதாகும். இத்தகைய அரிய படைப்பு மனிதர்களுக்கு கிடைக்கப்பெற்ற பொக்கிசமாகும். இடையிலே அழித்துக் கொள்ளும் அதிகாரமும் அனுமதியும் யாருக்குமே கிடையாது! இருந்தும் யாழ். குடாநாட்டினை உலுப்பிவரும் தற்கொலை மரணங்கள் ஒவ்வொரு குடும்பத்தினையும் ஆட்டிப் படைத்துவருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்த தற்கொலை மரணங்களில் பெரும்பாலும் இளைஞர், யுவதிகளே ஈடுபட்டுவருவது எமது இளம் தலைமுறையை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் சம்பவங்களாகும். கடந்த இருவாரங்களுக்கு முன்பு வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒரு பதின்மூன்று வயது சிறுமி தூக்குப்போட்டு தன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமானது தற்கொலை மரணங்களின் விபரீதங்களை உணரவைத்துள்ளது! சிறுமி ஒருத்தி தன் உயிரை மாய்த்துக் கொள்ளவேண்டிய தேவை என்ன?, அந்த அளவுக்கு அவர் மனதில் தோன்றிய மன அழுத்தம் என்ன?

இது ஒரு புறமிருக்க ஊர்காவற்றுறைப் பகுதிக் காட்டுப் பகுதியில் தூக்குப் போட்டு இறந்து போன இளைஞர் ஒருவரது சடலம் பல பறவைகளும் விலங்குகளும் சடலத்தின் சில பகுதிகளை தின்றுள்ளன என்ற செய்தியும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

சாகவேண்டும் என்று முடிவெடுப்பவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் வழி-முறைகள் பலரையும் வியப்பிலே ஆழ்த்திவருகின்றன.



இவற்றிலே அண்மைக் காலங்களாக அதிகளவான மரணங்களாக தூக்குமாட்டி இறக்கும் சம்பவங்களே அதிகமாக இடம்பெற்று வருகின்றன. இத்தகைய முறைகளைக் கையாள்பவர்களில் படித்தவர்களும், பட்டதாரிகளும், இளம் சந்ததியினரும் தான் முக்கிய பங்கு வகித்துவருகின்றனர்.

தினசரி பத்திரிகைகளை புரட்டினால் தற்கொலைச் சாவுகள், விபத்து சாவுகள் போன்ற செய்திகள் இல்லாத நாட்களே இருக்காது. ஒவ்வொரு நாளும் இந்த அவலச் செய்திகளுக்கு பஞ்சமிருக்காது.

அளவெட்டி, ப.உதயகுமார்

தற்கொலை சாவுக்கான இன்னொரு வழிமுறையா எம்மவர்கள் மத்தியில் மலிந்து காணப்பட்ட போதிலும் இம்முறையானது அண்மைய காலங்களில் வெகுவாக குறைவடைந்துள்ளது. இருந்த போதிலும் நூற்றுக்கணக்கானோரின் உயிரைக் குடித்தது அலரி விதை.

1985 ஆம் ஆண்டளவில் வெளியாகி பெருவெற்றி அடைந்த திரைப்படமொன்றில் காதலுக்கு உண்டான தடை, கடைசியில் காதலித்த இருவரும் அலரிவிதை அரைத்துச் சாப்பிட்டு உயிரிழப்பீதாக காட்டி அமைக்கப்பட்டிருந்தது! அவற்றினை அடுத்து ஏராளமான காதலர்கள் இறக்க வழிதேடிக் கொடுத்தது இந்த அலரி விதை. இவர்களில் பரீட்சையில் தோற்றுப் போனவர்கள், குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றினாலும் உண்டான மன அழுத்தங்களினால் அலரி விதையை நாடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் எண்ணிலடங்காது. இது இவ்வாறிருக்க நஞ்சிடம் தஞ்சமடைந்து சாவினை அணைத்துக்கொண்டவர்களும் ஏராளம் பேர் உள்ளனர்.

பயிர்களுக்கு தெளிப்பதற்காக கொண்டுவரப்பட்ட நஞ்சு உள்ள கிருமிநாசினிகளைக் குடித்து தற்கொலை செய்து கொள்பவர்களின் சாவுகள் மிகவும் பரிதாபத்துக்குரியது. அதாவது உடனே இறப்பவர்கள் போக, அரை உயிரிலே இருப்பர்களைக் காப்பாற்ற வென்று தேங்காய்ப்பால், நல்லெண்ய், சாணம் போன்றவற்றினைக் கரைத்துப் பருக்கி வாந்தி எடுக்கச் செய்தவதன் மூலம் உயிரைக் காப்பாற்றும் வழிமுறையொன்று இன்றும் வழக்கத்தில் உள்ளன.

இத்தகையவற்றை அளவுக்கு அதிகமாக பருகவேண்டும், சிலர் குடிப்பார்கள். சிலர் குடிக்க மாட்டார்கள். இவ்வாறு முரண்டு பிடிப்பவர்களின் வாயினுள் வயர் பொருத்தி புனல் வைத்து பருக்கும்போது இந்த உயிர் படும்பாடு வேதனையை உண்டுபண்ணும்.

தற்கொலைக்கான இன்னொரு வழி வகையாக நீரிடம் தஞ்சமடையும் அவலங்களும் தொடர்களையாகவே உள்ளன. கிணறு, குளம், கடல் என்று நீர் நிலைகளில் குதித்தும் தற்கொலை செய்வதும் அதிகளவில் இடம் பெற்று வருகின்றன.

(21 ஆம் பக்கம் பார்க்க...)



# சர்வதேச போர்க்குற்றங்கள்...

பகுதி -2

தொகுப்பு: வேணு கிருஷ்ணா

**மனித** இனத்தைப் போர்களிலிருந்தும், அவற்றின் அழிவுகளிலிருந்தும் காப்பாற்று வதற்காக மனிதர்களில் அன்பும் கருணையும், மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறையும், ஆர்வமும் கொண்ட அறிஞர்கள் பலர் முயன்றிருக் கின்றார்கள், இன்றும்கூட இவர்கள் முயன்று கொண்டுதான் இருக்கின்றார்கள். மனித இனத்தினை அதன் அழிவிலிருந்து காப்பாற் றுவதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும், இவர் களது அளப்பரிய தியாகங்களினாலும், தளராத முயற்சிகளினாலும், கடுமையான உழைப்பினாலும் உருவாக்கப்பட்டன. ஆனாலும்கூட, பல உலகநாடுகளிலும் தொடர்ந்துவரும் இனப்படுகொலைகளும், போர்க்குற்றங்களும், பாரிய மனித உரிமை மீறல்களும், மனிதனின் இயற்கையான குணங்களை இன்றுவரையில் இந்த மனித தெய்வங்களால்கூட மாற்றி அமைக்க முடியாமல் இவர்களும் தோற்றுப்போயுள் ளார்கள் எனும் உண்மையை உலகிற்கு மிகவும் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

## 20ஆம் நூற்றாண்டு, படுகொலைகளின் நூற்றாண்டு

மனிதவரலாற்றிலேயே, கடந்த நூற் றாண்டில்தான் மிகப்பெரிய அளவிலான போர்களும், இனப்படுகொலைகளும், போர்க் குற்றங்களும், பாரிய மனித உரிமை மீறல் ளும் நடந்தேறியுள்ளன. 1904இல், நமிபியா எனும் ஆபிரிக்க நாட்டில் ஹீரீரோ எனும் இனமக்களின்மீது ஐரோப்பாவைச் சேர்ந்த ஜெர்மனியர்களால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையில் இருந்து ஆரம்பித்து, பின்னர் ஆர்மேனியர்கள், யூதர்கள், ஜப்பானியர்கள், சீனர்கள், பாலஸ்தீனியர்கள் போன்ற இன்னும்பல இனத்தவர்கள் மீதும் மற்றும் ஈராக், ருவாண்டா, சூடான், உகண்டா போன்ற இன்னும்பல நாடுகளிலு மாக இனப்படுகொலைகளும், போர்க் குற்றங்களுமாக தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. காலனித்துவத்தின் போது, ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா விலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் ஏராளமான இனப்படுகொலைகளையும், போர்க்குற்றங்களையும் புரிந்துள்ளன. பனிப்போர் காலத்தின்போது அமெரிக்காவும் (மூன்றாம் உலக நாடுகளில்), ரஷ்யாவும், சீனாவும் (தங்களது நாடுகளிலேயே) ஏராளமான மனிதப்படுகொலைகளையும், போர்க்குற்றங்களையும் செய்திருக்கின்றன. கடந்த நூற்றாண்டில் மட்டுமே 170 மில்லி யனுக்கு மேற்பட்ட உலக மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ருவாண்டா எனும் ஆபிரிக்க நாட்டில் மட்டும், சுமார் 800,000 வரையிலான துட்சீ இனமக்கள் இனப் படுகொலைக்கு ஆளாகயிருக்கின்றார்கள். இவை காரணமாகவே, 20ஆம் நூற்றாண்டை 'இனப்படுகொலைக்கான நூற்றாண்டு' என்று அரசியல் அறிஞர்கள் கூறுவர்.

## போராட்டங்கள் நிறைந்த ஒரு நூற்றாண்டாக 21ஆம் நூற்றாண்டு

பண்டைய காலங்களில் மண்ணுக்காக வும், பெண்ணுக்காகவும், பொன்னுக்காகவும், மதங்களிற்காகவும் அரங்கேற்றப்பட்ட மனிதப்படுகொலைகளானவை, கடந்த நூற் றாண்டிலிருந்து அரசியல் கோட்பாடுகளுக் காகவும், பொருளாதார நலன்களுக்காகவும், ஒரு இனத்தை பூண்டோடு அழிப்பதற்குமாக, என பரிமாணம் பெற்றிருப்பதனை நாம் இங்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தங்களது அடிப்படை மனித உரிமை களுக்காகவும் மற்றும் தங்களது இன, மொழி, மத, கலை, கலாசாரங்களை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற் காகவுமாக, சுமார் 50இற்கு மேற்பட்ட இனமக்கள் இன்றும்கூட உலகெங்கினும் ஆயுதேமேந்திப் போராடிக் கொண்டிருக் கின்றனர். இன்னமும் சுமார் 5,000வரை யிலான இனமக்கள் தங்களது வாழும் உரிமைகளுக்காக குரலெழுப்புவதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஆகக் குறைந்தது 26 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் போர்களினால் குடிபெயர்ந்து, உலகெங்கினும் அகதிகளாக இருக்கின்றார் கள். இவற்றைவிட, சுமார் 25,000 வரையிலான மக்கள், இவர்களுள் 16,000 சிறுவர்கள் உட்பட, வறுமையின் நிமித்தம் பஞ்சம், பசி, பட்டினி போன்றவற்றால் எங்கள் உலகில் தினம் தினம் செத்து மடிந்து கொண்டிருக்கின்றார்கள். சுமார் 925 மில்லியன் மக்கள் தினமும் பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உலகின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் கொடுமையான வறுமையில் தினமும்வாடி, வதங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இன்னமும், குடிப்பதற்கு சுத்தமான நீருமின்றி, உண்பதற்கு போதுமான உணவுமின்றி, இருப்பதற்கு ஒழுங்கான இருப்பிட வசதி களுமின்றி பல கோடிக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அவர்களது அன்றாட வாழ்க்கையில் தினம் தினம் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த உலகெங்கினும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

பனிப்போரின்போது, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா போன்ற இரு பெரும் உலக வல்லரசுகளின் போட்டிக்கு மத்தியில் சிக்குண்டு, நடைபெற்ற மனிதப்படுகொலை களையும், போர்க்குற்றங்களையும் கண்டும் காணாததுபோல் இந்த சர்வதேச அமைப்புக் களும், சர்வதேச சட்டங்களும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பல சந்தர்ப்பங் களில் செயலற்று இருந்தவை என்பது உண்மைதான். பனிப்போருக்கு- பின்னரான இன்றைய காலகட்டத்திலும்கூட, சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பலத்த கண்டனங்களுக்கு மத்தியிலும்கூட, ருவாண்டா, போஸ்னியா, சூடான், உகண்டா போன்ற நாடுகளில் நடைபெற்ற இனப்படுகொலை களையும், போர்க்குற்றங்களையும் தடுப்பதற்கு சர்வதேச சமூகமும், சர்வதேச சட்டங்களும், தவறிவிட்டன என்கின்ற கசப்பான உண்மையையும் நாம் இங்கு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

## அமெரிக்காவும் போர்க்குற்றமும்

காலனித்துவ நாடுகளில் ஐரோப்பியர் களால் மேற்கொள்ளப்பட்ட கலாசார சீர்கேடுகள் காரணமாக, "ஒரு இனத்தின் மீது இன்னுமொரு இனத்தினால் மேற்கொள்ளப்படும் கலாசார அழிவானது ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்" என்பதனை சர்வதேச சட்டங்களில் (UN Genocide Convention) உள்ளடக்குவதற்கு ஐரோப்பிய நாடுகள் உடன்படாத காரணத்தினால், 'கலாசார அழிப்பானது' ஒரு பாரிய சர்வதேச குற்றமாக சர்வதேச சட்டங்களில் இன்றுவரையில் இடம்பெறவில்லை. இரண்டாம் உலகப்போரின் முடிவில், அமெரிக்கா எனும் நாடானது கம்யூனிசத்திற்கு எதிராக உலகெங்கினும் போர் தொடுத்திருந்த காரணத்தினால், "அரசியல் குழுக்களை (கம்யூனிசியவாதிகளை) அழிப்பதானது ஒரு தண்டிக்கப்பட வேண்டிய பாரிய சர்வதேச குற்றமாக" சர்வதேச சட்டங்களில் இடம்பெறுவதனை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன், இரண்டாம் உலகப்போரின்போது, ஜப்பானிய நாட்டவர்களின் மேல் அணுகுண்டுகளை வீசி 100,000இற்கு மேற்பட்ட அப்பாவி ஜப்பானியர்களைக் கொன்ற காரணத்திற்காக, அமெரிக்கர்கள் தண்டிக்கப்படுவதனைத் தவிர்க்கும் நோக்குடன், 'Intention' எனும் ஒரு பதத்தையும் (அதாவது என்ன காரணத்திற்காக ஒரு மனித அழிவு ஏற்படுத்தப்படுகின்றது) சர்வதேச சட்டங்களில் அமெரிக்கா இணைத்திருக்கின்றது. சமீபத்தில் கூட, 1998இல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் மனித சமுதாயத்தில் அக்கறையுள்ள உலகத்தலைவர்கள் ஈடுபட்டிருந்த வேளையில், அமெரிக்கா "தன் நாட்டவர்கள் எத்தகைய மாபெரும் குற்றங்களைச் செய்திருந்தாலும்கூட அவர்கள் வெளிநாட்டவர்களால் ஒருபோதும் தண்டிக்கப்படக் கூடாது" என்ற ஒரு ஆதிக்கவாத கொள்கையின் காரணத்தினால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு எதிராகப் பல சதி வேலைகளைச் செய்திருந்தது. அவற்றுள் மிக முக்கியமானவற்றில் ஒன்று, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு அமெரிக்கா பல மூன்றாம் உலக நாடுகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்திருந்தது. இந்த நாடுகளுள் இலங்கையும் உள்ளது. இனப்படுகொலைக்கு எதிரான 'சர்வதேச சட்டங்களில் ஏற்கனவே அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் ஒன்றான இலங்கை, "பயங்கரவாதமும் ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டங்களுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை" எனும் ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு வாக்களித்திருக்கவில்லை. இன்று இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அங்கத்துவம் வகிக்கின்ற நாடுகளுள் ஒன்றாக இல்லாதிருப்பதற்கு அமெரிக்காவும் ஒரு முக்கிய காரணம் என்பது ஒரு கசப்பான உண்மையே.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சுயாதீனம் மிக்கதா?

உலகில் மிகவும் பலம் வாய்ந்த நாடுகள் தங்களது 'தேசிய நலன்களுக்கு' ஏற்ப சர்வதேச சட்டங்களையும், சர்வதேச விதி-களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றன ஏன்பது யாவரும் அறிந்த உண்மையே. இந்த சட்டங்களையும், விதிகளையும் அந்த நாடுகள் தங்கள் தேவைகளுக்கேற்பவும், தங்களது (தேசிய) நலன்களுக்கேற்பவும் மாற்றியமைத்து நடைமுறைப்படுத்தி வருவதும் உண்மை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்த அங்கம்வகிக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற இந்த ஐந்து வலிமைமிக்க நாடுகளும், தங்களிடமுள்ள விசேடமான 'Veto' உரிமையின் காரணமாக, சர்வதேச உறவுகளில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்த உலகத்தில் வாழும் அனைத்து உலகமாந்தரின் தலையெழுத்துக்களையும் இந்த உலகின் மிகப்பெரும் செல்வந்தர்களே நியூயோர்க்கிலும், லண்டனிலும், பாரிசிலும் இருந்து நிர்ணயித்துக்கொண்டு இருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, இரண்டாம் உலகப்போரின் பின்னர், பொது உடைமைக் கொள்கைகள் உலகெங்கினும் பரவவிடாமல் தடுப்பதற்காகவும், கம்யூனிசத்திற்கு எதிராக மூன்றாம் உலகநாடுகளின் ஆதரவினைப் பெறுவதற்காகவும், மிகப் பெருத்த முதலாளித்துவ நாடான அமெரிக்கா 'மக்களுக்கான சுயநிர்ணய உரிமை' எனும் ஒரு சர்வதேச சட்டத்தை உருவாக்குவதன் மூலம், மூன்றாம் உலக நாடுகளில் ஐரோப்பிய காலனித்துவத்திற்கெதிரான சுதந்திரப் போராட்டத்தை ஊக்குவித்தது. பனிப்போர் முடிவுற்ற பின்னர், சோவியத் ரஷ்யாவை நிரந்தரமாகப் பலவீனப்படுத்துவதற்காகவும், மற்றும் ஐரோப்பாவில் அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதன் ஊடாக, மேற்குலகப் பொருளாதாரத்தையும், சந்தைப் படுத்துதலையும் பாதுகாப்பதற்காகவும் அமெரிக்காவானது "மக்களுக்கான சுயநிர்ணய உரிமை" எனும் சர்வதேச சட்டத்தை மீண்டும் முன்னெடுத்து, சோவியத் ரஷ்யா உடைந்து எஸ்தோனியா, லத்வியா, லித்தோனியன் போன்ற இன்னும் பல தனிநாடுகளும், யூகோஸ்லாவியா உடைந்து போஸ்னியா, கொசோவோ போன்ற வேறும் சில தனி நாடுகளும் ஐரோப்பாவில் உருவாவதற்கும் காரணமாக இருந்தது. தெற்காசியாவில், கிழக்குத்தீமோரிலுள்ள மிகுந்த எண்ணெய் வளங்களின் காரணமாக, தமது பொருளாதார நலன்களை கருத்தில்கொண்டு, ஆஸ்திரேலியா வும், சீனாவும் கிழக்கு-தீமோர் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஆதரித்ததனால், சர்வதேச சமூகத்தினரின் அங்கீகாரத்துடன் கிழக்குத்தீமோர் தனிநாடானது.

ஆபிரிக்காவில், தெற்கு-சூடானிலுள்ள மிகுந்த எண்ணெய் வளங்களின் காரணமாக, தனது பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு, அமெரிக்கா தெற்கு-சூடான் கறுப்பின மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஆதரிப்பதனால், தெற்கு-சூடானில் சர்வதேச சமூகத்தினரின் அங்கீகாரத் துடன் ஓர் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப் பட்டதன் மூலம் இந்த மக்களின் சுதந்திரத் திற்கு அமெரிக்கா வழிவகுத்துள்ளது.

மிகவும் துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் வாழும் இந்த உலகமானது உலகநாடு களின் அரசுகளை மையமாக வைத்தே இயங்குகின்றது. இந்த உலகில், அரசுகள்தான் அதிகாரத்தின் மையப்புள்ளி.

## யூகோஸ்லாவியா இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது

1990களில் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சி அடைந்து, அமெரிக்க வல்லரசின் தலைமை யிலான ஏகாதிபத்திய உலகின் சூழ்ச்சிகள் சதிகளால் பல தேசிய அரசுகளாகப் பிளவு பட்டுச் சிதைந்தது. அதன்தொடர்ச்சியாக செக்கோஸ்லாவாக்கியா நாடானது, செக், ஸ்லோவாக் எனுமிரு நாடுகளாக உடைந்தது. பல தேசிய இனங்களின் கூட்டரசாக உருவான யூகோஸ்லாவியாவில் செர்பிய ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்ததாலும், பெயரளவிலான சோசலிச நாடுகள்கூட நீடிக்கக்கூடாது என்ற ஏகாதிபத்திய உலகின் சூழ்ச்சிகள் சதிகளுக் கேற்ப தேசிய இனவெறி தூண்டிவிடப் பட்டதாலும், ஐக்கியப்பட்ட அந்நாடு பல கூறு களாகச் சிதைந்து இன்று உலக வரைபடத்தில் யூகோஸ்லாவியா என்ற நாடே காணாமல் போய்விட்டது.

1991ஆம் ஆண்டில் யூகோஸ்லாவியா விலிருந்து ஸ்லோவேனியா மற்றும் குரேஷியா ஆகிய இரு தேசிய இனங்கள் பிரிந்து தனி அரசுகளாயின. 1992இல் போஸ்னியா ஹெர்ச கோவினா பிரிந்தது. அதைத் தொடர்ந்து, 2007இல் மாண்டிநிக்ரோ தன்னைத் தனிநாடாக அறிவித்துக் கொண்டது. எஞ்சிய பகுதிகள் செர்பியா என்றழைக்கப்பட்டு வந்தது. 2008 பெப்ரவரி 17ஆம் நாளன்று செர்பியாவிலிருந்து பிரிந்து, கொசாவோ தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளது.

பல தேசிய இனங்களின் ஐக்கியப்பட்ட ஒன்றியமாக யூகோஸ்லாவியா விளங்கிய காலத்திலேயே தமது மேலாதிக்கத்தைத் திணித்துவந்த செர்பியர்கள், இதர தேசிய இனங்கள் பிரிந்து செல்லத்தொடங்கியதும் அப்பட்டமான கிறித்துவ மதவெறியையும் செர்பிய பெருந்தேசிய இன வெறியையும் கட்டவிழ்த்து விட்டு சிறுபான்மைத் தேசிய இனங்களின் மீது போர் தொடுத்து ஒடுக்கினர். "அகண்ட செர்பியா" எனும் தேசிய இனவெறி யோடு செர்பியர்கள் நடத்திய காட்டுமிராண்டி தனத்தால் யூகோஸ்லாவியா இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

## முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான ஹேக்கிலுள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம்

(International Criminal Tribunal for the former Yugoslavia-ICTY)

1992-95 உள்நாட்டுப் போரின் போது Republica Srpska இல் முன்னாள் பொஸ்னிய சேர்பிய இராணுவத்தின் தலைமை அதிகாரியாகயிருந்த ராட்கோ மிலாடிக் 2011இல் நெதர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஹேக்கில் போர்க்குற்றங்களுக்காக விசாரணைக்கு அங்கு உட்படுத்தப்பட்டார்.

69 வயதான மிலாடிக் 2011மே 26ம் திகதி சேர்பியப் பாதுகாப்புப் படைகளால் ஜனாதிபதி போரிஸ் டாடிக்கின் ஜனநாயகக் கட்சி அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டார். இனப் படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை அவர் எதிர்கொள்கிறார். இவை முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான ஹேக்கிலுள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தால் (International Criminal Tribunal for the former Yugoslavia-ICTY) ஜூலை 24, 1995இல் அவர் மீது சுமத்தப்பட்டன. சிரெப்ரெனிகாவில் 8,000 முஸ்லிம் ஆண்களையும் சிறுவர்களையும் படுகொலைக்கு உட்படுத்தப்பட்டதற்கு தூண்டி

# அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகளால் திரட்டப்பட்ட இரகசியத் தகவல்கள்



**அமெரிக்க** புலனாய்வு அமைப்புகள் கோரிய இரகசிய தகவல்கள் குறித்த பட்டியலை கூகுள், யாகூ, பேஸ்புக், மைக்ரோசொப்ட் ஆகிய நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன.

நட்பு நாடுகள், எதிரி நாடுகள் என்ற வித்தியாசமின்றி உலக நாடுகள் முழுவதையும் அமெரிக்கா உளவுபார்த்த விவகாரம் ஒன்றன்பின் ஒன்றாக வெளியாகி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி வருகின்றன. அந்தவரிசையில் இணையத்தள ஜாம்பவான்களான கூகுள், யாகூ, பேஸ்புக், மைக் ரோசாப்ட் நிறுவனங்களிடம் இருந்து பெருவாரியான இரகசிய தகவல்களை அமெரிக்க அரசு அமைப்புகள் உறிஞ்சி எடுத்துள்ளன.

அந்த நிறுவனங்கள் அனைத்தும் அமெரிக்காவை தலைமை யிடமாகக் கொண்டு செயற்படுகின்றன. இதனால் வெளிநாட்டு உளவுப் பார்ப்பு சட்டத்தின் (எப்.ஐ.எஸ்.ஏ.) மூலம் பெரும்பாலான நிறுவனங்களை மிரட்டி கொத்துக்கொத்தாக தகவல்கள் சேகரிக் கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் உலகம் தழுவிய உளவுவேட்டையை அந்நாட்டின் உளவு அமைப்பான என்.எஸ்.ஏ.வின் முன்னாள் ஊழியர் ஸ்னோடென் ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த இணையத்தளங்கள், அமெரிக்க அரசை எதிர்த்து அந்த நாட்டு நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்தன. இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க நீதித்துறை அமைச்சகத்துக்கும் இணையத்தள நிறுவனங்களுக்கும் இடையே நீண்டநாள்களாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவந்தது. இதில் அண்மையில் சுமூக உடன்பாடு எட்டப்பட்டது.

அதன்படி அமெரிக்க அரசு கோரிய இரகசிய தகவல்கள் குறித்த விவரங்களை இணையத்தள நிறுவனங்கள் பகிரங்கமாக வெளியிட நீதித்துறை அனுமதி அளித்தது. எனினும் முழுமையான விவரங்களை வெளியிடாமல் மேலோட்டமான புள்ளிவிவரங்களை மட்டுமே வெளியிடவேண்டும், அதுவும் 6 மாதங்களுக்கு முந்தைய புள்ளிவிவரங்களை மட்டுமே வெளியிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் நீதித்துறை அனுமதி வழங்கியது.

இதைத் தொடர்ந்து பேஸ்புக், கூகுள், மைக்ரோசொப்ட் ஆகிய இணையத்தள நிறுவனங்கள் அமெரிக்க அரசுகோரிய தகவல் புள்ளிவிவரங்களை வெளியிட்டன. கடந்த 2013 ஜனவரி முதல் ஜூன் வரை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் 15,000 கணக்குகள் தொடர்பாக 1000 தகவல்கள் கோரப் பட்டுள்ளன. இதில் பெரும்பாலான கோரிக்கைகள் எப்.பி.ஐ. புல னாய்வு அமைப்பிடம் இருந்து வந்துள்ளன.

இதே காலகட்டத்தில் பேஸ்புக் சமூக வலைத்தளத்திடம் அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் சார்பில் 7000 தகவல்கள் கோரப்பட்டுள்ளன. மிக அண்மைக் காலத்தில் கோரப்பட்ட தகவல் கள் குறித்து 2014 பிற்பாதியில் பட்டியல் வெளியிடப்படும் என்று அந்த நிறுவனம் தெரி வித்துள்ளது.

கூகுள் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 2013ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 10,000 பயன்பாட்டாளர்களின் கணக்குகள் தொடர்பாக 1000 கோரிக்கைகளும் 2012-ம் ஆண்டில் 13 ஆயிரம் கணக்குகள் தொடர்பாக 1000 கோரிக்கைகளும் வந்தன என குறிப்பிடப்பட்டுள்ளது.

யாகூ நிறுவன பயன்பாட்டாளர் களில் மிக குறைவான தகவல்கள் மட்டுமே கோரப்பட்டன என்று அந்த நிறுவனம் விளக்க மளித்துள்ளது. அமெரிக்க புலனாய்வு அமைப்புக்களால் கோடிக்கணக்கில் இரகசிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன, அவை மூடி மறைக்கப்படுகின்றன என்று பன்னாட்டு சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# ஸ்மாட் போனில் ஒன்லைன் செய்திகளுக்கு...




ஸ்மார்ட் போன் வாடிக்கையாளர்களுக்காக ஒன்லைன் செய்தித்தாளுக் கான அப்ளிகேஷனை பேஸ்புக் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. பேஸ்புக் நிறுவனம் வெளியிடும் முதல் தயாரிப்பு இதுவாகும்.

ஒன்லைன் செய்தித்தாளை பேஸ்புக் நிறுவனம் வெளியிட உள்ளது என்ற செய்தி பல மாதங்களாகக் கசிந்து கொண்டே இருந்தது. தற்போது அது உண்மையாகியுள்ளது. ஸ்மார்ட் போன் வாடிக்கையாளர் கள் பயன்படுத்தும்விதத்தில், ஒன்லைன் செய்தித்தாளுக்கான 'ஒப்' -ஐ பேஸ்புக் வெளியிட்டுள்ளது.

உறுத்தாத லே-அவுட் முறையில் மிகவும் அழகான தாக இந்த அப்ளிகேஷன் இருக்கும் என பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், வாடிக்கையாளர்கள் தங்களின் சொந்த செய்தியையும் இதில் இணைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐ-போன் வாடிக்கையாளர்கள் வரும் 3ஆம் திகதி முதல் இந்த அப்ளிகேஷனைப் பயன்படுத்த முடியும்.

பல்வேறுவிதமான செய்திகளிலிருந்து, வாடிக்கையாளர் தமக்குத் தேவையான குறிப்பிட்ட ரக செய்திகளை மட்டுமே பின் தொடரும் வசதி இதில் உள்ளது. உணவு, விளையாட்டு, அறிவியல் என பல்வேறு தலைப்புகளில் செய்திகளைப் படிக்க லாம். பிரசித்த பெற்ற பல்வேறு வெளியீட்டாளர்களின் செய்தி, கட்டுரைகளையும் இதில் காணமுடியும்.

இதில் எந்தெந்த நிறுவனங்கள் கூட்டாளியாக இருக்கும் என்பது அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. ஆயினும், இது தொடர்பான வீடியோ விளம்பரத்தில் நியூயோர்க் டைம்ஸ், டைம், யு.எஸ்.ஏ டுடே, ஹபிங்டன் போஸ்ட் உள்ளிட்ட செய்தித் தாள்களின் செய்திகள் வாசிக்கப்படுவது காண்பிக்கப்படுகிறது.

பேஸ்புக் சமூக இணையத்தளத்தின் நியூஸ் பீட் பகுதியில் இருந்தும் தகவல்கள் பெறப்படுகின்றன. இத்தகவல்கள் பேஸ்புக் நிறுவனத்தின் வலைப்பூவில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# அணுசக்தியும் புவி வெப்பமாதலும்

## காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் (Climate change) என் பது இன்று பல ஊடகங்களிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு சொல். குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் காலநிலை அளவீடுகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களையே காலநிலை மாற்றம் என்கிறார்கள். இன்று சுற்றுச் சூழலில் ஏற்படும் பல மாற்றங்களுக்கு இந்த காலநிலை மாற்றமும் ஒரு முக்கியமான காரணம்.

நதிகள் வற்றிப்போவதற்கும், மழை பொய்த்துப் போவதற்கும் எதிர்பாராத சமயங்களில் மழை பெய்வதற்கும் காலநிலை மாற்றம் முக்கியமான காரணம் என்று அறியப்பட்டிருக்கிறது.

கடந்த நூற்றாண்டில்தான் காலநிலை மாற்றத் தின் தாக்கம் கடுமையாக உணரப்பட்டிருக்கிறது. வரும் நாட்களில் காலநிலை மாற்றம் சர்வதேச சமூகம் சந்திக்கக்கூடிய ஒரு முக்கிய பிரச்சினை யாக உருவெடுத்துக்கொண்டிருக்கிறது. காலநிலை மாற்றம், பொருளாதார வளர்ச்சிக்குக்கூட சவாலாக அமையும் என்று சமீபத்தில் வெளியான ஓர் ஆய்வு சொல்கிறது.

### இந்தக் காலநிலை மாற்றத்திற்கான காரணங்கள் என்ன?

இன்றைக்கு காலநிலை மாற்றம் உருவாக இயற்கைக் காரணங்கள் தவிர, மனித செயற்பாடு களே பெருமளவில் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக மனித செயற்பாடுகளால் பூமிவேகமாக வெப்பமடைவதும் முக்கியமான காரணம்.

பூமியின் மேற்பரப்பில் ஒரு படலம்போல இருக்கும் பசுங்குடில் வாயுக்கள் (Greenhouse Gases) அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால், இந்த வாயுக்கள் கிரகித்துக்கொள்ளும் சூரிய வெப்பத்தின் அளவும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

பசுங்குடில் வாயுக்களின் அடர்த்தி அதிகரிக்க மனித செயற்பாடுகளே காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. புதைப்படிம எரிபொருட்களை எரிப்பது, அவற்றின்மூலம் மின்சாரம் தயாரிப்பது, உரங்களைப் பயன்படுத்துவது, காடுகளை அழிப்பது, மரங்களை வெட்டுவது உள்ளிட்ட பல மனித செயற்பாடுகளால் பசுங்குடில் வாயுக் களின் அடர்த்தி அதிகரித்து, புவி வேகமாக வெப்பமடைந்து வருகிறது.

(தொடரும்...)

# சத்யா நாதெள்ளாவின் ஆசை



மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவராக வேண்டு மென்று மிகத் தீவிரமாக ஆசைப்பட்டேன் என சத்யா நாதெள்ளா கூறியுள்ளார்.

மென்பொருள் துறையில் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள அமெரிக்காவின் மைக்ரோ சொ.'.ப்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சத்யா நாதெள்ளா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது பேட்டி மைக்ரோசொப்ட் நிறுவன இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், இப்பொறுப் பில் என்னால் சாதிக்கமுடியும். எனது இப்பதவியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதும் எனது நோக்கம்.


இப்போதுள்ள நிலையை நான் அடைந்திருப்பதற்கு எனது தீவிரமான செயல் விளைவுகள்தான் காரணம். மனிதசக்தியால் முடியாதது எதுவும் இல்லை. எங்களிடம் 13 இலட்சம் பேர் உள்ளார்கள். மென்பொருள் துறையில் உலகுக்கு பல நன்மை தரும் விஷயங்களை எங்களால் தரமுடியும்.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும். அதேநேரத்தில் நிறுவனத்தின் வர்த்தகத்தையும் இதேபோல முன்னெடுத்துச் செல்வோம். நவீன தொழில் நுட்பத்தின் மூலமும், கண்டுபிடிப்புகள் மூலமும் நாம் அனைவருமே ஒவ்வொரு நாளுக்கும் நம்மை அறியா-மல் புதுப்பிக்கப்பட்டுவருகிறோம். வாழ்க்கை முழுவதும் புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளும் மாணவனாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன் என நாதெள்ளா கூறியுள்ளார்.

சத்யா நாதெள்ளாவின் ஆண்டு சம்பளம் ரூ.112 கோடி யாகும். மைக்ரோசொப்ட் நிறுவனம் வழங்கும் போனஸ், நிறுவனத்தின் பங்கு ஆகியவை இதில் அடங்கும். 46 வயதாகும் சத்யா நாதெள்ளா மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் 22 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார்.

நிறுவனத்தின் ஒன்லைன் சேவை விளம்பரத்துறை, சேவை உள்ளிட்ட வெவ்வேறு துறைகளில் சத்யா நாதெள்ளா பணியாற்றியுள்ளார். அமெரிக்காவில் கிரிக்கெட் பிரபலமாக இல்லை என்றாலும், சத்யா நாதெள்ளா தீவிர கிரிக்கெட் ரசிகர் ஆவார்.

# தொடு திரையால் பாதிப்பு



ஸ்மார்ட் போன்கள், ரெப்லட் கருவிகள் போன்றவற்றை பிள்ளைகள் அதிகநேரம் பயன்படுத்துவது நல்லதல்ல என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள்.

இந்தப் பழக்கம் அடிமைத்தனத்தைத் தூண்டி, பிள்ளைப்பராய அபிவிருத்தியைப் பாதிப்பதாக அவுஸ்ரேலிய உளவியல் நிபுணர் ஜொசலின் ப்ருவர் தெரிவித்துள்ளார்.


கூடுதலான நேரம் திரையைப் பார்த்துக்கொண்டிருக்கும் சமயம் மூளையில் ஒருவகை இரசாயனங்கள் கூடுதலாக சுரக்கின்றன. இந்தப் போக்கு பாவனையாளர்களை பதற்றமான நிலைக்கு இட்டுச்சென்று, புறவுலகின் விடயங்களில் இருந்து தனித்துவிடச் செய்கிறதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேஸ்புக், ட்விற்றர் முதலான பிரயோகங்களின் கூடுதலான பயன்பாடு நீண்டகால அடிப்படையில் மூளையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிகிறது.




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அதிசயக் குதிரை



**கிருஷ்ண** தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப் படை வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரி களில் ஒருவர் ஒரு யோசனை சொன்னார். அதன்படி, ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனிபோடுவதற்கு ஒரு அளவு பணமும் கொடுக்கப்பட்டுவந்தது. அத்தொகையைப் பெற்றுக்கொண்டு, குதிரையை நன்கு உணவளித்து வளர்த்துவந்தார்கள் மக்கள்.

அதேபோல் தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல்போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய துவாரம் வைத்திருந்தான்." அந்த துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக்கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக, நோஞ்சானாக இருந்தது. குதிரைக்குத் தீனி வாங்கிப்போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான்.

ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி, குதிரைகளை அரண் மனைக்கு வரவழைத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன.

மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டுவரவில்லை" என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராமனோ "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால்தான் இங்கே கொண்டு வரவில்லை." என்றான்.

"குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்து அனுப்புகிறேன்" என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார்.

குதிரைப் படைத் தலைவருக்கு நீண்ட தாடியுண்டு. குதிரைப் படைத் தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத்தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்கு குதிரையின் வாயில் குதிரைப்படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும், தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன், "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகியிருக்கும்" என்றான்.

இதைக்கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்துவிட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்துவிட்டார்.

## வாரம் ஒரு திருக்குறள்




**பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே யுள.**

ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுக்கும் தமக்கும் இருந்த பழைய உறவைப் பாராட்டிப் பேசும் பண்புகள் சுற்றத்தாரிடம் உண்டு.

குறள்:521

## செஞ்சரி




கிரிக்கெட்டில் 100 ரண்களை எட்டிப்பிடித்தால் செஞ்சரி (சதம்) அடித்தார் என்று கூறுவதைப்போல "கேரம் விளையாட்டிலும் செஞ்சரி" என்ற வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. அதாவது கேரத்தில் சிவப்புக் காயைத் தொடர்ந்து 9 கறுப்பு அல்லது வெள்ளைக்காய்களை வீழ்த்துவது செஞ்சரி என்று அழைக்கப்படுகிறது.

## நெருப்பு வளையம்




எப்போது வெடிக்கலாம் என்ற நிலையில் இன்று உலகில் உள்ள எரிமலை களின் எண்ணிக்கை 500. இதில் மூன்றில் ஒரு பங்கு எரிமலைகள் பசுபிக் கடல் பகுதியில் இருக்கின்றன. இதனால் இப்பகுதி நெருப்பு வளையம் என்றழைக்கப்படுகிறது.

## உணவு சேகரிப்பு



பல்லி போன்ற ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் தங்களது நாக்கினால் பூச்சிகளைச் சுண்டி இழுத்துப் பிடிக்கும். சிலசமயம் நாக்கில் ஊறும் திரவத்தால் தரையைத் தொட்டு இவை உணவைச் சேகரித்துக் கொள்ளும்.

## பச்சோந்தி!



இடத்திற்குத் தகுந்தாற்போல் நிறத்தை மாற்றிக் கொள்வது பச்சோந்தி என்பது தான் நமக்குத் தெரியும். ஆனால், அதன் இரண்டு கண்களும் ஒரே சமயத்தில் இரண்டு வேறு வேறு பக்கம் இரண்டு காட்சி களைப் பார்க்கும் திறன்கொண்டவை.

## நேராகச் செல்ல முடியுமா?



பாம்புகளால் நேராகச் செல்ல முடியாது. வளைந்து நெளிந்துதான் செல்லும். ஆனால் சைட் வைண்டர்ஸ் SIDE WINDERS என்னும் பாம்பினம் வ்யிற்றுப் பகுதியால் தாவித்தான் ஓடுமாம். இது ஓடிய இடம் கோடு போலவே தரையில் பதிந்திருக்கும்.


## பனிச்செடி



பனி படர்ந்த மலை களில் பொதுவாகச் செடிகள் எதுவும் வளராது. ஆனால் இமயமலையின் சிகரங்களில் ஒன்றான 'காஞ்சன் ஜங்கா' (இதன் உயரம் 25,000 அடிகளாகும்) முழுவதும் பனிக்கட்டிகள் மூடிக் கிடக்கும்.


இங்கு மட்டும் 'ஐஸ் லார்க்சர்' என்னும் ஒருவகைச் செடிகள் பசுமையாக வளர்ந்து அழகான வண்ணமலர்களுடன் பூத்துக் குலுங்குகிறது!

## வைப்புழி



வங்கிகளில் உள்ள லொக்கர் களை பெட்டகம் என்று சொல்லுகி றோம். ஆனால், சங்க காலத்திலேயே அதற்கு ஒரு நல்ல சொல் வழங்கியிருக்கிறது. அது. வைப்புழி. வைப்புழி என்றால் பொருள் வைக்கும் இடம் என்று பொருள். திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களில் வைப்புழி என்கிற இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 25.02.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1031**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1029**

எம்.மொறிஸ்,
கடற்கரை வீதி, மன்னார்.


பரிசுக்குரியவர்: 1029

பாராட்டுக்குரியவர்கள்


01. த.சிந்துஜன், உடப்பு, புத்தளம்.
02. எம்.பானுஜா, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
03. ம.தேவகி, வள்ளுவர்புரம், கிளிநொச்சி.
04. த.சாமந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
05. மு.செந்தூரன், பூவரசங்குளம், வவுனியா.
07. இ.சாளினி, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
08. ஆர்.டானியல், குருநகர், யாழ்ப்பாணம்.

## வரைந்து பாருங்கள்!


ஆய்லரின் வரைகோல தாத்பர்யங்கள் பல பண்டைகால புதிர்களின் சாராம்சமும்கூட. உதாரணமாக முகமதீயர்கள், கிறித்துவர்கள், இந்துக்கள், பிதகோரியர்கள், கபாலிஸ்டுகள் எனப் பலராலும் ஒரு வகையில் முக்கியமாக கருதப்படும் இந்த வரைகோலத்தை, கையை எடுக்காமல் போடமுடியும்.



ஆனால், அதைவிட எளியது என்று தோன்றும். இதை வரைய கையை ஒருமுறை எடுக்க வேண்டும்.



நீட்சியாக, மிகவும் கடினமோ என்று பார்வைக்கு தோன்றும் இதை வரைய கையை எடுக்க வேண்டாம். முயன்று பாருங்கள்.



**இனி...**

**செய்திகள் வாசிக்கும் இந்த உதடுகளை நான் வாசிக்கட்டுமா." என்றான். பதிலுக்கு காத்திருக்காமல் அவளின் உதடுகளை நோக்கிக் குனிந்தான். எதிர்ப்புக்கு பலன் இல்லாமல் பணிந்தாள்.**



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி 25**

**உகண்டா** மக்களுக்கு வெள்ளையர்களை வம்புக்கு இழுப்பதும் கறுப்பனே உயர்ந்தவன் என்று அமீன் பேசுவதும் பிடித்தமாக இருந்தது.

வானொலி தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் தினமும் காலையில் அமீன் எங்கிருந்தாலும் அங்கு இராணுவ வாகனத்தில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுவிடுவர்.

செய்திகளை எப்படி அமைக்க வேண்டும், எதைக் கூறவேண்டும் என்றெல்லாம் அரைமணி நேரம் விளக்கமளிப்பான்.

உகண்டா வானொலி, தொலைக்காட்சி செய்திகள் அனைத்தையும் தவறவிடாமல் கேட்பான் இடி அமீன்.

தொலைக்காட்சி செய்தி வாசிக்கும் பெண் ஒருவர்மீது கண் வைத்தான்.

நேரில் அழைக்கப்பட்டாள்.

"நன்றாக வாசிக்கிறாய்!" என்றான். அவள் பயந்து போயிருந்தாள்.

"வாசிக்கும்போது உன் உதடுகள் அசையும் அழகே, தனி. அந்த அசைவுக்கு இந்த அமீன் அடிமை தெரியுமா?"

அவளுக்கு, புரிந்துவிட்டது. அமீனின் இரும்புக்கரம் அவள் தோளில் விழுந்தது. இன்னொரு கரம் அவள் முகத்தை நிமிர்த்தியது.

வாசிக்கும் இந்த உதடுகளை நான் வாசிக்கட்டுமா," என்றான். பதிலுக்கு காத்திருக்காமல் அவளின் உதடுகளை நோக்கிக்குனிந்தான்.

எதிர்ப்புக்கு பலன் இல்லாமல் பணிந்தாள்.

மறுநாள் உகண்டா தொலைக் காட்சி நிலையத்தின் முக்கிய பதவி ஒன்றுக்கு அவள் உயர்த்தப்பட்டாள்.

முன்னாள் ஜனாதிபதி ஒபேடே யின் முன்னாள் செயலாளர் சியம்பாவை ஓய்வெடுக்க அனுப்பிய அமீன், பின்னர் ஒரு நாள் அழைத்தான்

"ஓய்வு எப்படி? ஜாலியாக அனுபவித்தீரா?" என்றான். பெரிதாக புன்னகைத்தபடி.

பரவாயில்லை! என்றார் சியம்பா. தன் காதலியை அமீன் தன் கண்ணெதிரேயே சுட்டுக்கொன்ற காட்சி இப்போதும் அவர் மனக் கண்ணில் நின்று மிரட்டிக் கொண்டிருந்தது.

"அனுபவிக்கவேண்டிய நேரத்தில் அனுபவிக்கத் தெரியாதவன் மடையன். என்னைப் பாருங்கள். இப்போதுதான் ஒருத்தியை ருசி பார்த்துவிட்டு வருகிறேன். தானாக வருகிறார்கள்; விடுவானேன்?" உரத்து நகைத்தான்.

தன் ஆசனத்தைவிட்டு எழுந்தவன் "வாரும் என் பின்னால்" என்றுவிட்டு முன்னாள் நடந்தான்.

அவனது பிரமாண்டமான அலுவலக அறையின் ஒரு மூலையில் சிறிய கதவு ஒன்று இருந்தது.

அதனைத் தள்ளித் திறந்தான். தன் உடம்பை வளைத்து அவன் நுழைய, சியம்பாவும் குனிந்து உள்ளே செல்லவேண்டி இருந்தது.

கதவுதான் சிறிதே தவிர, உள்ளே ஒரு சொர்க்கமே விரிந்தது.

சொகுசான கட்டில்கள் போடப் பட்டிருந்தன. விலை உயர்ந்த விரிப்புக்கள் அவற்றின் மேலே விரிக்கப்பட்டிருந்தன. தாராளமாக மூன்று பேர் ஒன்றாகப் படுத்து உருளக்கூடிய பிரமாண்டான கட்டில்கள்.

சுவர்களில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன. கட்டிலில் நடப்பதைக் கட்டிலில் கிடந்தபடியே கண்ணாடியில் காணலாம்.

சியம்பா திறந்த வாய்மூடவில்லை. அமீன் தன் இடிக்குரலில் "இங்கே ஒளிவில்லை; மறைவில்லை இன்ப லோகம். இங்கே உயர்வு இல்லை;



தாழ்வு இல்லை. சமத்துவமான உலகம் என்றான்.

சிறு குழந்தைபோல ஒரு கட்டிலில் தாவி அமர்ந்தான். அது ஸ்பிரிங் கட்டில். ஒவ்வொரு கட்டிலுக்கு ஒவ்வொரு குணம் இருக்கிறது. தெரியுமா? என்று கண்ணடித்தான்.

சியம்பா அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

"கிடைக்கும்போது அனுப்விக்க வேண்டும். அனுபவிக்கும்போது கிடைக்கவேண்டும். அதற்கு நற்பயன் செய்திருக்கவேண்டும். நான் செய்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?" என்று திடீரென்று கேள்வியை வீசினான் அமீன்.

இடி அமீன் செயலாக இருந்தாலும், பேச்சாக இருந்தாலும் அதன் அர்த்தம் யாருக்கும் புரிவதில்லை.

அவன் ஒரு கேள்வி கேட்டால், அதனை எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும், கேலியா, கிண்டலா உண்மையாகவே கேட்கப்படுகிறதா? அல்லது உள்ளே வஞ்சகத்துடன் வேறு ஒரு திட்டத்துடன் ஆழம் பார்க்கிறானா? என்பதெல்லாம் தெரியாமல் எதிரே நிற்பவர் தவித்துப் போவார்.

சியம்பாவும் வெலவெலத்துப் போனார். ஒருவிதமாகச் சமாளித்து "ஆமாம். நாங்கள் நினைப்பதெல்லாம் நடக்கும்" என்றார்.

உடனே அமீன். தனக்கும் தமாஸ் பண்ணத்தெரியும் என்பதுபோல "அதிகம் ஐஸ் வைக்கவேண்டாம் சியம்பா, நான் உம்மை சுட நினைக்கிறேன் என்று வைத்துக்கொள்ளும். உடனே நீர் சுடப்பட்டு விடுவீரா? செத்துத்தான் போவீரா? துப்பாக்கி வேண்டும். தோட்டா வேண்டும், சுட விரல்வேண்டும்" என்று சிரித்த சிரிப்புக்கு சியம்பாவின் அடி வயிற்றில் பயம் பந்தாக உருண்டது.

தன்னைக் கொல்லப்போகிறானோ என்று பயந்துபோன சியம்பாவின் மனக் கண்ணில் மனைவி பிள்ளைகள் எல்லாம் தோன்றி மறைந்தனர்.

அந்த நேரத்தில் இடி அமீனின் குரல் ஒலித்தது. "உம்மை எனது அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்போகிறேன். இல்லை நியமித்துவிட்டேன். அது தான் என் கட்டிலறைவரை கொண்டு காண்பித்தேன்.

அந்தரங்கச் செயலாளருக்கே தெரியாத அந்தரங்கம் இருக்கக் கூடாதல்லவா?" என்று கண்ணடித்தான்.

சியம்பாவால் நம்பமுடிய வில்லை. ஆனாலும் அமீன் தொடர்ந்து நடந்துகொண்ட முறையில் இருந்து அமீன் பொய் சொல்லவில்லை என்று நிம்மதி பிறந்தது.

**(தொடரும்)**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 560

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | ■ | ■ | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **25.02.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 560
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 558- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பெ | 2 ரி | 3 ய | 4 நா | 5 ய | 6 கி |
| 7 ரு | 8 அ | ■ | 10 ணி | 11 கா | 12 ர |
| 13 ந் | ■ | 15 ல | ■ | 17 ம் | 18 சி |
| 19 த | ■ | 21 ம் | 22 ர | 23 வி | 24 டா |
| 25 மை | 26 லி | 27 ல் | 28 து | ■ | ■ |
| 31 ன் | 32 ற | 33 தி | 34 த் | 35 ளை | 36 மூ |

**இடமிருந்து வலம்**

01. ஒரு மலர். கடைசி மூன்றெழுத்தும் சத்தியத்தை கிரகிப்பவர்களில் தலை சிறந்த ஒருவரைக் குறிக்கும்.
07. அவுஸ்திரேலிய காட்டு மிருகங்களுக்கு 'கங்காரு' என்று பெயர் வைத்த ஆங்கிலேயர். (திரும்பியுள்ளது)
10. எல்லோருக்கும் தெரிந்ததொன்று. இது சர்வரோக நிவாரணி என ஆராய்ச்சிகளின் பின் கண்டறியப்பட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
13. இசகு பிசகு. ( குழம்பியுள்ளது)
17. சேர்ப்பு. கடை இரண்டெழுத்தும் விடுபட்டுள்ளது.
19. வேட்டி வகையில் ஒன்று.
23. நற்குணத்தோன்.
27. வாயகன்று பூமியுள் சென்றிருக்கும் கடற்பிரிவு (திரும்பியுள்ளது)
31. குளிர்தேச நாடொன்று (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. வஞ்சகன், கபடநாடகன்.
02. சிலுவை (குழம்பியுள்ளது)
04. ஒருகாலம்.
05. பரதேசி. (குழம்பியுள்ளது)
06. விதுரர் திருதராட்டினனுக்கு அருளியது. ( திரும்பியுள்ளது)
27. ஒரு வாசனைப் பாக்கு. (திரும்பியுள்ளது)
28. தருப்பைப்புல். குதிரையின் பிடரி மயிர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 558 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**கா.அம்ருதா, முள்ளியவளை, முல்லைத்தீவு.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. தா.சர்வேஸ்வரன், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
02. மு.வதனா, மாசார், பளை.
03. ஆர்.காமினி, பிரதான வீதி, அம்பாறை.
04. சி.காந்திமதி, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
05. அ.கவிதா, திருநாவற்குளம், வவுனியா.
06. ஆர்.கானகன், கொழும்பு-16.
07. எம்.சஹானா, பிரதான வீதி, கண்டி.
08. கா.சத்தியா, குருநகர், யாழ்ப்பாணம்.
09. ம.பவானி, புலோலி தெற்கு, புலோலி.





ஒரு மோதல் ஒரு காதல்

# லண்டன் மாப்பிள்ளையை திருமணம் செய்வேன் - ஆண்டரியா!

பச்சைக்கிளி முத்துச்
படத்தில் அறிமுகமாகி பின்னர் ஆயிரத்
ஒருவன், விஸ்வரூபம், என்றென்றும்
புன்னகை போன்ற படங்களில் நடித்த
நடிகை ஆண்ட்ரியா சமீபத்தில் ஒரு த
தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் மனம் திறந்து பல விஷயங்களை கூ
அவற்றில் சில. இங்க என்ன சொல்லுது படத்தில் நான் நடித்த காட்சிகள் மொத்த
நான்கு மணிநேரம்தான் எடுக்கப்பட்டது. இதில் நான் இரண்டு மணிநேரம் மட்டுமே
சிம்புவுடம் இருந்தேன். அதற்கு முன்பும், அதன் பின்பும் நான் சிம்புவை பார்த்ததில்
பின் எப்படி காதல் உண்டாகும். சிம்புவின் போன் நம்பர்கூட என்னிடம் இல்லை.

அனிருத்துக்கு உதட்டு முத்தம் கொடுத்தது உண்மைதான். ஆனால் அதை அ
போட்டோ எடுத்து இணையத்தில் வெளியிடுவார் என நான் எதிர்பார்க்கவில்லை.
திருமணம் செய்தால் லண்டன் மாப்பிள்ளையைத்தான் திருமணம் செய்வே
எனக்கு லண்டனில் உள்ள இசைக்கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் எ
எனது குறிக்கோள்.

உதட்டு முத்தம் கொடுத்து நடிக்கும் அளவுக்கு தமிழ் நடிகர்கள
இல்லை. அப்படி நடிக்க விரும்பினால் ரன்பீர் கபூருடன் நடிப்பே
பாசில் எனது சிறந்த நண்பர்களுள் ஒருவர். ந[illegible]
தோழிதான். விஸ்வரூபம் 2 படம் வெளிவந்த[illegible]
கண்டிப்பாக ஒரு கலக்கு கலக்குவேன்.

## மோகன்லாலின் வெற்றிப்படம்

கடந்த கிறிஸ்துமஸ் அன்று வெளியான மோகன்லால், மீனா நடித்த த்ரிஷ்ம் படத்தின் மொத்த பட்ஜெட்டே வெறும் 4.5 கோடி ரூபாய்தான். ஆனால் அந்த படம் இதுவரை ரூ.50 கோடி வசூல் செய்து மிகப்பெரிய வசூல் சாதனை செய்துள்ளது. இன்னும் பெரும்பாலான கேரள திரையரங்குகளில் ஹவுஸ்புல் காட்சிகளாக இந்த படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது.

ஓமன் நாட்டில் இந்த படம் தொடர்ந்து ஒரு மாதம் ஓடி சாதனை படைத்துள்ளது. இதுவரை எந்த ஒரு மலையாள படம் அந்நாட்டில் ஒரு வாரத்திற்கு மேல் ஓடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவாக நடித்துள்ள மோகன்லாலின் நடிப்பு, மீனாவின் ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பு, இயல்பான திரைக்கதை, அழுத்தமான கதை, இதமான இசை இவை அனைத்தும் ஒரே படத்தில் இணைந்ததால்தான் இந்த மாபெரும் வெற்றி கிடைத்ததாக இயக்குனர் தெரிவித்தார். இந்த படம் தற்போது தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தியில் ரீமேக் செய்யப்பட இருக்கிறது. கடந்த 10 வருடங்களில் மோகன்லாலின் மிகப்பெரிய வெற்றிப்படம் இதுவே.



கம்பன் கழகம்

## நயன்தாராவால் தன் கொள்கைகளை தூக்கில் போட்ட இயக்குநர்

நயன்தாரா தற்போது தெலுங்கில் கஹானி ரீமேக்கான 'அனாமிகா' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை சேகர் கம்முலா என்ற இயக்குனர் இயக்கிவருகிறார்.

இயக்குனர் சேகர் கம்முலா மிகவும் ஸ்டிரிக்டான இயக்குன
இவரது படங்களில் நடிக்கும் நடிகர், நடிகைகள் யாரும் கேர
உபயோகிக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பவர். கே
கொடுத்தால் நடிகைகள் மணிக்கணக்கில் உள்ளே இருந்த
படப்பிடிப்புக்கு வராமல் தாமதம் செய்வதால் இந்த முறை
அவர் கடைப்பிடித்து வந்தார். ஆனால் நயன்தாராவுக்கு
தயாரிப்பாளர்களும் கேரவன் தயார் செய்துகொடுப்பார்
இந்த படத்தின் படப்பிடிப்பின்போதும் நயன் கேரவன்
கேட்டு இயக்குனரை நச்சரித்தார். ஆனால் இயக்குன
கண்டுகொள்ளவில்லை.

பின்னர் நயன்தாரா, முக்கியமான காட்சி எடுக்
ஒருநாளில் கேரவன் இருந்தால்தான் நடிக்கவருவே
இல்லாவிட்டால் படப்பிடிப்புக்கு வரமுடியாது என
கூறியதால் அதிர்ச்சி அடைந்த[illegible] இயக்குன[illegible]
வழியின்றி கொள்கைகளை தூக்கி காற்றில்
நயனுக்கு கேரவன் ஏற்பாடு செய்தார். நய
மிரட்டலா, படக்குழுவினர் மத்தியில் சிறிது
ஏற்பட்டுள்ளது.

## நடிகையின் சுயசரிதையில் வி.ஐ.பி.களின் அந்தரங்கம்

சுயசரிதை எழுதிவரும் கவர்ச்சி நடிகைக்கு மங்காத்தா இயக்குனர் மேல் இன்னும் கோபம் தீரவில்லையாம். தனக்கு ஒரு படம் இயக்கித்தருவதாக பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றிய அவரை தனது சுயசரிதையில் தாறுமாறாக எழுதத் திட்டமிட்டுள்ளாராம். புகைப்பட ஆதாரத்துடன் அவர் இரவுப்பார்ட்டியில் என்னென்ன எய்தார் என்பதை விலாவரியாக எழுதிவருகிறார். அவரை பற்றி மட்டுமின்றி அவரது சகோதரர், தந்தை ஆகியோரும் இந்த சுயசரிதையில் வருகின்றனர்.

இதை பற்றி கேள்விப்பட்ட இயக்குனர் எவ்வித டென்ஷனும் இல்லாமல் இருக்கின்றாராம். உண்மையைத்தானே எழுதுகிறார், எழுதினால் எழுதிவிட்டு போகட்டும். இந்த மாதிரியான செய்திகள் வந்தால் நடிகர், நடிகைகளுக்குத்தான் பாதிப்புவரும், நான் ஒரு முன்னணி இயக்குனர். எனக்கு எவ்வித பாதிப்பும் வராது எனத் தைரியமாகச் சொல்லித் திரிகிறாராம் இயக்குனர்.

கவர்ச்சி நடிகையின் இந்த சுயசரிதையில் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் ஆகியோர் பலரும் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது.



அங்குசம்

## கிருஷ்ணாவுக்கு டும் டும் டும்

அலிபாபா, கழுகு போன்ற படங்களில் நடித்தவரும், இயக்குனர் விஷ்ணுவர்தன் தம்பியுமான நடிகர் கிருஷ்ணா திருமணம் இன்று ஊட்டி அருகே நடந்தது.

ஊட்டி அருகில் உள்ள மேட்டுப்பாளையம் என்ற ஊரில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நடிகர் கிருஷ்ணா - கைவல்யா திருமணம் மிகச்சிறப்பாக நடந்தது. மணமகள் கைவல்யா, கோவையை சேர்ந்தவர். இவர் ஒரு சொப்ட்வேர் எஞ்ஜினியர் என்பது குறிப்பிடத்தக்கது. திருமணத்திற்கு யுவன்ஷங்கர் ராஜா, ராதாரவி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். கடந்த நவம்பரில் பெற்றோர் சம்மதத்துடன் கிருஷ்ணாவுக்கு, கைவல்யாவுக்கு நிச்சயதார்த்தம் கோவையில் மிகச்சிறப்பாக நடந்தது. மேலும் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை சென்னையில் உள்ள ஹோட்டல் ஹில்டனின் வரும் 10ஆம் தேதி நடக்க இருக்கிறது. வரவேற்பு நிகழ்ச்சிக்கு அஜீத் உட்பட பல முக்கிய கொலிவூட் வி.ஐ.பிக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நடிகர் கிருஷ்ணா தற்போது வானவரையன் வல்லவராயன் மற்றும் யாமிருக்க பயமேன் போன்ற படங்களில் நடித்து வருகிறார். மணமக்களுக்கு தேடிப்பார் இணையத்தளம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

## விஜய் ஜோ ப்ரியங்கா

ஜில்லா படத்தை அடுத்
முருகதாஸ் படத்தில் ந
படத்தை அடுத்து சி
படத்தில் நடிக்க
அக்ஷன் மற்றும்
விஜய்க்கு ஜே
சோப்ராவை
சிம்புதேவன்
முதலில் இ
ஜோடியாக நடிக்க
பேசப்பட்டது. அவர் நாள் ஒ
சம்பளம் கேட்டதால், அதிர்
வேறு நடிகையை ஒப்பந்தம்
கூறினார். தீபிகா படுகோனே
பட்ஜெட் அளவுக்கு இருந்த

தற்போது விஜய் ஜோடி
சோப்ராவிடம் பேசப்பட்டுவரு
ப்ரியங்கா, விஜய்க்கு ஜோடி
கொண்டார். ப்ரியங்கா சோப்
'தமிழன்' படத்தில்தான் அறி
குறிப்பிடத்தக்கது.

இந்த படத்தில் நடிக்க
கோடி சம்பளமாக பேசப்பட்ட
முதல் படமான தமிழன் பட
வாங்கிய சம்பளம் ரூ.35 இ
குறிப்பிடத்தக்கது. ப்ரியங்கா
புத்தாண்டு தினத்தில் சென்
ஒரு நட்சத்திர ஓட்டலில் நட
கோடி சம்பளம் பெற்றார் எ
அறிந்ததே...



# தேசிய விருது நடிகைக்கு பத்திரிகையின் மீது கோபம்

தேசியவிருது பெற்ற நடிகைக்கு இரகசியத் திருமணம் ஆகிவிட்டதாக தெலுங்கு தினசரி பத்திரிகை செய்தி ஒன்று வெளியிட்டிருந்தது. இதனால் அந்த ப்ரிய நடிகை கடும் அதிர்ச்சியில் இருக்கிறார். பிரியமான அந்த நடிகைக்கு தெலுங்கு தொழிலதிபர் ஒருவருடன் காதல் ஏற்பட்டு சமீபத்தில் இரகசியத் திருமணம் ஆகிவிட்டதாகவும், அவர் இப்பொழுது கர்ப்பமாக இருப்பதாகவும் ஒரு தெலுங்கு தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. இந்த செய்தியை பார்த்து கடும் அதிர்ச்சி அடைந்த நடிகையும் அவரது தாய்க்குலமும் தெலுங்கு மீடியாக்களை தொடர்புகொண்டு அந்த செய்தி பொய்யானது என்று விளக்கம் கொடுத்துவருகிறார்கள்.

ஒரு சில செய்தி நிறுவனங்கள் இதுபோன்ற செய்தியை வெளியிடுவதால் மொத்த மீடியாவையும் தவறாக நினைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும் தன்னுடைய திருமணத்தை இரகசியமாக நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் தைரியமாக உலகத்திற்கு தெரிவித்துவிட்டே திருமணம் செய்வேன் என்றும் கூறியுள்ளார்.



வாலிப ராஜா

# இங்க என்ன சொல்லுது

## திரை விமர்சனம்

அண்ணன், தம்பிகளான விடிவி கணேஷும், சிம்புவும் ஒருநாள் இரவில் வீட்டிற்கு வந்துகொண்டிருக்கும்போது, ஆபத்தில் இருக்கும் மீரா ஜஸ்மினை காப்பாற்றுகிறார்கள். இதனால் ஏற்பட்ட பழக்கம் காரணமாக சிம்புவையும், கணேசையும் தனது பிறந்தநாள் விழாவுக்காக அழைக்கிறார் மீரா ஜஸ்மின். பிறந்தநாள் விழாவில் விலையுயர்ந்த வைரமோதிரம் கொடுக்கும் சிம்புவிடம் தனது காதலை கூறுகிறார் மீரா. ஆனால் சிம்புவுக்கு ஏற்கனவே ஆண்ட்ரியாவுடம் நிச்சயதார்த்தம் ஆகிவிட்டதால் மீராவிடம் பதிலேதும் சொல்லாமல் போய்விடுகிறார். ஒருநாள் தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி எஸ்.எம்.எஸ் ஒன்றை சிம்புவுக்கு மீரா அனுப்ப, அதை ஆண்ட்ரியா பார்த்துவிடுவதால் மீரா, ஆண்ட்ரியா இடையே பயங்கர மோதல்.

இதனால் அதிர்ச்சியடைந்த மீரா, விடிவி கணேஷ் மீது பொலிஸ் புகார் கொடுக்கிறார். பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் சிம்புவை காப்பாற்றுவதற்காக மீரா ஜஸ்மினை திருமணம் செய்துகொள்கிறார் கணேஷ். அதன்பிறகு இருவரும் கணவன், மனைவியாக வாழ்ந்துகொண்டிருக்கும்போது, கணேஷுக்கு மயில்சாமியுடன் நட்பு ஏற்படுகிறது. மயில்சாமியுடன் சேர்ந்து சினிமா படம் எடுப்பதாக கூறி மீராவின் சொத்துக்களை எல்லாம் அழிக்கிறார் கணேஷ். இதனால் ஆத்திரப்படும் மீரா, கணேஷுடன் சேர்ந்து வாழ்ந்தாரா என்பதே க்ளைமாக்ஸ்.

கதாநாயகனுக்கு உரிய எவ்வித தகுதியும் இல்லாமல் ஒரு படத்தை தயாரித்தால் மட்டும் கதாநாயகனாகி விடலாம் என்று தப்புக்கணக்கு போட்டு படத்தை எடுத்துள்ளார் விடிவி கணேஷ். இவர் வரும் காட்சிகள் எல்லாமே பெரிய கொடுமையாக இருக்கிறது. ரன், சண்டைக்கோழி போன்ற படங்களில் அசத்தலான நடிப்பை கொடுத்த மீரா ஜஸ்மீனா இது என்றே சந்தேமாக இருக்கிறது. சிறிது நேரமே வரும், சிம்பு, சந்தானம், ஆண்ட்ரியா காட்சிகள் மட்டுமே படத்தின் ஒரே ஆறுதல்.

...கிளி முத்துச்சரம்
...ன்னர் ஆயிரத்தில்
...றென்றும்
...ரில் நடித்த
...தில் ஒரு தனியார்
...யங்களை கூறினார்.
...கள் மொத்தம்
...ம் மட்டுமே
...ப பார்த்ததில்லை.
... இல்லை.
...ல் அதை அனிருத்
...க்கவில்லை.
...ணம் செய்வேன்.
...கவேண்டும் என்பதே

...மிழ் நடிகர்கள் யாரும்
...டன் நடிப்பேன். பஹத்
...ன்னுடைய
...வூட்டை

## ...கைகளை ...க்குநர்

...ஹானி
...டித்து
...ன்ற

...ன இயக்குனராம்.
... யாரும் கேரவன்
...ருப்பவர். கேரவன்
...ள்ளே இருந்துகொண்டு,
... இந்த முறையை
...ன்தாராவுக்கு எல்லா
...துகொடுப்பார்கள்.
...ன் கேரவன்
...ல் இயக்குனர்

... காட்சி எடுக்கவேண்டிய
... நடிக்கவருவேன்.
...முடியாது என்று
...யக்கு... வேறு
...கி காற்றில் வீசிவிட்டு,
...ய்தார். நயன்தாராவின்
...தியில் சிறிது பரபரப்பு

# எனக்கு காதலிக்க நேரம் இல்லை – சுருதிஹாசன்

சுருதிஹாசன் இந்தியில் வெல்கம் பேக் கப்பார் படங்களில் பிசியாக நடிக்கிறார். தெலுங்கில் ரேஸ்குர்ராம் படத்தில் நடிக்கிறார். தமிழ் பட வாய்ப்புகளும் வருகின்றன. கமலுடன் உத்தம வில்லன் படத்தில் நடிக்க சுருதி ஹாசனை அழைத்தனர். கால்ஷீட் இல்லாததால் மறுத்துவிட்டார். எனது தந்தையுடன் நடிக்க அழைப்பு வந்தது உண்மைதான். ஆனால் என்னிடம் கால்ஷீட் இல்லை. வேறு படங்களில் பிசியாக நடிப்பதால் திகதி ஒதுக்க முடியவில்லை. எனவே நடிக்க மறுத்துவிட்டேன். கடந்த சில நாட்களாக ஓய்வே இல்லாமல் நடித்துக்கொண்டு இருக்கிறேன். ஒரு படம் முடிந்ததும் அடுத்த படமென ஓடிக்கொண்டே இருக்கிறேன். என் சொந்த விஷயங்களைக்கூட கவனிக்க முடியவில்லை. தோழிகளிடமும் பேச முடியவில்லை. காதல் பற்றி கேட்கிறார்கள். எனக்குக் காதலிக்கக்கூட நேரம் இல்லை.



காதல் பஞ்சாயத்து

# ...ஜோடியாக ...ங்கா சோப்ரா

...த்தை அடுத்து விஜய் தற்போது ஏ.ஆர்.
... படத்தில் நடித்துவருகிறார். இந்த
... அடுத்து சிம்புதேவன் இயக்கத்தில் ஒரு
...ல் நடிக்க விஜய் முடிவுசெய்துள்ளார்.
...ஷன் மற்றும் காமெடி படமான இதில்
...விஜய்க்கு ஜோடியாக நடிக்க ப்ரியங்கா
... சோப்ராவை அணுகியுள்ளார் இயக்குனர்
... சிம்புதேவன்.
... முதலில் இந்த படத்திற்கு விஜய்
...யாக நடிக்க தீபிகா படுகோனேவிடம்
...வர் நாள் ஒன்றுக்கு ரூ.1 கோடி
...தால், அதிர்ச்சியடைந்த தயாரிப்பாளர்
... ஒப்பந்தம் செய்யும்படி இயக்குனரிடம்
... படுகோனே கேட்ட சம்பளம் படத்தின்
...க்கு இருந்ததால்தான் இந்த அதிர்ச்சி.
...ஜய் ஜோடியாக ப்ரியங்கா
...சப்பட்டுவருகிறது. கதையைக் கேட்ட
...க்கு ஜோடியாக நடிக்க ஒப்புக்
...ங்கா சோப்ரா, விஜய்க்கு ஜோடியாக
...ல்தான் அறிமுகமானார் என்பது
...
...ல் நடிக்க ப்ரியங்கா சோப்ராவுக்கு ரூ.8
... பேசப்பட்டதாக கூறப்படுகிறது.
...தமிழன் படத்தில் அவர்
...ம் ரூ.35 இலட்சம்தான் என்பது
... ப்ரியங்கா சோப்ரா கடந்த
...த்தில் சென்னையில் உள்ள
...ட்டலில் நடனமாட ரூ.6
... பெற்றார் என்பது அனைவரும்

# நஸ்ரியா உறவு முறிந்தது!

நடிகை நஸ்ரியாவுக்கு ஜோடியாக நடிக்கும் மம்முட்டி மகன் துல்கர் சல்மான், நஸ்ரியா எனக்கு சகோதரி மாதிரி எனப் பேட்டியளித்துள்ளார்.

காதலில் சொதப்புவது எப்படி என்ற படத்தை இயக்கிய பாலாஜி மோகனின் அடுத்த படமான 'வாயை மூடி பேசவும்' என்ற படத்தில் மம்முட்டி மகன் துல்கர் சல்மான் நடித்துவருகிறார். இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நஸ்ரியா நடித்துவருகிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்பின்போது நஸ்ரியாவும், துல்கரும் மிகவும் நெருக்கமாக இருப்பதாக கூறப்பட்டது. வெளிப்புற படப்பிடிப்புகளில் இருவரும் ஒரே அறையில்தான் தங்கினார்கள். ஆனால் தற்போது பாசில் மகன், பஹத் பாசிலுடன் நிச்சயதார்த்தம் ஆனபிறகு, நஸ்ரியாவை விட்டு சற்று ஒதுங்கியே இருக்கிறார் துல்கர் சல்மான். நஸ்ரியா உறவு குறித்து பத்திரிகையாளர்கள் யாராவது கேள்விகேட்டால், நஸ்ரியா எனது உடன் பிறந்த சகோதரி போல என பதிலளித்துவருகிறாராம்.

எனது அப்பாவுக்கு மகளாக பல படங்களில் நஸ்ரியா நடித்துள்ளதால், அவரை நான் எப்போது சகோதரி கண்ணோட்டத்துடன் தான் பார்த்ததாகவும், தங்களை பற்றி வரும் கிசுகிசுக்கள் ஆதாரம் இல்லாதவைகள் என்றும் கூறினார்.



# காதலர் தினம் 14

14 february LOVE 2014

## தேன் கிண்ணம்



### என் காதலி

சுட்டும் விழிச்சுடர் தான்,—கண்ணம்மா!
சூரிய சந்திர ரோ?
வட்டக் கரிய விழி,—கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப்—புடைவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில்—தெரியும்
நக்ஷத் திரங்க ளடி!

சோலை மல ரொளியோ—உனது
சுந்தரப் புன்னகை தான்?
நீலக் கட லலையே—உனது
நெஞ்சி லலைக ளடி!
கோலக் குயி லோசை—உனது
குரலி னிமை யடீ!
வாலைக் குமரி யடீ,—கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன்.

சாத்திரம் பேசு கிறாய்,—கண்ணம்மா!
சாத்திர மேதுக் கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே,—கண்ணம்மா!
சாத்திர முண்டோ டீ!
மூத்தவர் சம்ம தியில்—வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனோ டீ?—இது பார்,
கன்னத்து முத்த மொன்று!

மகாகவி பாரதியார்




## காதல் எது?



கண்ணே!
இனி நாம்
தாஜ்மஹாலில்
சந்திக்க வேண்டாம்
ஏனெனில்
இங்கே
ஒரு பணக்கார
மன்னன்
ஏழைகளின்
காதலை
ஏளனம்
செய்திருக்கிறான்.
வைரமுத்து

## காதலர் தின அழைப்பு

உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலராலும் பெப்ரவரி 14 அன்று கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும். இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்வது மரபாக இருக்கிறது. வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக் கொள்கிறார்கள்.



வேலண்டைன்ஸ் டே என்று உலகமெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினம் வேலண்டைன் பாதிரியாரின் நினைவாக கொண்டாடப்படுகிறது என்பது நம்பிக்கை.

கி.பி 270ஆம் ஆண்டு உரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்துகொள்ள தடை இருந்தது. திருமணம் செய்துகொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்துவிடும் என்பது அரசரின் நம்பிக்கை. இதனால் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக்கூடாது என்ற தடை விதித்திருந்தார் உரோமப் பேரரசர்.

திருமணம் செய்துகொண்டு வாழ்க்கையை மகிழ்ச்சியாய் செய்யவேண்டும் என்று துடித்தவர்களுக்கு உதவிசெய்து அவர்களுக்கு அரச கட்டளையை மீறி திருமணம் நடத்திவைத்தார் வேலண்டைன். இந்த உதவிக்கு மன்னன் மரணதண்டனையை பரிசளித்தார். இரண்டு மனங்களை திருமண பந்தத்தில் இணைத்து வைத்த பாதிரியார் வேலண்டைன் கொல்லப்பட்ட நாள் பெப்ரவரி 14. வேலண்டைன்ஸ் டே குறித்து உலவும் கதைகளில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள கதை இது.



வேலண்டைன்

இவரது நினைவாக பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

வழக்கமாக இந்த தினம் வத்திக்கான் நகரில் கொண்டாடப்பட மாட்டாது. ஆனால் இந்தாண்டு மறைமுகமாக விழா கொண்டாடப்பட உள்ளது.

இதற்கான அறிவிப்பு போப் ஆண்டவர் தலைமையிலான கவுன்சிலில் இருந்து பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 14ம் திகதி வத்திக்கான் நகரத்தில் விழாவொன்று நடைபெற உள்ளது. இவர்கள் திருமணமானவர்களாகவும், திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காதலர்களுக்கு
காதலர் தின வாழ்த்துக்கள்.

LOVE LOVE

## காலந்தோறும் காதல்

### சங்க காலம்

ஆற்றுத் தூநீர் ஆரல் உண்டு
குருகு பறக்கும் தீம்புனல் நாடன்
கற்றை நிலவு காயும் காட்டிடை
என்கை பற்றி இலங்குவளை ஞெகிழ்த்து
மேனி வியர்ப்ப மெல்லிடை ஒடித்து
வாட்கண் மயங்க உண்டதை மீண்டும்
பசலை உண்ணும் பாராய் தோழி.

### காவிய காலம்

பொன்னாங் கொடியென்பார்
போதலரும் பூவென்பார்
மின்னல் மிடைந்த
இடையென்பார் – இன்னும்
கரும்பிருக்கும் கூந்தல் சுடர்த்தொடி
உன் சொல்லில்
கரும்பிருக்கும் என்பார் கவி.





### சமய காலம்

வெண்ணிலவால் பொங்குதியோ
விரக்தியால் பொங்குதியோ
பெண்ணொருத்தி நான்விடுக்கும்
பெருமூச்சாற் பொங்குதியோ
பண்ணளந்த மால்வண்ணன்
பள்ளிகொண்ட பான்மையினால்
விண்ணளந்து பொங்குதியோ
விளம்பாய் பாற்கடலே!

### சிற்றிலக்கியக் காலம்

தூக்கி நிறுத்திவைத்த கொண்டையாள் – மனம்
துள்ளி ஓடும்விழிக் கெண்டையாள் – நெஞ்சைத்
தாக்கி மறுநொடியில் தவிடுபொடியாக்கும்
சண்டையாள் – வெள்ளித் தண்டையாள்
முலை அதிரும்படி மணி உதிரும்படி
மனம் பதறும்படிஆடும் பாவையாள் – வில்
மாரன் பகைமுடிக்கத் தேவையாள்

### தேசிய காலம்

சின்னஞ் சிறுகமலப் பூவினாள் – என்
சித்தத்திலே வந்து மேவினாள்
கண்ணில் ஜோதிஒன்று காட்டினாள் – என்
கவியில் காதல்ரசம் ஊற்றினாள்
விண்ணில் நிலவெறியும் வேளையில் – பொன்
வீணை கரம்கொண்டு மீட்டினாள்
மண்ணில் விண்ணகம் காட்டியே – அவள்
மறைந்தகதை எங்கு சொல்குவேன்?




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர். **Dr. சி.நவநீதன்**

# பிரசவத்தின் போது என்ன நடக்கும்?

**எனக்கு சுகப்பிரசவம் ஆகுமா?**

இது ஒவ்வொரு தாயின் மனத்திலும் எழும் பயமாகும். உலகில் 80 வீதமான பிரசவங்கள் சுகப் பிரசவங்களே. மிகுதி 20 வீதமானவை சத்திரசிகிச்சை மூலம் குழந்தை வெளியே எடுக்கப்படுகின்றது. பிரசவத்திற்கு முன்னரேயே இது சுகப்பிரசவமா?, இல்லையா எனக்கூறுவது மிகவும் கடினம். இது நீங்கள் பிரயாணம் செய்யும் வாகனம் பயணம் முடியும்வரை பிரச்சினை ஏதும் தராதா? எனக் கேட்பது போன்றது. பிரயாண முடிவிலேயே உங்கள் பிரயாணம் சுகப்பிரயாணம் எனக்கூற முடியும். ஏனெனில் சுகப்பிர்சவத்திற்கென இருந்த தாய், இறுதி நேரத்திலும் குழந்தை வெளிவராத காரணத்தால் சத்திரசிகிச்சைக்குள்ளாவதும் உண்டு.

**யாருக்கு சத்திரசிகிச்சை (Caesarean) தேவை?**

01. பெரிய குழந்தை.

02. சிறிய இடுப்பு (உயரம் குற்ந்த தாய்மார்) 140 cm இலும் குறைவு, செருப்பளவு 6 இலும் குறைவு.

03. திரும்பாத குழந்தை அல்லது குறுக்காக இருக்கும் குழந்தை.

04. முந்திய பிரசவங்கள் சத்திர சிகிச்சை மூலம் (2 இற்கும் மேற்பட்ட சத்திரசிகிச்சைகள்)

05. உயர் குருதி அமுக்கம், சலரோகம் போன்ற நிலைமைகளில் சிலவேளைகளில் சத்திரசிகிச்சை தேவைப்படலாம்.

06. குழந்தையின் துடிப்பு குறைதல். (கரு அவதி - Fetal Distress)

07. நஞ்சுக்கொடி (சூல்வித்தகம்) கருப்பையின் அடிப்பாகத்தில் இருத்தல். (Placenta Praevia)

08. பிரசவ நேரத்தில் ஏற்படும் சிக்கல்கள்.

**பிரசவ நோ ஏன் ஏற்படுகிறது?**

பிரசவத்தின்போது கருப்பைச்சுவர் விட்டுவிட்டு சுருங்க, கருப்பைக் கழுத்து விரிவடையத் தொடங்கும். இவ்வாறு கருப்பைச்சுவர் சுருங்கும்பொழுதே நோ ஏற்படுகிறது. கருப்பைச் சுவரின் சுருக்கத்தால் குழந்தை கீழ்நோக்கி மெதுவாக தள்ளப்படுகிறது.

**எவ்வளவு நேரம் எடுக்கும்?**

முதல் குழந்தைக்கு பிரசவ நேரம் 6-10 மணித்தியாலங்கள். இரண்டாவது குழந்தைக்கு 4-6 மணித்தியாலம் வரை செல்லும்.

**பிரசவத்தின் அறிகுறிகள் என்ன?**

**01) கடுமையான வயிற்று நோ**

ஆரம்பத்தில் 5-10 நிமிடங்களுக்கு ஒரு முறை.

பின் அடிக்கடி 2-3 நிமிடங்களுக்கு ஒருமுறை.

நோ தொடர்ந்து இருக்கும் நேரம் படிப்படியாக கூடும். சிலருக்கு நாரி உளைவு மட்டுமே ஏற்படுகிறது.



**02) பன்னீர்க்குடம் உடைதல்.**

இது குழந்தையைச் சுற்றியுள்ள நீர்ப்பை உடைவதால் ஏற்படுகிறது. அதிகளவு நீர் கால்களினூடே வழிந்து ஓடும். இதன்போது வலி ஏதுமிருப்பதில்லை.

**03) அதிகளவில் வெள்ளைபடுதல்.**

மேற்கண்ட குணங்குறிகள் இருந்தால் உடனே வைத்தியசாலையை அணுகுங்கள்.

**பிரசவத்தின்போது உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

பிரசவ வேதனை தொடங்கியதும் கருப்பைச் சுவர்கள் சுருங்கி, கருப்பைக் கழுத்து குழந்தை வெளியே வரப்போதுமான அளவிற்கு விரியும்.

அதாவது 1cm துவாரம் 10cm ஆக விரியும். பிரசவ மாற்றங்கள் பொதுவாக 3 கட்டங்களாக பிரிக்கப்படும்.

**1ஆம் கட்டம்**

கருப்பைக் கழுத்து விரியத் தொடங்கி 10cm ஆக வரும் வரையான நேரம் 1ஆம் கட்டம் எனப்படும். கருப்பைக் கழுத்து கிட்டத்தட்ட மணித்தியாலத்திற்கு 1-2cm வேகத்தில் விரிவடையும். ஆரம்பத்தில் விரியும் வேகம் மெதுவாகவும் பின்னர் வேகமாகவும் இருக்கும். இதன்போது குழந்தை மெல்லக் கீழிறங்கி வரும்.

**2ஆம் கட்டம்**

இது கருப்பைக் கழுத்து முற்றாக விரிந்த நேரத்திலிருந்து குழந்தை வெளியே வரும் வரையிலான நேரம் 1 முதல் 2 மணி நேரம்வரை எடுக்கும். இதன்போது தலை நன்றாக கீழிறங்கி நேர்குடலை அழுத்துவதால் முக்கவேண்டிய உணர்வு தென்படும்.

**3ஆம் கட்டம்**

குழந்தை பிறந்த நேரம் முதல் நஞ்சுக்கொடி (Placenta) வெளியேறும் நேரம்வரை. இது குழந்தை கிடைத்து 10 -15 நிமிடங்களிற்கு நிகழும். சிறிதளவு குருதிப்போக்குடன் நஞ்சுக்கொடி வெளியேறும்.

(தொடரும்...)


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்

# உங்கள் கணவர் ஏமாற்றுகிறாரா? கண்டறிய சில வழிகள்!

## புரூட் கேக்



கேக் என்று வரும்போது அதில் எத்தனை வகைகள் இருந்தாலும், ஃபுரூட் கேக்தான் எப்போதுமே சிறந்தது. அதிலும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஃபுரூட் கேக்கிற்கு பழங்களை ரம் மற்றும் பிராந்தியில் 1 மாதத்திற்கு முன்பு ஊற வைத்துச்செய்தால், அதன் சுவையே தனி. அதற்கு நேரம் இல்லாவிட்டால், குறைந்தது 1 வாரத்திற்காவது ஊறவைத்து செய்யுங்கள்

**தேவையான பொருட்கள்:** ரம் மற்றும் பிராந்தியில் ஊற வைத்த பழங்கள் - 3 கப்.

**கேரமலுக்கு...** சீனி - 1 கப் தண்ணீர் - 1 கப் கேக்கிற்கு... மைதா - 2 1/2 கப், இன்ஸ்டன்ட் கோப்பி தூள் - 1 கரண்டி, பேக்கிங் பவுடர் - 2 கரண்டி, பட்டை தூள் - 1 கரண்டி, கிராம்பு தூள் - 1 கரண்டி, ஏலக்காய் பொடி - 1/2 கரண்டி, ஜாதிக்காய் பொடி - 1/2 கரண்டி, உப்பு - 1/4 கரண்டி உப்பில்லாத வெண்ணெய் - 1 கப், சீனி- 1 1/2 கப், முட்டை-5 வெனிலா எசன்ஸ் - 2 கரண்டி, கேரமல் - 1 கப் ஊற வைத்த பழங்கள் - 3 கப், ரம் - 2 கரண்டி.

**கேரமல் செய்ய...**

முதலில் ஒரு வாணலியில் சீனியைப் போட்டு, அடுப்பில் வைத்து சீனியை கரைய வைக்கவேண்டும். குறிப்பாக இந்நிலையில் கரண்டியைப் பயன்படுத்தவேண்டாம். சீனி யானது நன்கு கரைந்து பொன்னிறமாகும்வரை அடுப்பில் வைக்கவேண்டும். முக்கியமாக சீனி அடிப் பிடிக்காமல் பார்த்து கவனமாக செய்யவேண்டும்.

சீனி கரைந்து பொன்னிறமான பின்னர், அதனை அடுப்பில் இருந்து இறக்கி, அதில் தண்ணீர் ஊற்றி, [illegible]ன் கரண்டி கொண்டு கிளறி, மீண்டும் அடுப்பில் வைத்து, ஒரு நிமிடம் கிளறி இறக்கி கலவையை குளிர வைக்கவேண்டும்.

**கேக் செய்ய...**

முதலில் ஓவனை 160 டிகிரி செல்சியஸில் சூடேற்றிக் கொள்ளவேண்டும். பின்னர் 2, 8x2 இன்ச் பேனில் சிறிது வெண்ணெய் தடவிக்கொள்ளவேண்டும். அடுத்து ஒரு பௌலில் மைதா, கோப்பி பவுடர், பேக்கிங் பவுடர், ஏலக்காய் பொடி, பட்டை தூள், கிராம்புத்தூள், ஜாதிக்காய் பொடி மற்றும் உப்பு போட்டுக் கொள்ளவேண்டும்.

**செய்முறை:**

பின்பு மற்றொரு பௌலில் வெண்ணெய் மற்றும் சீனி சேர்த்த, எலெக்ட்ரிக் பீட்டர் கொண்டு நன்கு 5 நிமிடம் மென்மையாகும் வரை அடித்துக் கொள்ளவேண்டும். அடுத்து அதில் முட்டையை ஒவ்வொன்றாக உடைத்து உற்றி நன்கு அடிக்கவேண்டும். பின் வென்னிலா எசன்ஸ் மற்றும் குளிர வைத்துள்ள கேரமல் சேர்த்து நன்கு கிளறிவிடவேண்டும். பிறகு அதில் மைதா கலவையை கட்டி சேராதவாறு சேர்த்து கிளறிவிட வேண்டும். பின் ஊற வைத்துள்ள பழங்களை சேர்த்து கிளறி, பேக்கிங் செய்யக்கூடிய பேனில் ஊற்றவேண்டும்.

இறுதியில் அதனை ஓவனில் வைத்து, 1 மணிநேரம் பேக் செய்யவேண்டும். இவ்வளவு நேரம் பேக் செய்தபின்னர், அதனை திறந்து ஒரு டூத்பிக் கொண்டு குத்தி பார்க்கும்போது, அதில் மா ஒட்டியிருந்தால், மீண்டும் பேக் செய்யவேண்டும். பின்னர் அதனை ஓவனில் இருந்து வெளியே எடுத்து குளிரவைத்து, பின் பேனில் இருந்து ஒரு தட்டிற்கு மாற்றவேண்டும். பின் கேக்கின் ஆங்காங்கு லேசான ஓட்டைகளைப் போட்டு, கேக்கின் மேல் ரம்மை தெளித்துவிட்டு, காற்றுப்புகாத ஒரு டப்பாவில் போட்டு வைத்து, 2-3 நாட்கள் கழித்து சாப்பிட்டால் சூப்பராக இருக்கும்.



**உங்கள்** கணவரின் உணர்வுகள் உங்களை பாதிக்கின்றனவா? அவரின் மாற்றம், இரகசியம், தனிப்பட்ட நடவடிக்கை ஆகியவற்றின் மேல் உங்களுக்கு சந்தேகம் உள்ளதா? அப்படியென்றால் நீங்கள் நிச்சயம் இந்த பகுதியை படிக்கவேண்டும். இதனால் அவரது நடவடிக்கைகள் சரியானதா அல்லது நீங்கள் அவர் மேல் கர்வம் கொண்டு இப்படி நினைக்கின்றீர்களா என்பதை தெரிந்துகொள்ள முடியும். இப்போது உங்கள் கணவர் உங்களை ஏமாற்றுகிறார் என்றால் எந்த மாதிரியான செயல்களையெல்லாம் மேற்கொள்வார் என்று கீழே குறிப்பிட்டுள்ளோம். அதைப் பார்ப்போம்.

தனியாகச் சென்று தொலைபேசியில் பேசுதல் ஏமாற்றும் கணவர்கள் பொதுவாக மனைவி முன் தொலைபேசியில் பேசமாட்டார்கள். அவ்வப்போது இதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், எப்போது அழைப்புவருகின்றதோ அப்பொழுதெல்லாம் இதை செய்தால் ஏதோ தவறு நடக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். இத்தகைய புதிய முறைகளை கையாளும்போது எச்சரிக்கையாக இருங்கள். அவரின் மேல் எப்போதும் ஒரு பார்வை வைப்பது நல்லது.

பொதுவாக போனில் உள்ள குறுஞ்செய்திகளை நிரம்ப நிரம்ப யாரும் அழிப்பது கிடையாது. அப்படி அழிக்க நினைத்தாலும் நமக்கு நேரம் கிடைப்பதில்லை. ஆனால் உங்கள் கணவர் அப்படி குறுஞ்செய்திகளை ஒவ்வொரு முறை வரும்போதும் அனுப்பும் போதும் அழித்துக்கொண்டு இருந்தால் அது கவனிக்கத்தக்க விஷயமாகும்.

பொது நிகழ்ச்சிகள் மற்றும் குடும்ப நிகழ்வுகளை தவிர்த்தல் குடும்பத்திற்காக குறைந்த நேரத்தை ஒதுக்குவதும், முன்பு இருந்ததை விட நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் பழகாதிருத்தலும் மற்றும் குடும்பத்தினர் ஒன்றாக இருக்கும்போது தனியாக விலகி இருப்பதும் மற்றும் தினமும் காலதாமதமாக வருவதும் ஆகியவை சந்தேகத்திற்கு இடமளிக்கும் நடவடிக்கைகளாகும். இதனால் அவர்கள் மற்றவர்களுடன் நேரிலோ, தொலைபேசியிலோ அல்லது இணையத்தளத்தின் மூலமோ தொடர்பில் இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஒருவருடன் அதிகநேரம் செலவுசெய்வது எப்போதுமில்லாமல் திடீரென்று ஒரு தனிப்பட்ட நபருடன் அதிகநேரம் செலவு செய் கின்றாரா? அவர் எதிர்ப்பாலினமா? ஜாக்கிரதை! நீங்கள் நிச்சயம் அவர்களின் உறவை பற்றி தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

காலையில் சென்றதுபோல் வீட்டிற்கு களைப்பின்றி வருவது வீட்டிற்கு வரும்போது வேறு வாசனைப்பொருளை போட்டுக்கொண்டு வருகின்றாரா அல்லது காலையில் சென்றதுபோல் வீட்டிற்கு புதிதாக களைப்பில்லாமல் வருகின்றாரா இதை எல்லாம் கவனிக்கவேண்டும். இதனால் அவர் மற்றவர்களுடன் நேரம் செலவுசெய்வது தெளிவாக தெரிகின்றது.

அன்பு மற்றும் அக்கறை குறைந்து காணப்படுவது கணவன் - மனைவி இடையே உள்ள சிறிய சண்டை மற்றும் தீராத விவாதங்கள் ஆகியவற்றால் அன்பு தற்காலிகமாக குறைய வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் திடீரென்று காரணம் இல்லாமல் விலகிச்செல்வதும் மற்றும் ஏதேனும் காரணம் சொல்லி விலகி இருப்பதும் அவர்களின் புதிய உறவு பற்றி நமக்கு அறிவுறுத்துகின்றன.

திடீரென்று சரியாக பேசாமல் இருப்பது முன்பெல்லாம் அவர் தன்னுடைய அலுவலகத்தில் என்ன நடந்தது என்று முழுமையாக விவரித்திருப்பார், ஆனால் அவர் இப்போது அது பற்றி உங்களிடம் ஒன்றும் கூறுவதில்லை. நீங்கள் திரும்பத் திரும்ப கேட்கும் போதும் சரியாக பதில் கொடுப்பதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் கவனிக்கப்பட வேண்டியவைகளாகும்.

அதிக சண்டைகள் சிறிய தவறுகள் மற்றும் பேசிக்கொண்டு இருக்கும்போது சண்டைகள் வந்தாலும் பெரிய பூகம்பம் வெடித்தாலும் இது சராசரியாக நடக்காத காரியமாக இருந்தால் கவனிக்க வேண்டியதாக உள்ளது. அவரின் துணி காணாமல் போனால் கூட கவனிக்கவேண்டும்.

இரகசியங்கள் திடீரென்று அதிகம் தள்ளி இருப்பது, உங்கள் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆகிய நாட்களில் வெளியே கூட்டிச் செல்லாமல் இருப்பது மற்றும் பரிசு வாங்கித்தராமல் இருப்பது மற்றும் அதிக விஷயங் களை மறைப்பது ஆகியவை அவரை பற்றி தவறான அபிப்பிரா யத்தை உண்டாக்கின்றன. இதை கவனித்து திருத்தவேண்டும்.

## தயிர் மசாஜ்

தயிர் மசாஜ் தயிர் முகத்தை வெள்ளையாக்க உதவும் அழகுப் பொருட்களில் ஒன்று. எனவே அதனைக் கொண்டு தினமும் முகத் திற்கு மசாஜ் செய்து கழுவினால், 7 நாட்களில் ஒரு நல்ல முகப்பொலிவு கிடைக்கும்.

கிளின்சிங் கற்றாழை ஒரு சிறந்த கிளின்சிங் பொருள். எனவே கற்றாழையின் ஜெல்லை முகத்திற்கு தடவி மசாஜ்செய்து, காயவைத்து கழுவினால், முகத்தில் உள்ள அழுக்குகள் அனைத்து நீங்கி, முகம் பளிச்சென்று புத்துணர்ச்சியுடன் காணப்படும்.



## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-407

**கேள்வி:** தலைமுடிக்கு விற்றமின் 'சி'யைத் தரக்கூடியது எது?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 25. 02. 2014

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 407
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 405இற்கான விடை :- முட்டை, மீன், பால் சுறா மீன், கருவாடு
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- ச.சஜீவன், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு

407

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

## வீட்டுக் குறிப்பு



எலுமிச்சை சாறு பாத்திரத்தில் இருந்து வெளிவரும் முட்டையின் துர்நாற்றத்தைப் போக்க எலுமிச்சை சாறு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதற்கு ஒரு துணியை எலுமிச்சை சாற்றில் நனைத்து, அதனை நாற்றமடிக்கும் பாத்திரத்தில் நன்கு தேய்த்து சிறிதுநேரம் கழித்து கழுவி, பின் சோப்புப் போட்டு தேய்த்தால், முட்டை துர்நாற்றத்தைப் போக்கலாம்.

நெல்லிக்காயை தினமும் ஒன்று என்று சாப்பிட்டு வர, நமது உடலில் நோய் எதிர்ப்பு பெருகும். மேலும் அதிலுள்ள விற்றமின் 'சி' முடியை கருமையடையச் செய்யும்.



விட்டதாகவும், சரஜேவோ முற்றுகைக்குத் தலைமை தாங்கியதற்கும் பிற போர்க்குற்றங்களுக்காவும் அவர்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2011 மே 29ஆம் திகதி, மிலாடிக்கிற்கு ஆதரவாக சேர்பிய பாராளுமன்றத்திற்கு வெளியே பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் இது தலைநகர் முழுவதும் கலகமாக வெடித்தது.

இரண்டு நாட்கள் முன்னதாக ICTY இவ்வழக்கை விசாரிப்பதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய பிரிவை நியமித்தது. 2001இல் முன்னாள் சேர்பிய, யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஸ்லோபோடோன் மிலோசெவிக் கைது செய்யப்பட்ட பின்னர் மிலாடிக் தலைமறைவாகி இருந்தார். ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்பியவைச் சேர்க்க அனுமதிகொடுப்பதற்கு இவர் கைது செய்யப்படுவது ஒரு முன்னிபந்தனையாக வைக்கப்பட்டது. பல ஆண்டுகள் ஒரு கைதுப் பிடி ஆணையை இவர் எதிர்கொண்டிருந்தார். தவிர இவரைப் பிடித்தால் 5 மில்லியன் யூரோக்கள் பரிசு என்றும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்தப் பரிசுத் தொகையை கடந்த ஆண்டு கடைசியில் 0 மில்லியன் யூரோக்களாக சேர்பியா உயர்த்தியிருந்தது.

ஜுலை 21, 2008ல் கைது செய்யப்பட்ட Republica Srpska வின் முதல் ஜனாதிபதி ராடோவன் கரட்ஜிக்குடன் மிலாடிக்கும் தேடப்பட்டு வந்தார். ராடோவன் இப்பொழுது ICTY காவலில், விசாரணையை எதிர்நோக்கி உள்ளார். ICTY ன் அப்பொழுதைய வக்கீல் கார்லா டெல் போன்டே, அவர் 1998இல் இருந்தே சேர்பிய அதிகாரிகளால் பிடிபடக்கூடியவராக இருந்தார் என்று கூறினார். மே 1, 2006 க்குள் இவர் பிடிக்கப்படவில்லை என்றால் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் சேர்பியா நுழைவது ஆபத்திற்கு உட்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

...னால் மிலாடிக்கை சேர்பியா கைது செய்வதற்குக் காட்டிய தயக்கத்தை தவிர, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸில் அவர் கைது செய்வதற்கு எதிராகத் திரைக்குப் பின்னால் எதிர்ப்புக்கள் இருந்தன. இது கரட்ஜிக் கைது செய்யப்பட்டதற்குப் பின்னால் இது வெளிப்பட்ட... கரட்ஜிக் 11 குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கிறார். அவற்றுள் சரஜீவோ முற்றுகை மற்றும் ஸ்ரெப்ரெனிகா படுகொலையும் அடங்கும். இது இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மிகப்பெரிய வெகுஜனப் படுகொலை ஆகும்.

நவம்பர் 1995 டேய்ட்டன் ஒப்பந்தம் கையெழுத்தானதை தொடர்ந்து கரட்ஜிக் தலை மறைவானார். அந்த ஒப்பந்தம் முன்னாள் யூகோஸ்லாவியா குடியரசை இரு இனங்களை அடிப்படையாகக் கொண்டு நாடுகளாக பிரிக்கப்பட்டது. அதாவது Republica Srpska (RS) மற்றும் பொஸ்னியா-ஹெர்ஸகோர்வினா கூட்டாட்சி (முஸ்லிம்-குரோட் கூட்டு) என.

கைப்பற்றப்பட்ட பின்னர் அவருடைய வக்கீல்கள் அவருக்கு அமெரிக்கா பாதுகாப்பு கொடுக்க முன்வந்தது, அதற்கு ஈடாக அவர் பதவியிலிருந்து விலகி பொதுவாழ்வில் பங்கு பெறக்கூடாது எனக் கூறியது. இக்கூற்று உண்மை தான் என்பதை டெல் போன்டே ஒப்புக் கொண்டுள்ளார்.

...டம்பர் 14, 2009 இல் ஹார்ட்மன் ICTY (International Criminal Tribunal for the former Yugoslavia) யினால் நீதிமன்ற அவமதிப்பிற்கு தண்டனை பெற்றார். இதற்குக் காரணம் ICTY இரகசியமாக அளித்திருந்த இரு தீர்ப்புக்களைப் பற்றி அவர் வெளிப்படுத்தியதுதான். அத்தீர்ப்புக்கள் சான்றுகள் மறைக்கப்பட்டதற்கு ஒப்புதல் கொடுத்திருந்தன. அவை ஸ்ரெப்ரெனிகா படுகொலையில் சேர்பியாவிற்கு நேரடித் தொடர்பு என்ற குற்றச்சாட்டை நீக்கும் முடிவுடன் பங்கு பெற்றிருந்தன.

கரட்ஜிக் மூன்று ஆண்டுகளுக்கு பின்னும் பொது விசாரணையை எதிர்கொள்ளவில்லை. ஐ.நா. வின் நிலையமான Scheveningen ல் அவர் காவலில் உள்ளார். இது உலகிலேயே மிக ஆடம்பரமான சிறை என்று விவரிக்கப்படுகிறது. கைதிகள் ஒற்றை அறையில், ஷவர் பாத், கழிப்பறை, வோஷ்பேசின், ஒரு மேசை, நூலகம் மற்றும் துணைக்கோள் மூலம் தொலைக்காட்சி, விளையாடும் அறைகளுக்குச் செல்லும் வசதி மற்றும் தம்பதிகளின் உறவுகளுக்கான தனி அறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பியச் சக்திகள் மிலாடிக் மற்றும் கரட்ஜிக்கைப் பாதுகாப்பதற்கு தொடர்புகொண்டுள்ளதற்கு நேரடிச் சான்றுகள் இல்லாவிடினும், பொஸ்னியப் போரின்போது இக்குற்றங்களுக்கான அவற்றின் அரசியல் பொறுப்பு பற்றி சந்தேகத்திற்கு இடமில்லை.

ஜேர்மனியுடன் அமெரிக்காவும் பொஸ்னியா மற்றும் யூகோஸ்லாவியா முழுவதும் பிரிக்கப்படுவதற்கான செயற்பாடுகளில் முக்கிய பங்கைக் கொண்டிருந்தன. இது அவை தேசியவாத, வகுப்புவாத அரசியல்வாதிகளான குரோஷிய ஜனாதிபதி Franjo Tudjman மற்றும் பொஸ்னிய முஸ்லிம் தலைவர் Alija Iz etbegovic ஆகியோருடைய வளர்ச்சியூடாக அமைந்தது. இந்த நபர்கள் மிலாடிக் மற்றும் கரட்ஜிக் போலவே பொஸ்னியாவை உள்நாட்டுப் போரில் தள்ளியதில் பொறுப்பு உடையவர்கள் ஆவர்.

1980 களின் கடைசிப் பகுதி, 1990களின் தொடக்கப்பகுதிகளில் யூகோஸ்லாவியா உடைக்கப்பட்டது. மேற்கத்தையச் சக்திகள் ஆணையிட்ட கொள்கைகளின் விளைவு ஆகும். இவை சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கியின்மூலம் சுமத்தப்பட்டன. மேற்கத்தைய சக்திகளின் நோக்கம் அரச கட்டுப்பாடு கொண்டுள்ள பொருளாதாரத்தை தகர்த்து யூகோஸ்லாவியா மீது தங்கள் நேரடி ஆதிக்கத்தை மீட்பது ஆகும். பெரிதும் உயர்ந்த பணவீக்கம் மற்றும் பெரும் வேலை இழப்புக்கள் எங்கும் வேலைநிறுத்தங்கள், வெகுஜன எதிர்ப்புக்கள் ஆகியவற்றைத் தூண்டின. இதற்கு முன்னாள் ஸ்ராலினிச அதிகாரத்துவத்தினர் தேசியவாத பிளவுகளைத் தூண்டிவிட்டு மேற்கத்தைய சக்திகளுடைய ஆதரவிற்கும் போட்டியிட்டனர்.

மூன்று இனங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் 1990களிலேயே பொஸ்னியாவில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. சேர்பிய ஜனநாயகக் கட்சி, முஸ்லிம் ஜனநாயக நடவடிக்கைக் கட்சி (SDA) மற்றும் குரோஷிய ஜனநாயகச் சமூகம் (HDZ) என்பவையே அவைகள். சோவியத் ஒன்றிய சரிவு மற்றும் 1991ல் ஜேர்மனி மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து இனப் பதட்டங்கள் வெடித்தன. ஜேர்மன் ஏகாதிபத்தியம் முதலில் ஸ்லோவேனியா பிரிந்து போகவும், பின்னர் குரோஷியா பிரியவும் முயற்சி எடுத்தது. இது சோவியத்தின் செல்வாக்கை எதிர்க்கும் வழிவகையாகவும் தன் நலன்களை இப்பிராந்தியத்தில் உயர்த்திக்கொள்ளும் முயற்சியாகவும் இருந்தது. தான்தான் மத்திய தரைக்கடல் பகுதியில் சோவியத் செல்வாக்கு நுழையாமல் தடுத்து நிறுத்த முடியும் என்பதைக் காண்பிக்கும் வகையிலும் இருந்தது.

யூகோஸ்லாவியா உடைவிற்கு தன் முந்தைய எதிர்ப்பை அமெரிக்கா கைவிட்டது. இதற்குக் காரணம் ஜேர்மனி மேலாதிக்கம் பெற முயல்வதற்கு சவால் விடவேண்டும் என்பதாகும். சேர்பிய அரசாங்கம் ஒரு ஒற்றுமையான ஒன்றுபட்ட அரசைத் தக்க வைத்துக்கொள்ளும் போக்கிற்கு எதிராக பொஸ்னியா, பின்னர் கொசோவோ சுதந்திரத்திற்கு வாஷிங்டன் முக்கிய ஆதரவைக் கொடுக்க முற்பட்டது. இதன் விளைவு அப்பிராந்தியத்தில் இனவழியில் பெரும் பிளவைக் கொண்டிருந்த அரசாக பொஸ்னியாவில் உள்நாட்டுப் 'போர் ஏற்பட்டது ஆகும்.

சேர்பியா, இனச் சுத்திகரிப்பை நடத்திய போது அதை எதிர்த்தது, ஆனால் அதே போன்ற குற்றங்கள் குரோஷியாவால் செய்யப்பட்டதற்கு ஆதரவு கொடுத்தது. மிகவும் இழிந்த முறையில் வெள்ளை மாளிகை 1995ல் Operation Storm என்பதை ஆதரித்தது. இது 200,000 சேர்பியர்களை க்ராஜினாவிலிருந்து விரட்டியடித்த நடவடிக்கை ஆகும். ஆயிரக்கணக்கான விமானத் தாக்குதல்கள் அமெரிக்க விமானப் படையால் குரோஷிய, பொஸ்னிய முஸ்லிம் சக்திகளுக்கு உதவும் வகையில் நடத்தப்பட்டன. உள்நாட்டுப்போரில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மிகப் பெயரளவில் செய்ய இது உதவியது.

ஸ்ரெப்ரெனிகா படுகொலையின் தோற்றங்கள் ஐ.நா. இதை ஒரு 'பாதுகாப்புப் பகுதி' என்று குறித்ததால் ஏற்பட்டது. இதையொட்டி அது ABIH எனப்பட்ட பொஸ்னிய முஸ்லிம் இராணுவத்தின் தளமாக வர அனுமதிக்கப்பட்டது. அது சேர்பிய படைகளைத் தாக்கியது. மிலாடிக்கின் படைகள் ஜுலை 11ஆம் திகதி நகரத்திற்குள் நுழைந்து ருஷ்லாவிற்கு தப்பிச் செல்ல முயன்றவர்களை படுகொலை செய்தது. அங்கு படைகளுக்கும் குடிமக்களுக்கும் இடையே வேறுபாடு காட்டப்படவில்லை.

அப்பொழுது மிலாடிக் கைதிற்கு ஈடாக அளிக்கப்படும் 'பரிசு அல்லது வெகுமதி' ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் பதவிக்கு விண்ணப்ப நாடு என்ற முறையில் சேர்பிய தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு கசப்பான மாத்திரைபோல் ஆகும்.

ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் தலைவர் Manuel Barroso 2011 மே 19ஆம் திகதி பெல்கிரேடில் அரசாங்கம் இன்னும் கூடுதலான முயற்சிகள் எடுத்து நிதியக் கொள்கையை வலுப்படுத்த வேண்டும், முதலீட்டிற்கான சூழ்நிலையை முன்னேற்றுவிக்கவேண்டும் என்று கூறினார்.

சேர்பியா, 2009இல் IMF இடமிருந்து 3 பில்லியன் யூரோக்கள் கடன் வாங்குவதற்கு வெளிநாட்டு வங்கிகளிடம்தான் பெற்றுள்ள கடன்களை சீரமைக்கும் கட்டாயத்திற்கு உட்பட்டது. ஊதியங்கள் ஒரே நிலையில் முடக்கப்பட்டு வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை 4.8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம் எனக் குறைக்க பொதுநலச் செலவுகளை அரசாங்கம் கடுமையாகக் குறைத்துவிட்டது. பொதுத்துறையின் அளவு 2010இல் 10 சதவிகிதம் குறைக்கப்பட்டது. ஆனால் பொது நிறுவனங்கள் இன்னமும் மொத்தத் தொழிலாளர் தொகுப்பில் 26 சதவிகிதத்திற்கு வேலை கொடுக்கின்றன. தனியார்மயம் அதிகமாக்கப்படல் சமூகத்தில் பேரழிவை ஏற்படுத்தும்.

குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றிற்கு 194 டொலர் என்பதற்குச் சமமாகத்தான் உள்ளது. சராசரி மாத நிகர வருமானம் 422 டொலர் என்று உள்ளது. வேலையின்மை நலன்கள் இப்போது சராசரி கடைசி ஊதியத்தில் 50 முதல் 60 சதவிகிதம் என்று உள்ளன. இவை வயது, வேலையிலிருந்த காலத்தையொட்டி ஒரு மாத ஊதியம் என்று அதிகபட்சம் 24 மாதங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. பொதுநலத் திட்டங்களை நம்பியிருக்கும் ஒற்றை நபர் 60 யூரோக்களைப் பெறுவார். நான்கு பேர் உள்ள குடும்பம் 110 யூரோக்களைப் பெறும்.

## குரொயேஷிய இராணுவ ஜெனரல்களுக்கு த ஹேக் நீதிமன்றம் விடுதலை

1990 களில் செர்பியர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் குரொயேஷியாவின் இராணுவ ஜெனரல்கள் இருவரை குற்றவாளிகளாக அறிவித்து வெளியாகியிருந்த தீர்ப்பை த ஹேக் நகரில் உள்ள நீதிமன்றமொன்று ரத்துச்செய்துள்ளது.

குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டிருந்த அன்டே கோட்டோவினா மற்றும் மிலாடன் மார்க்காக் ஆகியோரை விடுதலை செய்யுமாறு த ஹேக் நகரில் இந்த போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த நீதிபதிகள் இருவர் தீர்ப்பளித்துள்ளனர்.

குரொயேஷியாவின் க்ராஜினா பிராந்தியத்தை மீளக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கையின்போது சேர்பியர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இவர்கள் இருவருக்கும் முறையே 24 ஆண்டுகள் மற்றும் 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளித்து 2011இல் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டில் வெற்றிபெற்று குரொயேஷியாவின் தலைநகர் ஜாக்ரப் வந்தடைந்த முன்னாள் இராணுவ ஜெனரல்கள் இருவருக்கும் 'கதாநாயகர் வரவேற்பு' கிடைத்தது. ஆனால் இவர்களது விடுதலை சர்பியாவில் பெரும் கண்டனங்களை எழுப்பியுள்ளது.

## "இருவரும் குற்றமற்றவர்கள்": இறுதித் தீர்ப்பு

நவம்பர், 2012, முன்னாள் யூகோஸ்லாவியா தொடர்பான தீர்ப்பாயத்திற்கு தலைமை தாங்கிய நீதிபதி தியோடர் மேரோன், "ஜெனரல் கோட்டோவினா மற்றும் ஜெனரல் மார்காக் ஆகிய இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறோம்" என்றார்.

1990களில் நடந்த சம்பவங்களுக்காக, குறிப்பாக கொலைகள், துன்புறுத்தல்கள் மற்றும் சூறையாடல்கள் உள்ளிட்ட குற்றங்களுக்காக 57 வயதான இருவரும் கடந்த ஆண்டில்தான் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

க்ராஜினா பிராந்தியத்திலிருந்து செர்பிய பொதுமக்களை நிரந்தரமாக வெளியேற்றுவதற்காக அக்காலத்தில் குரொயேஷியாவின் அதிபராக இருந்த மறைந்த ஃபிராஞ்சோ துட்ஜ்மான் முன்னெடுத்த சதிக்குற்ற நடவடிக்கையில் பங்கெடுத்ததனால் இவர்கள் குற்றவாளிகள் என நீதிபதிகள் அப்போது அறிவித்தனர். ஆனால், இந்த வழக்கின் மேன்முறையீட்டில் தீர்ப்பளித்த நீதிபதி மேரோன், அப்படியான சதிக்குற்ற நடவடிக்கை எதுவும் நடக்கவில்லை என்று கூறினார்.

ஜெனரல் கோட்டோவினா மற்றும் ஜெனரல் மார்க்காக் ஆகிய இருவரினதும் கட்டளையின் கீழ் க்ராஜினா நகரங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்கள் "சட்டத்துக்கு விரோதமானவை" என்று முடிவுக்கு வந்ததில் 2011 ஆம் ஆண்டில் வழக்கை விசாரித்த நீதிபதிகள் தவறிழைத்திருப்பதாக த ஹேக் நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

தாங்கள் திட்டமிட்டு பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தவில்லை என்று இருவருமே தொடர்ந்தும் வாதிட்டுவந்தனர். இதுவே "இறுதித் தீர்ப்பு" என்பதால் இந்த தீர்ப்புக்கு எதிராக வழக்குத்தொடுத்தார்கள் மேன்முறையீடு செய்யமாட்டார்கள் என்று நீதிமன்ற அதிகாரிகள் கூறுகின்றனர்.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

1998ஆம் ஆண்டு ஜுலை 17ஆம் நாள், அதாவது 16 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதே அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமாகும்.

இரண்டாம் உலகப் போரின்போது மனித குலத்திற்கு மற்றும் அமைதிக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதை நூரம்பேர்க், ரோக்யோ வழக்குகளில் கண்டறியப்பட்ட காலத்தில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஒன்றிற்கான அவசியம் உணரப்பட்டது.

உலகின் பனிப்போர் முடிவடைந்த 1990களின் பிற்பகுதியைத் தொடர்ந்து இடம்பெற்ற யூகோஸ்லாவியா, ருவாண்டா ஆகியவற்றின் போர்க்குற்ற விசாரணைகள் ஒரு நிரந்தர பன்னாட்டு நீதிமன்றிற்கான அவசியத்தை மேலும் வலுப்படுத்தியதன் விளைவே இந்த அனைத்துலக குற்றவியல் நீதிமன்றாகும்.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் யாப்பை தத்தமது அரசியல் அமைப்புக்களில் ஏற்று. 2011 வரை 116 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இவை தவிர அமெரிக்கா, ரஷ்யா உட்பட 34 நாடுகள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள போதிலும், அதன் யாப்பை ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்துவருகின்றன. இந்தியா, பாகிஸ்தான், சீனா, சிறீலங்கா, போன்ற ஆசிய நாடுகள் பலவும், சூடான் உட்பட ஆபிரிக்க நாடுகள் என மொத்தம் 43 நாடுகள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் அங்கத்துவ நாடுகளாக இணைய இதுவரை மறுப்புத் தெரிவித்துவருகின்றன.

இதேவேளை, இதுவரை நாடுகளாக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படாத, அதாவது சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்யப்படாத பலஸ்தீனத்தின் தேசிய சபையும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் அங்கத்துவம் பெற்றுள்ளதை நாம் இங்கு அவதானிக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளிற்கும் பொதுவான விதிமுறைகளும், நடைமுறைகளும் இருப்பது போன்று இங்கு இல்லை. ஆனால் குற்றயவியல் நீதிமன்ற சாசனத்தை ஏற்றுக்கொண்ட அல்லது கையெழுத்திட்ட நாடுகள், அல்லது அதன் தலைவர்கள் மீது மட்டுமே வழக்குத் தொடரமுடியும் என்ற வாதமும் அடிபட்டுப் போவதை இங்கு சில உதாரணங்கள்மூலம் சுட்டிக் காட்டவேண்டும். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் வீட்டோ அதிகாரமுள்ள ஐந்து வல்லரசுகளினதும் ஏகோபித்த ஆதரவு தேவை.

குறிப்பாக சூடானை எடுத்து நோக்கலாம். இந்த நாடு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் அங்கத்துவம் பெறவோ, கையெழுத்திடவோ மறுத்து வந்தது. ஆனால் அதன் அரச அதிபர் ஓமர் ஹசன் அஹ்மட் அல் பசீர் மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றினால் கைதாணை (பிடியாணை) பிறப்பிக்கப்பட்டது.

## சூடான்

சூடானில் இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்கும், பூர்வீகக் கறுப்பின மக்களிற்கும் இடையில் 50 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு போரில் ஒன்றரை மில்லியன் (15 இலட்சம்) மக்கள் உயிரிழந்துள்ளனர். 09-07-2011 தெற்கு சூடான் சுதந்திரப் பிரகடனம் செய்யப்படும்வரை பழங்குடி மக்கள் டார்ஃபூரில் இடம்பெயர்ந்து அவலப்பட்டதும், கறுப்பின மக்கள்மீது இடம்பெற்ற படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கடத்தல்கள், காணாமல்போதல்கள் பற்றி நாம் நாளாந்தம் செய்திகளில் அறிந்திருந்தோம்.

இவை பற்றி கவனம் செலுத்திய ஐக்கிய நாடுகள் சபை, குறிப்பாக அதன் அப்போதைய செயலாளர் நாயகம் கோபி அனான் டார்ஃபூருக்கான அனைத்துலக விசாரணை ஆணைக்குழுவை 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நியமித்திருந்தார். இந்த அணைக்குழு சரியாக மூன்று மாதங்களில், 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது அறிக்கையை கோபி அனானிடம் சமர்ப்பித்திருந்தது.

கொபி அனான் அறிக்கையைப்பெற்று இரண்டு மாதங்களில் (31-03-2005)ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் டார்ஃபூர் பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அனைத்துலக சட்டவிதிகள் மீறப்பட்டு போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு இடம்பெற்றதால், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் இது பற்றி விசாரணை நடத்தவேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

இந்த விசாரணையை தாம் நடத்த வேண்டுமா என அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் நடத்திய முன்னாய்விற்கு பல அரசாங்கங்கள், ஆபிரிக்க ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, அதன் இதர அமைப்புக்கள், உள்நாட்டு - வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு - வெளிநாட்டு ஊடகங்கள், மற்றும் பல நிபுணர்கள் சாதகமாகப் பதில் வழங்கியதால், இந்த விசாரணை இடம்பெற்று, சூடானின் முன்னாள் உள்துறை அமைச்சர் அஹ்மட் முஹமட் ஹருன், அலி முஹம்மட் ஆகியோர்மீது 2007ஆம் ஆண்டும் அரச தலைவர் ஓமர் ஹசன் அஹ்மட் அல் பசீர் மீது 2009 மார்ச், பின்னர் 2010 ஜுலையில் இரண்டாவது தடவையாகவும் கைதாணை பிறப்பிக்கப்பட்டது.

படுகொலை, இடம்பெயர வைத்தமை, வதை, பாலியல் வல்லுறவு போன்ற மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், பொது மக்களிற்கு எதிரான தாக்குதலை வழி நடத்தியமை, போன்ற போர்க்குற்றங்கள், படுகொலை, காயங்களை ஏற்படுத்தியமை, உளரீதியான தாக்கத்திற்கு உட்படுத்தியது, சமூக, கலாசார கட்டுமானங்களை அழித்தமை போன்ற இன அழிப்பு ஆகிய 10 குற்றங்கள் ஓமர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

போர்க்குற்றம் புரிந்தமை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்தமைக்காக பொஸ்னியா, ருவாண்டா, கொங்கோ, உகண்டா, சூடான், கென்யா போன்ற நாடுகளின் தலைவர்களும், படைத் தளபதிகளும், இன அழிப்பிற்கு துணை நின்றவர்களும் கைதாணை பிறப்பிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையுள்ளது.

# கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவடைந்ததா?

**மீள்**குடியேற்றம் என்பது இடப் பெயர்வினால் ஏற்பட்ட கட்டாயத் தேவை யாகும். இலங்கையில் யுத்தத்தால் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைவரும் இடம்பெயர்ந்தனர். ஒவ்வொரு தரப்பினரும் அரசாங்கத் தினாலேயே மீள்குடியேற்றத்திற்கான வசதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

அப்படியிருந்த போதும் இன்னமும் அந்த மீள்குடியேற்றம் நிறைவடைந்து விடவில்லை. என்றாலும் கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவடைந்துவிட்டதாக கடந்த வாரத்தில் மீள்குடியேற்ற பிரதி மைச்சர் மட்டக்களப்பில் தெரிவித்திருக் கிறார். இதில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறது. அவ்வாறானால் என்ன பிரச்சினை உள்ளது போன்ற விடயங்கள் குறித்து இந்த வாரத்தில் ஆராயலாம்.

மீள்குடியேற்றம் என்பது வெறுமனே யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் கொண்டு சென்று குடிய மர்த்துவதுடன் முடிந்துவிடுகிறது என்பது வெற்றுப் பார்வையாக இருக்கிறது. ஆனாலும், தங்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதில் அம்மக்களது அடிப்படைத் தேவைகளான வீடு, குடிநீர், போக்குவரத்து, பாடசாலை, சுகாதாரவைத்திய வசதிகள், வங்கிகள், பொருள் கொள்வனவுகளுக்கான ஏற்பாடுகள் எனப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டாகவேண்டும்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் தற்காலிக கொட்டகைகள் வழங்கப் பட்டதுடன் அவர்களது வாழ்க்கையை சுயமாகக் கொண்டு நடத்தவேண்டும் என ஒவ்வொருவரும் நினைப்பது போன்று அரசாங்கமும் நினைக்க முடியாது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் புல்லுமலை பிரதேசம், யுத்தம் காரணமாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பது குறிப் பிடத்தக்கது. அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான மகா ஓயா பிரதேசத்துக்கு அண்மையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள் யுத்தத்திற்கு முன்னர் சகல வசதி களையும் கொண்டவர்களாக காணப் பட்டார்கள். இருப்பினும் யுத்த காலத்தில் அவர்களது சொத்துக்கள், இருப்பிடங்கள் என அனைத்துமே அழிக்கப்பட்டு பொருளாதார இழப்பை அவர்கள் சந்தித்தனர்.

தற்காலிகமாக மைலம்பாவெளி உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதி களிலும் அவர்கள் தங்கி பல வருடங் களை கழித்தனர். அக்காலத்தில் அவர்கள் தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்தவெனவும் பிள்ளைகளின் எதிர்காலம் கருதியும் தங்கியிருந்த இடத்தினையே சொந்த இடமாக்கிக் கொண்டனர்.

அவர்களை மீளவும் சொந்த இடங்களுக்கு கொண்டு சென்று குடியமர்த்துவதில் பல பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிகிறது. இருந்தாலும் குறிப்பிட்டளவான குடும்பங்கள் புல்லுமலையில் மீளக்குடியேறியுள்ளனர்.

இதேபோன்று புனாணை உள்ளிட்ட மட்டக்களப்பின் பல இடங்களைக் குறிப்பிடலாம். அதேபோல் திரு கோணமலை மாவட்டத்தின் முக்கிய பிரச்சினையாக சம்பூர் அகதிகள் பிரச்சினை இன்றும் இருந்துவருகிறது. அந்த மக்கள் பகுதி பகுதியாக குடியேற்றப்படுவர் எனத் தெரிவிக்கப் பட்டாலும், ஒரு சில கிராமங்களைச் சேர்ந்த மக்களே மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர். ஆனாலும் அவர்கள் கூட தாம் சுயமாகச் செயற்படமுடியாத அளவுக்கு பாதுகாப்புசார், போக்குவரத்து சார் பலவேறு கட்டுப்பாடுகள் காணப் படுகின்றன. இது தவிரவும் சம்பூர் மக்கள் சுமார் பத்து வருடங்களாக களிவெட்டி பிரதேசத்தில் அகதிகளாகவே வாழ்ந்துவருகின்றனர். இவர்களது குடும்பங்கள் புதிதாக உருவாகும் குடும்பங்களால் அதிகரித்துவருகின்றது.

சம்பூர் அகதிகளது பிரச்சினை குறித்து அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் முறையிடப்பட்டும் அவர்களுக்கு அந்தவிடயம் கரிசனைக் குட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

30 வருடங்களுக்கும் மேலாக எமது நாட்டில் நடைபெற்ற யுத்தம், பொருளதார, கல்வி, சுகாதார மற்றும் மனித மேம்பாட்டுத் துறைகளிலும் பல்வேறு பாதிப்புகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதனை ஈடு செய்து நாட்டை முன்னேற்றமான அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்காக மக்கள் முதல் அதிகாரிகள், அமைச்சர்கள், அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த சம்பூர் மக்கள் தமது வீடுகளையும் சொத்துக்களையும் அப்படியே விட்டு வந்திருந்தனர். தற்போது உடைந்த வீடுகளையே அவர்கள் காணமுடிகிறது. சில இடங்களுக்கு இன்னும் யாரும் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது. இந்த உடைந்த வீடுகளை அவர்கள் முழுமையான வீடுகளாக காணும் சந்தர்ப்பம் விரைவில் ஏற்படவேண்டும் என்பதே நம்முடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

எதிர்பார்ப்புகள் காலங்களைக் கடத்துபவைகளாக இல்லாதிருந்தால் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கும் சம்பூர் மக்களின் மனக்குறைகள் நீங்கும் என்பது மட்டுமே நிச்சயமானதாகும்.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும் கஞ்சிகுடியாறு உள்ளிட்ட பல பிரதேசத்து மக்கள் இன்னமும் முழுமையான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலேயே உள்ளது. இவ்வாறு பல உதாரணங்களைச் சொல்லிக்கொண்டு செல்லக்கூடிய வகை காணப்படுகையில் இராணுவத்தினை அகற்றுவதைப்பற்றியும், கிழக்கில் மீள்குடியேற்றம் முற்றுப்பெற்றுவிட்டது பற்றியும் அரச தரப்பு அமைச்சர்கள் அறிக்கைவிடுவது கவலையானதாகவே மக்கள் மத்தியில் பார்க்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் மட்டக்களப்பே பெரிதும் இடப்பெயர்வுகளைச் சந்தித்திருந்தது. அந்தவகையில் கடந்த வாரத்தில் வாகரை பிரதேசம் புனாணை கிழக்கில் பிரதேச செயலாளர் எஸ்.ஆர்.இராகுல நாயகி தலைமையில் நடைபெற்ற மீள்குடியேற்ற நிகழ்வில் உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதி களில் இருந்து வெளியேறவேண்டும் என்று தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அரசாங்கத்திற்கு வேண்டுகோளை விடுத்துவருகின்றார். ஆனால், இராணுவமோ அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது என்று தெரிவித் திருக்கிறார்.

எமது அமைச்சினால் 3 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், சம்பூர் போன்ற இடங்களில் இராணுவத்தினர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்து மக்களுக்கான உதவிகளை செய்துவருகின்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை ஒன்றிணைந்து மக்களுக்காக வேலை செய்வோம் வாருங்கள் என்று அழைப்புவிடுத்திருந்தேன். ஆனால் அதற்கு அவர் சம்மதம் தெரிவிக்க வில்லை. ஜனாதிபதி எனக்கு மீள்குடியேற்ற அமைச்சுப் பதவி வழங்கும் போது விநாயகமூர்த்தி முரளிதரனை பிரதி அமைச்சராக நியமித்தார்.

அதற்காக ஜனாதிபதிக்கு நான் நன்றி கூற கடமைப்பட் டுள்ளேன். ஏனெனில் விநாயக மூர்த்தி முரளிதரன் வடக்கு கிழக்கைப் பற்றி நன்கு அறிந்தவர். அதனாலேயே அவரிடம் இப்பகுதிகளுக்கான முக்கிய பணிகளை ஒப்படைத்துள்ளேன். இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 4000 வீடுகள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் யாவும் இவரிடமே ஒப்படைத் துள்ளேன் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதேநேரம், மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களின் நிலைமைகள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றம் முற்றுப்பெற்று விட்டதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருக்கிறார். இந்தக் கூட்டத்தில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாமே வெறுமனே நடவடிக்கை எடுக்கப்பட்டால் எல்லாமே நிறைவு பெற்றுவிட்டது என்று கருத்தாகும் என்பது போன்றுதான் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களின் நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்ட இக் கூட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கே.ஜானக சுகதாச, மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம்.நயிமுதீன், மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உட்பட அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டுமிருந்தனர்.

இங்கு ஒரு பட்டியலையே மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் அடுக்கினார் அதன் வரிசையில், கடைசியாக மட்டக்களப்பு மரவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கருங்காலியடிச்சேனை

**— கிழக்கான் —**

கிராமத்தில் 22 குடும்பங்களையும் கல்லிச்சை கிராமத்தில் 15 குடும்பங் களையும் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர் களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கருங்காலியடிச்சேனையில் இராணுவ முகாம் இருந்த இடமாகும். இங்கு 2013ம் ஆண்டு கிழக்கு மாகாண படை கட்டளைத்தளபதியிடம் நான் விடுத்த வேண்டுகோளையடுத்து தற்போது அந்த பிரசேத்தில் இருந்து இராணுவ முகாம் அகற்றப்பட்டு அங்கு மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. மீள் குடி யேற்றப்பட்ட பிரதேசங்களில் சில இடங்களுக்கு மக்கள் போகாமல் இருக்கலாம். அதேபோன்று வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்புக்கு வருகை தந்தவர்களும் அங்கு செல்லாமல் மட்டக்களப்பில் உள்ளனர். இதில் மனைவி வன்னியைச் சேர்ந்த வராகவும், கணவன் மட்டக்களப்பை சேர்ந்தவராகவும் அல்லது கணவன் வன்னியை சேர்ந்தவராகவும், மனைவி மட்டக்களப்பை சேர்ந்தவராகவும் உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங் களில் 800 வீடுகளும் ஆயிரம் மலசல கூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதில் ஏற்கனவே 400 மலசல கூடங்கள் மீள்குடியற்ற பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு மீள் குடியேற்ற பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பன அடங்கும்.

இந்த கூட்டம் நடைபெற்று மறுநாள், மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உன்னிச்சை பாவற்கொடிச்சேனை பிரதேசத்திலிருந்து 1987ஆம் ஆண்டு அசாதரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்து காத்தான்குடியில் தங்கியுள்ள 93 குடும்பங்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற விரும்பியுள்ளதாக உன்னிச்சை முஸ்லிம் மீள்குடியேற்ற சங்கத் தலைவர் எம்.ஏ.கபூர் தெரிவித்திருந்தார். காத்தான்குடி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு சிங்கள மக்களும் சிப்பிமடு, சின்னவத்தை, கொஸ்வத்த, புல்லுமலை என பல இடங்களிலும் மீள்குடியேற்றம் என்றபெயரில் கொண்டு செல்லப்பட்டு விடப்பட்டும் சுயமாக அந்த இடங்களுக்கும் சென்று வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் அனைவரும் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான ஏதுகள் ஏற்படுத்தப்படாது வெறுமனே அம் மக்களே எல்லாவற்றையும் சமாளித்துக்கொள்ளவேண்டும் என்றவகையில் இருக்கும்போது எல்லாம் முடிந்துவிட்டது என்று பேசுவதில் எத்தனை வீதம் முழுமை இருக்கிறது என்பதே இப்போதைக்குக் கேள்வியாகும்.

ஐ.நா.வில் நடைபெறப்போகும், அல்லது வேறு எங்காவது பெரிதாக உலக நாடுகளின் பார்வைக்கு எடுபடும் நிகழ்வுகளிற்குச் சில நாட்களுக்கு முன்னர் நடைபெறும் ஒரு சில விடயங்களை மக்கள் மாத்திரமல்ல, அனைவருமே அறிந்தும் உணர்ந்துமே உள்ளனர். கடந்த வருடத்தில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரே பல தமிழ் மக்கள் சார்ந்த நிகழ்வுகள் நடைபெற்றன என்பது இதற்கு நல்ல உதாரணமாகும்.

உள்ளுக்குள் நல்ல எண்ணம் இருந்தாலும், திட்டங்கள் இருந்தாலும் அவை சந்தர்ப்பம் பார்த்துத்தான் வெளியில்வரும் என்றால் அதில் எவ்வாறு முழுமை இருக்கப்போகிறது என்பதே இந்த இடத்தில் கேள்வியாகும்.

கிழக்கில், மீள்குடியேற்றத்துக்கு எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மக்கள் பல தொகை இருக்கையிலும், மீளக் குடியேற்றப்பட்டு தற்காலிக கொட்டகைகளே வழங்கப்பட்டு அவர்கள் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கையிலும், இந்தியாவிலிருந்தும், வவுனியா விலிருந்தும் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்களும் பல்வேறு அடிப்படை வசதிகளின்றி சிரமப்படுகையிலும் கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவுபெற்றது என்று சொல்வதில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறது என்பதுதான் இந்த இடத்தில் கேள்வியாகும்.

ஜனாதிபதியின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மீளக்குடியர்வு பற்றிய பரிந்துரைகளின்படி, ஏப்ரல் 2008க்கு முன்னர் இடம் பெயர்ந்தவர்கள், பழைய இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் அவர் களுடைய பிரச்சினைகளை ஆய்வு செய்து மீள்குடியேற்றம் பற்றிய வேலைத்திட்டத்தை தயாரிப்பது நல்லிணக்கத்திற்கு பிரயோசனமாகும். அனைத்து இடம்பெயர்ந்தவர்களுக்கும் ஒரே உரிமையே இருக்கிறது என்பது அதன் முடிவாகும்.

**கிழக்கில், மீள்குடியேற்றத்துக்கு எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மக்கள் பலதொகை இருக்கையிலும், மீளக் குடியேற்றப்பட்டு தற்காலிக கொட்டகைகளே வழங்கப்பட்டு அவர்கள் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கையிலும், இந்தியாவிலிருந்தும், வவுனியாவில் இருந்தும் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்களும் பல்வேறு அடிப்படை வசதிகளின்றி சிரமப்படுகையிலும் கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவுபெற்றது என்று சொல்வதில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறது என்பதுதான் இந்த இடத்தில் கேள்வியாகும்.**



# விளையாட்டு

**ஜோசெப் கிருஷ்ணா**

## முந்துவது யார்?

**மஹேலவின்** 'சதங்கள் பெற்ற சாதனைகளைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும்போது, அவரது நண்பரும் சகவீரருமான குமார் சங்கக்கார பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஒரு கலக்குக் கலக்கி இருக்கிறார்.

ஆம். அவர் இரண்டாவது டெஸ்டில் முச்சதம் (319), சதம் (105) எனக் குவித்திருக்கிறார். இன்னொன்று: சங்காவும், மஹேலவும் சதங்களின் எண்ணிக்கை பொறுத்து ஓட்டப் போட்டி ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். முதலாவது டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்த மஹேல சங்கக்கார பெற்றிருந்த 33 சதங்களை சமன் செய்திருந்தார்.



ஆனால், இரண்டாவது டெஸ்டில் இன்னொரு எதிர்பார்க்கை இருந்தது. இங்கும் மஹேல டெஸ்ட் சதம் அடித்து 34 ஆவது சதத்தை எட்டி சங்கக்காரவை முந்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 72 ஓட்டங்களில் மஹேல ஆட்டமிழந்தார். ஆனால் சங்கக்கார தொடர்ந்து சென்று சதம், இரட்டைச்சதம், முச்சதம் என்று 319 ஓட்டங்கள் எடுத்து 34 சதங்கள் என்று மஹேலவைவிட ஒரு படி முன்னே சென்றார். இரண்டாவது இன்னிங்சில் இன்னொரு சதம் அடித்து தனது கணக்கில் 35 என அதிகரித்துக் கொண்டுள்ளார்.

**சங்கக்கார – ஒரு சிறுவிபரம்**

122 டெஸ்ட் போட்டிகள்
209 இனிங்சுகள்
11,151 ஓட்டங்கள்
35 சதங்கள் (மூன்றிலக்க எண்ணிக்கை)
9 இரட்டை சதங்கள்
01 முச்சதம்

- குறைந்த இனிங்சுகளில் 11000 ரண்கள் கடந்தவர்.
- இரட்டைச் சதம் எண்ணிக்கையில் 2 ஆவது இடம்.
- முச்சதம் அடித்தோர் வரிசையில் 23 ஆவது வீரர்.
- பங்களாதேஸ் அணிக்கு எதிராக அதிக ஓட்டங்கள் பெற்றவர்.
- 250 ஓட்டங்களை 3 முறை கடந்தவர். முச்சதம் எடுத்த மூன்றாவது இலங்கையர்.
- 35 சதங்கள் அடித்த கவாஸ்கர், பிறைன்லாறா இருவரின் சாதனையையும் கடந்து சென்றுள்ளார்.
- பங்களாதேஸ் அணிக்கு எதிராக சங்கக்கார ஆறாவது சதத்தைப் பெற்றார்.
- சங்கக்கார 11000 டெஸ்ட் ரண்களை 208 டெஸ்ட் இனிஸ்சுகளில் பெற்றுள்ளார். பிறைன் லாறா இந்த எண்ணிக் கையை 213 இனின்சுகளில் கடந்திருந்தார்.

குமார் சங்கக்காரா அண்மைக் காலத்தில் ஏதாவது ஒரு சாதனை யைத் தொடாமல் எந்தத் தொடரையும் முழுமையாக்கியதில்லை. பங்களாதேஸ் அணியுடான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளில் அதிக டெஸ்ட் சதம் போட்டவர்கள் வரிசையில் ஐந்தாவது இடத்தைச் சமன் செய்தார். அடுத்தநாள் இரட்டைச் சதங்களில் பிறைன்லாறாவைச் சமன் செய்தார்.

## நட்சத்திர மோதல்

**இங்கிலாந்தின்** லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானம் தனது 200ஆவது ஆண்டு நிறைவு விழாவை இந்த வருடத்தில் கொண்டாட இருக்கிறது. இதனையொட்டி எம்.சி.சி கழகம் ஏற்பாடு செய்துள்ள ஒருநாள் போட்டியொன்றில் எம்.சி.சி அணியின் தலைவராக விளையாடப் போகிறவர் சச்சின் டெண்டுல்கார்.

எதிரணியாக விளங்கப்போகும் உலக அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் ஷேன் வோர்ண். எம்.சி.சி கழகம் 1987 இல் கழகம் தோற்றம் பெற்ற 200ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. தற்போது எம்.சி.சி. தவிசாளராக இருக்கும் மைக்கெட்டிங் (வயது56), 1787 இல் அந்த 200ஆவது ஆண்டு நிறைவு ஆட்டத்தில் விளையாடி எம்.சி.சி அணிக்காக 179 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அவரே லோர்ட்ஸ் மைதான 200ஆவது ஆண்டு விழா ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார். 1987இல் தோற்றுவிக்கப்பட்ட எம்.சி.சி. 1814 இல் தனது மைதானத்தை லண்டன் சுற்றுப்புறத்தில் சென். ஜோன்ஸ் பகுதியில் அமைத்துக்கொண்டது.



தொழிலதிபர் தோமஸ் லோர்ட் என்பவரின் மைதானத்திலேயே புதிய லோர்ட்ஸ் மைதானம் அமைந்தது. இந்த மைதானத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா பற்றியே இப்போது பேசப்படுகிறது. சச்சினின் அணியில் ராகுல் டிராவிட் விளையாடுவார் என்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. டிராவிட்டின் டெஸ்ட் அறிமுகம் லோர்ட்ஸ் மைதானத்திலேயே நிகழ்ந்தது.

டென்டுல்கர் எம்.சி.சி.யின் ஆயுட்கால அங்கத்தவர். டயானா இளவரசி நினைவுப் போட்டி யொன்றில் இந்த மைதானத்தில் சதம் போட்டவர்.

மறுபுறம் ஷோன் வோர்ண், லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடிய நான்கு டெஸ்ட் போட்டிகளில் பத்தொன்பது விக்கெட்டுக்கள் சாய்த்தவர். லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடுவதற்கு ஆசைப்படாத எந்த கிரிக்கெட் வீரரும் இல்லை. அந்த மைதானத்தில் விளையாடுவதுதான் கிரிக்கெட்டின் பூரணத்துவம் என்று நம்புகிறார்கள். இப்போது பல தடவை லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடிய இந்த இரண்டு ஜாம்பவான்களும் புல்லரித்துப்போய் இருக்கிறார்கள். இந்த ஆட்டம் ஜூலை மாதத்தில் நடைபெறவிருப்பதோடு, உலகின் மிகப் பிரபல்யங்கள் இரண்டு அணிகளிலும் இடம்பெறுவார்கள் என்று கூறியுள்ளார் மைக் கெட்டிங்.



## சந்தர்ப்பம் வாய்த்ததா?

**கெவின்** பீட்டர் சென் தென் ஆபிரிக்காவில் பிறந்தவர். கிரிக்கெட் வாழ்க்கைக்காக இங்கிலாந்து வந்தவர். அன்னை இங்கிலாந்துப் பெண்மணி ஆகையால் இங்கிலாந்துக் குடியுரிமை பெற்றவர். 2004 இல் இருந்து இங்கிலாந்துக்கு விளையாடத் தகுதிபெற்று 2005 இல் இருந்து அறிமுகமாகியவர்.

33 வயதான இவர் மிகவும் உயர்ந்த தகுதி நிறைந்த வீரராக கருதப்பட்டவர். விமர்சகர்கள் இவரை, "இவர் லாறாக்கள் விவியன் றிச்சட்ஸ் வகை சார்ந்த உன்னத வீரர்" என்று குறிப்பிட்டதுண்டு. இங்கிலாந்தின் அணிப்பொறுப்பை 2008இல் ஏற்றுக்கொண்டவர். டெஸ்ட் ஒரு நாள் அணிகள் இரண்டையும் வழிநடத்தியவர். சர்ச்சைகளும் இவரும் ஒட்டிப் பிறந்ததால் அடுத்த வருடமே பயிற்றுனருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பதவியைத் தூக்கி எறிந்தவர்.

இங்கிலாந்துக்கு வெற்றி கரமாக அமைந்த 2005, 2009, 2010, 2011, 2013 (இங்கிலாந்தில்) ஆஷஸ் தொடர்களின்போது அணியில் இவரும் பெரும் பங்காற்றி யவர்.

இவர் 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 23 சதங்களும் 35 அரைச்சதங்களும் பெற்றவர். மொத்தம் 8181 ஓட்டங்கள் தன் கணக்கில் வைத்திருப்பவர். 136 ஒரு நாள் போட்டிகளில் 4440 ஓட்டங்கள் பெற்றவர். 09 சதங்களும் 25 அரைச்சதங்களும் தன் பங்கில் வைத்திருப்பவர்.

இப்பொழுது என்னவென்றால், அவுஸ்திரேலியாவில் 5-0 என்றும் ஆஷஸ் தொடரையும் அதோடு ஏனைய தொடர்களையும் இழந்த இங்கிலாந்து அணியில் புதிய மாற்றங்கள் ஏற்படும்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது தொடருக்காக செல்லவிருக்கும் இங்கிலாந்து அணித்தெரிவில் கெவின் பீட்டர்சனின் பெயர் இல்லை. மிகச் சிறந்ததொருவீரர் திடீரென்று இப்படி கழற்றிவிடப்பட்டமை விமர்சகர்கள் மத்தியில் பெரும் ஆதங்கத்தைக் கிளப்பியுள்ளது.

சிறந்ததொரு வழியனுப்புதல் இல்லாமல், ஓசைபடாமல் ஓரங்கட்டிவிட்டார்களே என்பதுதான் எல்லோரது ஆதங்கங்களும். இந்த நீக்கத்தின்மூலம் கெவின் பீட்டர்சனின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை அநேகமாக முடிவுக்கு வருகிறது என்றே எல்லோரும் நம்புகிறார்கள்.




## நிமிரவது நிச்சயம்



**நடந்து** முடிந்த அவுஸ்திரேலியாவிற்கான இங்கிலாந்து கிரிக்கெட் சுற்றுப் பயணத்தின் போது நடைபெற்ற ஆட்டங்கள் மொத்தம் பதின்மூன்று. 5 டெஸ்ட் போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள், மூன்று இருபதுக்கு இருபது போட்டிகள். இவற்றுள் ஒரேயொரு ஒருநாள் போட்டி தவிர்ந்த மற்றைய பன்னிரண்டு போட்டிகளிலும் இங்கிலாந்து தோல்வியடைந்து மாறாத வடுவை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இந்த நிலையில்தான் எதிர்பார்க்கப்பட்டது போலவே இங்கிலாந்தின் பயிற்சியாளர் அன்டி பிளவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். ஆனால் தெரிவாளர்களில் ஒருவராகச் செயற்படுவார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் ஜாம்பவான் கிரிக்கெட் வீரர் தென் ஆபிரிக்காவின் கெரி கேர்ஸ்ரன் இங்கிலாந்தின் பயிற்றுனர் பதவிக்கு வருவாரா என்ற வினா எழுந்துள்ளது. இவர்தான் இந்தியா டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பெறவும், ஒருநாள் உலகக் கிண்ணத்தை வெல்லவும் காரணமாக இருந்தவர். இதில் இருந்து இவரது மதிப்பும் பெறுமதி யும் புரியும். தற்போது, ஐ.பி.எல் அணிகளுள் ஒன்றான டெல்லி டெயார் டெவில்ஸ் அணியின் பயிற்றுனராக ஐந்து வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

எனவே, இவர் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்பாரா என்பது கேள்விக்குறியாகவே மாறியுள்ளது. முன்னதாக யோர்க்ஷயரின் பயிற்றுனரும், அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளருமான ஜேஸன் ஜிலெஸ்பியிடம் அனுப்பப்பட்டபோது, அவர் இங்கிலாந்து பயிற்றுனர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார்.



இந்தச் சூழ்நிலையில்தான் இன்னொரு அவுஸ்திரேலிய ஜாம்பவான் ஷேன் வோர்ண் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுனருக்கு விருப்பம் தெரிவித்துள்ளார். டுவிட்டர் செய்தியொன்றில் இங்கிலாந்து கிரிக்கெட் ரசிகர்களே, நீங்கள் உங்கள் நாட்டு அணியின் பயிற்றுனராக என்னை விரும்புவதுபோலத் தெரிகின்றது.

நான் அதைப் பற்றி யோசிக்கிறேன் என்பதை மட்டுமே தற்போது என்னால் சொல்லமுடியும் என்று கூறியுள்ளார். இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கடந்த மாதத்தில்தான் அவுஸ்திரேலியாவின் இருபதுக்கு இருபது அணியின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். உலகக் கிண்ண இருபதுக்கு இருபது போட்டிகள், வரும் மார்ச் மாதம் பங்களாதேஸ் நாட்டில் நடைபெறவுள்ளமை தெரிந்ததே. எனவே இங்கிலாந்தின் கிரிக்கெட் அணிக்குத் தோள் கொடுக்கப்போகும் அந்த சுமைதாங்கி யார்? என்பதற்கான விடை இன்னும் தெளிவாகவில்லை.

இங்கிலாந்தின் அடுத்த டெஸ்ட் தொடர் இலங்கைக்கு எதிராக தாயகத்தில் ஜூன் மாதம் நடைபெற இருக்கிறது. தொடர்ந்து ஜூலையில் இந்தியா, இங்கிலாந்து செல்லஇருக்கிறது. அதோடு அதற்கெல்லாம் முன்னதாக மேற்கிந்தியத் தீவுகளில் மூன்று ஒருநாள் போட்டிகளும் மூன்று இருபதுக்கு இருபது ஆட்டங்களும் இருக்கின்றன. தொடர்ந்து பங்களாதேஸ் நாட்டில் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப்போட்டிகள் இருக்கின்றன.

எதுஎவ்வாறாயினும், அவுஸ்திரேலியாவில் மண்கௌவிய இங்கிலாந்து அணி கிரிக்கெட் 'அ' வில்தான் கற்றுக் கொள்ளவேண்டும். யாராவது நினைத்தால் அது அபத்தம். கிரிக்கெட் ஓட்டத்தில் அவுஸ்திரேலிய 2013 -2014 சுற்றுப் பயணம் ஒரு விபத்து மட்டுமே. இங்கிலாந்து விரைவிலேயே தன்னை நிரூபித்துக்காட்டும். அதில் சந்தேகமே இல்லை.

A.பாரிஸ், மிகிந்தலை.




# சிதைந்த நிலவுகள்

**நேரம்** காலை ஒன்பது மணி நாவல் மரநிழல் அழைத்தது, ஓலை பின்ன கைகள் துடித்தது.

கமலம் சுடு தண்ணீர் போத்தலை எடுத்துக்கொண்டு பகிடிக்கதை கூறியவண்ணம் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் நாவல் மரநிழல் நோக்கி மூன்றுபேரும் நகர்ந்தார்கள்.

இளையவள் சீதாதேவி கல்வியில் மங்கினாலும் மூத்தவள் கீதாஞ்சலியின் ஜொலிக்கும் பள்ளி நட்சத்திரம்!

அம்மா எனக்கு கெம்பஸ் கிடைச்சா எப்படியம்மா?" என்று தாயிடம் வினா



எழுப்பினாள் கீதாஞ்சலி.

எதிர்கால வறுமை மூட்டும் தீயைத் தணிக்கும்தொனியில்!

"அஞ்ஞானி இல்லை
கடவுள்
எல்லாம் அறிந்த விஞ்ஞானி"
அட்சய பாத்திரம் அவன்
கையில்
நிச்சயம் கிடைக்கும்
நமக்கும்"

"அம்மா கவிதை வடிவில் எல்லாம் கதை சொல்லுறா" என்றாள் சீதாதேவி!

"சுமை கொடுப்பவன் கடவுள்
சுமை இறக்க உதவுபவனும்
அவனே...
சுபமாகவே யாவும்
நடக்கும்
கவலையை விடு
கண்மணியே!"

"அம்மா தங்கச்சி சொன்னது சரியம்மா... கதைக்கும்போது

"கவிதைதான் அம்மா!"

"ஓமடி செல்லங்களா பள்ளிக்கூட காலத்திலே நல்லா கவிதை எழுதுவேன்...
அண்ணா கிடைச்சதற்கு பிறகுதான்.."

வார்த்தைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்குள் ஒரே தடவையில் மகள்மார்களின் குரல் குறுக்கிட்டது. "அம்மாய் அண்ணாவா?"

அவர்களுக்குள் ஒருவித புதுமை. இதுவரை இல்லாத பதம் ஒன்றை தாயின் நாக்கு பிரசவம் செய்ததால்!

பல காலத்தின் பின் குடும்பத்தில் ஏற்பட்ட குதூகலத்தில், கமலம் தன்னை அறியாமல் மதுபோதையில் அலம்பும் குடிகாரன்போல் கணவனின் கட்டுப்பாட்டை மீறிவிட்டாள்!

பல்வேறு காரணங்களினால் சொந்த நாட்டில் இருந்து வெளி ஏறி அந்நிய நாட்டில் அடைக்கலம் புகுந்து புகலிடம்கோரும் அப்பாவி அகதி போலானாள். மகள்மார் மத்தியில் கமலம்!

மகள்மாரின் கேள்விக்கு எதைக் கூறுவது, எப்படி சமாளிப்பது என்று எதுவும் தெரியாமல் சற்றுத் தன்னை மறந்தாள்.

"சொல்லம்மா எங்களுக்கு அண்ணா இருக்கானா?" என்று மீண்டும் மீண்டும் பல தடவை வினாவினாள் சீதாதேவி. தாய் கமலம் மௌனித்துப்போனாள்!

நடக்கக்கூடாத நிகழ்வு நிகழ்ந்திருக்கக்கூடும். அதை விடுத்துவிடுத்து கேட்டு தாயை காயப்படுத்தாமலும் தங்கையின் ஆவலைத் தணிப்பதற்கும் சமாதானப்படுத்தும் தந்திரோபாய வார்த்தையை தேடிக்குதித்தாள் கீதாஞ்சலி!

"அதை விடடி...
அம்மாட அண்ணா ஒரு ஆள் சிறுவயதிலேயே இறந்து விட்டாராம். அதை எனக்கு அம்மா சொன்னாங்க. பிறகு உனக்கு சொல்லுறேனடி... அம்மா மாமாவின்ர ஞாபகம் வந்தா அப்படித்தான் டென்சனாகி விடுவாங்க..?" என்று கீதாஞ்சலி முடிப்பதற்குள் வானம் சலசல வென்று மழையை கொட்டத் துவங்கியது. திக்குமுக்காடி ஓடினாள் ஒழுகும் குடிசை வீட்டுக்குள். ஓட்டைகளை

> "வானம் சலசல
> வென்று மழையை
> கொட்டத் துவங்கியது.
> திக்குமுக்காடி
> ஓடினாள் ஒழுகும்
> குடிசை வீட்டுக்குள்.
> ஓட்டைகளை
> கிடுகுகளால்
> அடைத்தனர்.
> மூன்று நேர
> உணவுக்காக
> கோதுமை மா
> ரொட்டியையும்
> சம்பலும் வயிற்றுப்
> புழுவின் அழுகையை
> நிறுத்தியது."

கிடுகுகளால் அடைத்தனர். மூன்றுநேர உணவுக்காக கோதுமை மா ரொட்டியையும் சம்பலும் வயிற்றுப்புழுவின் அழுகையை நிறுத்தியது. குடலை நிரப்பியது. உடலை வலிமைப்படுத்தியது. ஆயுளுக்கு வாழும் அனுமதிகொடுத்தது!

விழுந்து கிடந்த தேங்காய் ஒன்றை சீதாதேவி கையில் எடுத்துக்கொண்டாள். விழுந்து கிடந்த தென்னம்பாளைகள் சிலவற்றை கீதாஞ்சலியின் கை வைத்திருந்தது. இருவரும் கதைத்தவண்ணம் தென்னம் தோப்பில் இருந்து வீட்டுப் பக்கம் வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கதையோடு கதை யாக சீதா தேவி கேட்டாள்,

"அக்கா" ஆ... என்ன?"

"அண்டைக்கு பிறகு சொல்லுறன் என்றாயே... எனக்கு இன்னும் சொல்லவே இல்லையே?

கீதாஞ்சலி எதையும் மறக்க வில்லை. மறந்ததுபோல நடித்தாள். அட்டை இல்லாத புத்தகம்போல் மொட்டையாக கேள்வி கேட்டாள்.

"கெம்பசுக்கு போறதைப் பற்றியா... இல்லை உன்ர படிப்பை பற்றியா கேட்கிறாய்?"

"இல்லை அக்கா அதுக்கிடை யிலே மறந்திட்டியா?"

இப்படி மறந்தா எப்படியக்கா சட்டம் படிப்பது?, வாதிடுவது?

"சரி... நான் மறந்திட்டேன் என்னவென்று சொல்லேன்?"

"ம்...ம்... அண்டைக்கு அம்மா சொன்ன அண்ணா கதை"

"ஆ...ம்... அதுவா அது பெரிய கதை. சத்தியம் பண்ணு எதையும் யாரிடமும் கதைக்க மாட்டேன் என்று"

"அக்கா உன்ட தங்கச்சிதான் நான். அப்ப எப்படி இருப்பேன் என்று உனக்கு தெரியாதா? சரி. ஓ.கே சத்தியமா.... யாரிடமும் கதைக்கமாட்டேன் என்று."

(நிலவுகள் வளரும்...)

## சிரிப்பதற்கு...



"சும்மா தைரியமா உள்ளே வாங்க...!"

"வழியிலே உங்க நாய் இருக்குதே... கடிக்குமா?"

"அதைக் கண்டுபிடிக்கத் தான் வரச்சொல்றேன்... இன்னிக்குத்தான் இந்த நாயை வாங்கினேன்...!"

***பொழுது*** புலர்ந்தது... பூக்கள் மலர்ந்தன!

காலைவேளை,

பலருக்கும் இன்பம் ததும்பி இருக்க "குரு" மட்டும் மனம் வெதும்பி துவண்டான்!

கண்கள் இருண்டன காட்சிகள் சுருங்கின... வெளிச்சம் விரிந்தும் ஒளி மட்டும் தெரியவில்லை அவனுக்கு!

எல்லாம் இருந்தும் ஏதுமில்லாத வண்ணம் இருந்தான்!

பெற்றோரும் தங்கையும் முன் வாழ்த்துக்கூறி தத்தம் வேலைகளுக்கு சென்றிருந்தனர்!

வீடே மயானம்போல் தோன்றியது அவனுக்கு! நிஜமாய் மயானபூமியாய் மாற்றிட எண்ணினான்!

எவ்வாறு...?

எதிலும் வலி இருக்கும். அதில்லாமல் வீழ்ந்திட நினைத்தான்... பலவாறு யோசித்து முடிவுடன் பால் குடித்து மீண்டும் படுக்கை யில் படுத்தான்!


மாலைவேளை, பெற்றோர் மற்றும் தங்கை அவனுக்கு ஆச்சரியப் பரிசு ஒன்று வாங்கி வந்திருந்தனர்... அதனை அவனாக எழுந்து அதைப் பார்த்து மகிழ்ச்சிக் கொள்ளட்டும் என அவன் முன்னே வைத்து அவன் படுக்கையறையில் இருந்து வெளிவந்தனர் .

பெற்றோருக்கு தங்கள் மகனை நினைத்துப் பெருமிதம்... தங்கைக்கு பெருமை!

மூவரும் மிகுந்த மகிழ்வோடு குருவின் முழிப்பிற்காகக் காத்திருந்தனர். மாலைவேளை கடந்து இரவைத் தொட்டது... இதற்கு மேலும் பொறுமை கொள்ளமுடியாமல் அண்ணனை எழுப்ப அவன் படுக்கையறைக்கு சென்றாள்...

அண்ணா... அண்ணா... (சத்தமில்லை) அண்ணா... எழுந்திரு அண்ணா! (அசைவில்லை)

அம்மா அண்ணா எழுந்திருக்க மாட்டேங்கிறான்... அம்மா உள்ளே வந்தாள்! டேய் குரு, எழுந்திரிடா... என்ன இவ்ளோ



# உயிர் வலி

நேரம் தூங்கற...?

அவன் கைகளைத் தொட்டு எழுப்ப முயற்சித்தாள்... அவனது கைகள் ஜில்லிட்டிருந்தன... பதில், உடல் அசைவு, எதுவும் இல்லை... மூச்சும் வெளிப்படவில்லை!

பதறினாள்... என்னங்க இங்க வந்து பாருங்க எனக்கதறினாள்...

அம்மாவின் கதறல் தன்னையும் தாக்க தானும் சேர்ந்து அழுதாள் குருவின் தங்கையவள்...

கணவன் அலறி அடித்துவந்து குருவை எழுப்ப முயல எ[illegible]த உணர்ச்சியும் இல்லாத அவன் உடலைக் கண்டு ஆடிப்போனான்...

குருவின் உடலைத் தூக்கிக்கொண்டு அருகிலிருக்கும் மருத்துவ மனைக்கு சென்று சோதித்துப் பார்க்கையில்தான். தெரிந்தது. குரு சில மணிநேரங்களுக்கு முன்பே இறந்துவிட்டான் என்பது!! இறப்பு என்னவோ அவனுடையதுதான்.

ஆனால், அந்த மரண வலி அவன் குடும்பத்தைத் தாக்கியது... உருக் குலைந்துப் போயினர்! மேலும் அதிர்ச்சித் தரும் விதமாக அந்தத் தகவலை மருத்துவர் சொன்னார்...

உங்கள் மகன் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்! அந்தத் தகவலால் மேலும் குடும்பத்தினருக்குத் தாங்கமுடியாத வேதனை! மனதில் குழப்பம்.

எதனால் குரு தற்கொலை செய்துகொண்டான்... என்ன காரணம்...? ஒன்றுமே புலப்படவில்லை அவர்களுக்கு!

குருவின் இறுதிச்சடங்கு முடித்து வீட்டிற்கு வந்தனர் அவனது குடும்பத்தினர். வீட்டில் மயான அமைதி!

எல்லாம் முடிந்தாகிவிட்டது இனி எதற்காக இந்த வாழ்க்கை எனப் பெற்றோர்கள் வருந்திக்கொண்டிருந்தாலும் தங்கள் மகளுக்காக வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்று மனதைத் தேற்றிக் கொண்டிருந்தனர்!

வீட்டின் இருக்கையில் அமர்ந்து வெறிச்சோடிக் கிடந்த அவனது படுக்கையைக் கண்ட அப்பாவிற்கு அது புலப்பட்டது!

எடுத்துப்பார்த்தார் பிரித்துப் படித்தார்... காரணம் புரிந்தது! கண்ணீர் மிகுந்தது! அதனினும் மீறி ஆத்திரம் பீறிட்டது!


உடனே கிளம்பினார் செய்தித்தாள் அலுவலகத்திற்கு... அங்கு மேலாளரைக்கண்டு கொதித்து ஆத்திரத்தில் அவர் முன் இருந்த நாற்காலியின்மீது வீசினார் இரண்டு நாட்களுக்கு முன்பு வெளிவந்த அந்த செய்தித்தாளை!!!

அதிகாரி அதனைக் கண்டு ஒன்றும் நடவாதது போல் எழுத்துப் பிழை இயந்திரக்கோளாறு மன்னித்துக்கொள்ளுங்கள் என்று எளிதாகக் கூறினார்!

அவரது பதிலைக் கேட்டும் ஆத்திரத்தின் உச்சத்திற்கே சென்ற குருவின் தந்தை எவ்வளவு எளிதாக சொல்லறீங்க... உங்களின் பிழையை இயந்திரப்பிழை என்று!

உங்களது கவனக்குறைவால் இன்று என் மகன் எங்களுடன் இல்லை தற்கொலை செய்துகொண்டான்... வாழ்க்கையில் உயரப் போக இருந்த அவனைக் கொன்ற பாவிகள் நீங்கள்... உங்களை விடமாட்டேன்... சட்டம் உங்களை தண்டிக்கும் என்று சூளுரைத்து நியாயம் கேட்டு நீதிமன்றம் சென்றார்.

பிராந்திய ரீதியில் எதிர்பார்ப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய இந்திய நாடாளுமன்ற தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தேர்தல் முடிவு பற்றி சர்வதேச ரீதியில் பல்வேறு கருத்துக்களும் வாதப்பிரதி வாதங்களும் பட்டையை கிளப்பிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், தமிழகத்தின் பிரபல அரசியல் விமர்சகர் சோவினுடைய கணிப்பு எப்படி இருக்கின்றது? என்பது பற்றி அண்மைய பேட்டி ஒன்றில் விபரமாகத் தெரிவித்துள்ளார்.



# பிரதமராவாரா ஜெயலலிதா?

**அரசியல் நிலவரத்தைக் கவனிக்கிறீர்களா? இன்றைய சூழலைக் கணிக்க முடிகிறதா?**

தேசிய அளவில் மோடிதான் முன்னிலையில் இருக்கிறார். மற்றவர்களைவிட மக்களிடம் அதிக தாக்கத்தையும் ஏற்படுத்திவருகிறார். தமிழகத்தில் இன்னும் கூட்டணிகளே முடிவானபாடில்லை. விஜயகாந்த் எந்தப் பக்கம் சாய்வார் என்பது யாருக்கும் தெரியவில்லை. எந்தக் கட்சியுடன் பா.ம.க-வும் ம.தி.மு.க-வும் கூட்டணி சேரப்போகிறது, காங்கிரஸுக்கும் தி.மு.க-வுக்கும் இடையிலான உறவு என்ன என்பது தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில், இப்போதைக்கு எதையும் கணிக்க முடியாது.

**தே.மு.தி.க-வின் எதிர்பார்ப்பு என்ன? மக்களவைத் தேர்தல் கூட்டணியை முடிவுசெய்வதில் அந்தக் கட்சியின் மிக நீண்ட தாமதத்துக்குக் காரணம் என்ன?**

முடிவெடுக்க இன்னும் நிறைய நேரமும் காலமும் இருக்கிறது என்று விஜயகாந்த் நினைத்திருக்கலாம். எந்தக் கூட்டணியில் இணைந்தால் தனது கட்சிக்கு அதிக ஆதாயம் கிடைக்கும் என்றும் அவர் இன்னமும் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கலாம்.

**தே.மு.தி.க-வால் பா.ஜ.க-வுக்கு ஆதாயம் உண்டா?**

பா.ஜ.க. கூட்டணியுடன் விஜயகாந்த் இணைந்தால், பா.ஜ.க-வுக்கு நிறைய ஆதாயங்கள் உள்ளன. தே.மு.தி.க-வுக்கு 8 வீதம் வாக்கு வங்கி இருக்கிறது. அதன் காரணமாகத்தான் தே.மு.தி.க-வுடன் கூட்டணி அமைக்க பா.ஜ.க. விரும்புகிறது.

**தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தால்?**

என்னைப் பொறுத்தவரை தி.மு.க-வின் நிலைமை மோசமாகிவருகிறது. அந்தக் கட்சி தனது வாக்குகளைப் படிப்படியாகப் பறிகொடுத்துவருகிறது. அதனால், தி.மு.க. கூட்டணியில் விஜயகாந்த் இணைந்தாலும்கூட, அ.தி.மு.க-வின் வாக்கு வங்கிக்கு இணையாக முடியாது.

**ஆளும் கட்சிக்கு எதிரான மன நிலை தி.மு.க-வுக்குச் சாதகமா அமையுமா?**

இப்போதைய நிலையில் தமிழகத்தில் ஆளும் கட்சிக்கு எதிரான அலை வீசவில்லை. அ.தி.மு.க. ஆட்சிமீது மக்களுக்கு அதிருப்தி இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தேர்தலில் திடீர் திருப்பங்களுக்கு வாய்ப்பில்லை.

**தேசிய அளவில் அ.தி.மு.க. முக்கிய பங்கு வகிக்குமா?**

மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. 25-30 தொகுதிகளைக் கைப்பற்றினால், தேசிய அளவில் அந்தக் கட்சியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணி 210-220 இடங்களைப் பிடித்ததாக வைத்துக்கொண்டால், அ.தி.மு.க-வின் 25-30 சீட்டுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறும்.

**மூன்றாவது அணி சாத்தியமா?**

மூன்றாவது அணி அல்லது மாற்று அணி என எந்தப் பெயரில் அணி அமைந்தாலும், அந்த அணி வலுவான கூட்டணியாக இருக்காது. மிகவும் பலவீனமான கூட்டணியாகத்தான் இருக்கும். மூன்றாவது அணி என்பது சிறு அரசியல் சலசலப்பு மட்டுமே.

சமாஜ்வாதி தலைவர் முலாயம் சிங்கும் பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதியும் ஒருபோதும் ஒருமித்துச் செயற்படமாட்டார்கள். இடதுசாரித் தலைவர்களும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தாவும் இணையமாட்டார்கள். தி.மு.க-வும் அ.தி.மு.க-வும் எப்போதுமே இருவேறு துருவங்கள். இந்தக் காரணங்களால் பாதிக்கும் மேற்பட்ட கட்சிகள் வெளியேறிவிடும். அதன்பின் மூன்றாவது அணியில் எஞ்சியிருக்கும் கட்சிகளால் நிச்சயமாகப் பெரும் பான்மையைப் பெறமுடியாது. காங்கிரஸ், பா.ஜ.க. ஆதரவின்றி அந்த அணியால் மத்தியில் ஆட்சி அமைக்கவே முடியாது. எந்தக் கோணத்தில் பார்த்தாலும், மூன்றாவது அணி என்பது மிகவும் பலவீனமான அணி.

**முதல்வர் ஜெயலலிதா பிரதமர் ஆவாரா?**

ஒருவேளை, பா.ஜ.க-வால் மத்தியில் ஆட்சி அமைக்க முடியவில்லை என்றாலோ, மற்ற கட்சிகள் பா.ஜ.க-வை ஆதரிக்க முன்வராவிட்டாலோ அந்தக் கட்சி வேறு யாரையாவது ஆதரிப்பதை விட, முதல்வர் ஜெயலலிதாவை ஆதரிக்கலாம்.

முலாயம் சிங் பிரதமராக பா.ஜ.க. ஆதரவு அளிக்க வாய்ப்பில்லை. மாயாவதி, ஜெயலலிதா இருவரில் யாரை ஆதரிக்கலாம் என்றால், நிச்சயமாக ஜெயலலிதாவுக்குத்தான் பா.ஜ.க. ஆதரவு அளிக்கும்.

என்னைப் பொறுத்தவரை இந்தக் கேள்விக்கே தேவை இருக்காது என்றே நினைக்கிறேன். பா.ஜ.க-வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் பெரும்பான்மை பலத்தை நெருங்கிவிடும். சிறிய கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.க-வால் ஆட்சி அமைக்க முடியும்.

பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகிவருகிறது. தமிழகத்தில் பா.ஜ.க. வலுவான கட்சியாக இல்லை என்ற போதிலும், மோடி அலையைத் தமிழகத்தில் உணர முடிகிறது.

**பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்பட்டதில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து?**

பிரதமர் பதவிக்கு மோடி பொருத்தமான நபர் இல்லை என்பது உட்பட, பல்வேறுவிதமாக ஊடகங்களில் விமர்சிக்கப்படுகின்றன. ஆனால், இப்போது வாக்காளர்களின் மனதில் சில கேள்விகள் எழுந்துள்ளன. யார் பிரதமராக வேண்டும்? மோடியா அல்லது வேறு நபர்களா? மோடி ஏன் பிரதமராகக் கூடாது?

ஒரு வாக்காளரின் மனதில் இந்தக் கேள்வி எழும்போது அவர் நிச்சயமாக மோடிக்கு வாக்களிப்பார்.

உத்தரப் பிரதேசம், பிஹாரில் பா.ஜ.க-வின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. இந்த இரண்டு மாநிலங்களிலும் பா.ஜ.க. அதிக இடங்களைக் கைப்பற்றினால், அந்தக் கட்சி மத்தியில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

**பிஹார் முதல்வர் நிதீஷ் குமாரின் செயற்பாடு எவ்வாறு இருக்கும்?**

நிதீஷ்குமார் வெளிப்படையான, நேர்மையான முதல்வர். பா.ஜ.க அணியிலிருந்து விலகியதன்மூலம், அவர் தன்னைப் பலவீனப்படுத்திக்கொண்டுள்ளார்.

**காங்கிரஸின் செயற்பாடு எப்படி இருக்கும்?**

நீங்களே சொல்லுங்கள், ஏதாவது ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் சிறப்பாகச் செயற்படும் என்று உங்களால் சொல்ல முடியுமா? ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸுக்கு வெற்றிவாய்ப்பு இருப்பதாக முன்னர் கூறப்பட்டது. தற்போது அங்கு நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. தெலுங்கானாவிலும் காங்கிரஸ் துடைத்தெறியப்படும். ஆந்திரத்தைப் பிரிப்பதில் காங்கிரஸின் நேர்மை, உண்மையான நோக்கத்தை எல்லோரும் சந்தேகப்படத் தொடங்கிவிட்டனர். இந்த விவகாரங்களால் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி பலன் அடையக்கூடும்.

**ஆம் ஆத்மி கட்சி புதிய சக்தியாக உருவெடுக்குமா?**

பிற கட்சிகளின் வெற்றி வாய்ப்புகளை ஆம் ஆத்மிகெடுக்கக் கூடும். டெல்லியைத் தவிர்த்து, ஏனைய இடங்களில் அந்தக் கட்சிக்கு ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகம்தான். மக்களவைத் தேர்தலில் அந்தக் கட்சியை மக்கள் ஆதரிக்க வாய்ப் பில்லை. மக்களவைத் தேர்தல்வேறு, சட்டமன்றத் தேர்தல்வேறு என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். சில தொகுதிகளில் வேண்டுமானால் காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகள் ஆம் ஆத்மிக்குக் கிடைக்கலாம்.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## தற்கொலை மரணங்களும்...

இவற்றின்மூலம் சாவை அணைப்பவர்களில் பெரும்பாலும் குடும்பமாக இறக்கும் பரிதாபங்களே அதிகமாய் உள்ளன. கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டு மனைவி பிள்ளைகளை (பெரும்பாலும் கைக்குழந்தைகள் உட்பட ஐந்து, ஆறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை ஒவ்வொன்றாக கிணற்றுக்குள் தூக்கி போட்டு விட்டுத் தானும் குதித்து சாகின்ற வழி முறைகள் இப்போதும் நடைபெற்று வருகின்றன. இதே வழிகளில் மனைவியை பிரிந்துவாழுகின்ற கணவன்மாரும் இவ்வழிகளையே நாடி வருகின்றனர் - தான் ஒருவர் இறந்து போகவேண்டும் என்பதற்காக குழந்தைகளும், சிறுவர்களும் என்ன பாவம் செய்தார்கள். அவர்களையும் கொல்வதன் மூலம் இவையெல்லாம் தற்கொலை. என்ற பட்டியலில் பதியப்படுகின்றன.

சாவுக்கான - தற்கொலைச் சாவுக்கு வழிகள் பல இருந்தாலும் மண்ணெண்ணெய், பெற்றோலை உடலில் ஊற்றிச் சாவை அணைத்துக் கொள்ள விரும்புபவர்களின் சாவுதான் மிகமிக, பரிதாபத்துக் குரியது. உடல்கருகி, துடிதுடித்துச் சாகும் நிகழ்வு என்பது மிகவும் கொடூரமானது. சம்பவங்களை நேரில் பார்ப்பவர்களை மனநோயாளியாக்கி விடக்கூடிய இவ்வகை மரணங்கள் - இவ்வகையான மரணங்களில் இலட்சியத்துக்காக, தான் வாழும் இனத்தின் மக்களை நேசித்து, உலகின் கவனத்துக்கு கொண்டுவரவும், அதே வேளை ஆளும் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்வதற்காகவும் பலர் பார்த்திருக்க உடலில் பெற்றோலை ஊற்றி தன்னை எரித்துக்கொள்பவர்கள் உண்மையில் உயர்ந்தவர்களாக பலரால் மதிக்கப்பட்டாலும் இத்தகைய தற்கொலைகள் ஜீரணிக்க முடியாதவை.' இலங்கைத் தமிழர்களுக்கு விடுதலை வேண்டியும் இந்திய அரசு தலையிட்டு இலங்கைத் தமிழருக்கு உரிமைகள் பெற்றுக்கொடுக்க வேண்டியும் தமிழ் நாட்டிலுள்ள இளைஞர் - யுவதிகள் பலர் எண்ணெய் ஊற்றி எரித்து இறந்து அரசுகளுக்கு பாடங்களை உண்டாக்கியவர்களும் இருக்கின்றனர். இத்தகைய தற்கொலை மரணங்கள் தியாகத்தின் பாதையை எடுத்துக்காட்டினாலும் இவை பரிதாப மரணங்களாகும்.

உடலில் குண்டுகளைக் கட்டிக்கொண்டும், வாகனங்களில் வெடி மருந்துகளை நிரப்பி குறித்த இலக்கில் முட்டிமோதிக் வெடித்து சிதறிச் சாகும் அவலங்களும் நடைபெற்றுவருகின்றன. இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் இத்தகைய தற்கொலை மரணங்கள் நடைபெற்று வருகின்றன. இம்மரணங்களும் இனத்தின் மீது கொண்டுள்ள பாசப்பிணைப்பினை எடுத்துக்காட்டுவதுடன் தியாகம் மேலோங்கி நிற்கும் விடயமாகும்.

இதேவேளை நித்திரை குளிசைகள் போட்டு தற்கொலை செய்வது மற்றும் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்வது, மலை மீது ஏறிநின்று கீழே குதித்து தற்கொலை என்று மரணங்கள் நீண்டு செல்கின்றன.

இவை மரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் இப்படியொரு அவல முடிவை எடுக்குளவுக்கு தற்கொலையாளர்களுக்கு உண்டாகும் அல்லது உண்டாகக் கூடிய மன அழுத்தங்கள் என்ன? எவ்வகையான சம்பவங்களினால் தற்கொலையாளர்கள் மனம்நொந்து போகின்றார்கள். என்பதைக் கண்டறிய வேண்டியது கட்டாயமாகும். சிலர் உடன் ஏற்படும் சம்பவங்களுக்கு மரணத்தை நாடுவார்கள். ஆனால், பலர் நீண்டகால மன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டு மரணவழிகளை நாடுவார்கள், பலருடைய மரணங்களுக்கு பல வகை காரணிகள் கண்டறியப்பட்டாலும் இன்றைய காலகட்டச் சூழ்நிலைகளில் தொலைத் தொடர்புச் சாதனங்களும் தற்கொலை எண்ணங்களுக்கான முக்கிய பங்கு வகிக்கின்றது.

அதாவது கையடக்கத் தொலைபேசி மூலம் பல தரப்பட்ட காதல் சம்பவங்கள் இணைக்கப்படுகின்றன. முகம் தெரியாத இந்தக் காதல்களினால் உண்டாகக் கூடிய விளைவுகள் தற்கொலை மரணங்கள்வரை வந்துபோகின்றது.

திருமணம் முடித்த ஆண் - பெண் இருவரும் தங்கள் தங்கள் துணையை விட்டு வேறு துணையை நாடும்போது உண்டாகக்கூடிய விபரீதங்களின் விளைவுகளும் சில இடங்களில் தற்கொலை வரை கூட்டிச்செல்கின்றது.

இது இவ்வாறிருக்கும்போது, பரீட்சையில் தோல்விகாணும் மாணவச் செல்வங்களும் மனமுடைந்து தற்கொலைவரை சென்றுவிடுகின்றார்கள். இதைவிட குடும்ப வறுமை, குடும்பப் பிரச்சினைகள், உறவுகளின் பிரிவுகள், விரும்பியது கிடைக்காமல் போகும்போது என்று தற்கொலை மரணங்களுக்கு பலவழிவகைகள் காணப்படுகின்றன. எனவே குடும்பங்களில் உண்டாகக் கூடிய திடீர் விளைவுகளால் உடன் மரணங்களைவிட மனஅழுத்தங்களுக்கு உள்ளான நிலையில் காணப்படுபவர்களை இனங்கண்டு தக்க ஆறுதல் கூறுவதுடன் சிறந்த மனோதத்துவ வைத்தியர்களிடம் கூட்டிச்சென்று சிகிச்சை அளிப்பதன்மூலம் அவர்களின் உயிரைக் காப்பாற்றலாம்.

இதேவேளை காதல் தோல்வி, பரீட்சை தோல்வி, குடும்பங்களில் உண்டாகும் விரிசல்களை இனங்கண்டும் அவர்களுக்கு "ரண ஆறுதல் அளிக்கவேண்டும். மன அழுத்தம் நீங்கி நிம்மதி உண்டாக ஆதரவு, பரிவான பேச்சு, உண்மையான அன்பு காட்டல் என்பவற்றின்மூலமும் பல மரணங்களை தவிர்த்துக் கொள்ளமுடியும் - இயன்றவரை மன அழுத்தங்களுக்கு உள்ளாவோரை தனிமையில் விடுவதை தவிர்த்து நாலு பேர் கூடியிருந்து கதைத்து, மனதைத் திடப்படுத்தினாலும் பலரைக் காப்பாற்றலாம்.

எது எப்படியிருந்தாலும் தற்கொலை மரணங்கள் என்பது சமூகத்தையும் கூட இருப்பவர்களையும் கடும் பாதிப்புக்கு உள்ளாக்கிவிடும் என்பதே உண்மையாகும். ஒரு மரணத்தின் வாயிலாக பலரை மன நோயாளிகளாக்கும் செயலே இந்தத் தற்கொலை மரணங்களாகும்.

# புலன்களின் புகலிடம்



"நிகர் இல்லாதவை
எவை?" காதலி
கேட்டாள். காதலன்
விடை அடுக்கினான்.

"பேராசைக்கு நிகரான
துன்பம் இல்லை!
பேராசைக்கு நிகரான
கொடுமை இல்லை!

பகைமைக்கு நிகரான
கலகம் இல்லை!
காதலுக்கு நிகரான
உணர்வும் இல்லை!

அன்புக்கு நிகரான
இன்பம் இல்லை!
காமத்துக்கு நிகரான
நெருப்பு இல்லை!

கோபத்துக்கு நிகரான
கெடுதி இல்லை
நோய்க்கு நிகரான
எதிரி இல்லை.

"வதந்திக்கு நிகரான
குழப்பம் இல்லை
சாந்திக்கு நிகரான
தெளிவும் இல்லை!"

காதலன் அடுக்கிக்
கொண்டே செல்ல
காதலி சிணுங்கினாள்.

"போதும் உங்கள் விடைத்
தொகுப்பு" என்றாள்
மோதும் பார்வையுடன்!"

அவளைப் பற்றி
எதுவும் கூறவில்லையே
என்ற பொறாமை!

புகழ்ச்சிக்கு மயங்காத
மனிதர் அரிது! காதலர்களும்
புகழ்ச்சியின் அடிமைகள்!

முத்தம் மட்டுமல்ல
முகஸ்துதியும் காதலில்
இனிக்கும்!
காதலன் சொல்லத்
தொடங்கினான்!

"உன்விழிக்கு நிகரான
வேலும் இல்லை"
வேறு வாளும் இல்லை!

உன் மொழிக்கு நிகரான
இனிமை இல்லை!
உன் இதழுக்கு நிகரான
மென்மை இல்லை!

உன் முறுவலுக்கு நிகரான
வெள்ளை இல்லை!
உன் கழுத்துக்கு நிகரான
சங்கும் இல்லை!

உன் மார்புக்கு நிகரான
மொட்டும் இல்லை!

உன் இடைக்கு நிகரான
கொடியும் இல்லை!

உன் நடைக்கு நிகரான
அன்னம் இல்லை!
உன் அழகுப் படைக்கு
நிகரான படையும்
இல்லை!
உன் அங்க எழிலுக்கு
நிகரான தங்கம் இல்லை!
உன் மூச்சுக்கு நிகரான
காற்றும் இல்லை!

உன் பேச்சுக்கு நிகரான
வேறு வார்த்தை இல்லை!
உன் மௌனத்தின்
நிகரான பேச்சும் இல்லை!
உனக்கு நிகரான
உலகும் இல்லை!
உனக்கு நிகரான
ஒன்றும் இல்லை!

"நீயின்றி நிகராக
எனக்கு ஏதுமில்லை!?"
விருப்பம் இல்லாதது போல
செவியில் வாங்கினாள்.

இடையே தடுத்தாளில்லை
அவன் மூச்சுமுட்டும் வரை
கூறிமுடித்த பின்னர்தான்
"போதும் பொய்கள்!?"
என்றாள்.

'இந்த விரலுக்கு நிகரான
கரும்பு இல்லை!"
என்றான் விரலை
கடித்தபடி...

"அது கரும்பு
இது அரும்பு
இரண்டையும்
விரும்புது மனது!
பசிக்கு ஏற்ற அமுது?"
என்று அவன் கண்கள்
சென்ற இடத்திற்காக
பொய்யாக முறைத்தாள்.

"இந்த அமுதுக்கு நிகரான
அமுதும் இல்லை!
இந்த விருந்துக்கு நிகரான
விருந்தும் இல்லை!?"
என்றான் குறும்பாக.

கைகளால் வளைத்து
அவன் மேனியை
தன்னுடன் சாய்த்து
பொன்னுடல். மீதில்
புதையல் தேடினான்.

"உன் மேனிக்கு நிகரான
வீணை இல்லை"
"உன் பொன்னுடலுக்கு
நிகரான புதிரும் இல்லை!
சிணுங்கினாள் வெட்கத்தில்
பொன்னுடல் சிவந்தது."

"கண்டதும் கவரும்
காரிகை நீ."

மொழி கேட்டதும்
மயங்கும் காரிகையும் நீ
உண்டதும் கிறக்கும்
இதழும் உனதே!
முகர்ந்ததும் ஈர்க்கும்
வாசனை உனதே!

தொட்டதும் சிலிர்க்கும்
புதிரும் நீயே! ஐம்புலன்களும்
உன்னிடம்
அடைக்கலமாகும்.

ஏழு உலகமும் உன்னிடம்
புகலிடம் தேடும்
நிகரில்லா தேவதை
நீயில்லா நிம்மதி ஏது?

நிம்மதி தாராய்
நிம்மதி தாராய்!
முழு மதி முகத்தாளே
என் மதி கவர்ந்தாயே!

உன் மதி கொண்டு
உலகைக் காண்பேன்!
உன் உயிர் கொண்டு
உலகில் வாழ்வேன்!

"ஐம்புலன் கவர்ந்த
அழகியே வாராய்!"
அணைத்தான்.
அணைத்தாள்

திரையைப் போட்டுவிட்டு
திருவள்ளுவரிடம்
செல்வோம்.

"கண்டுகேட்டு உண்டுயிர்த்
. உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள!!"
அதிகாரம்: 111 – குறள்:1101

## சிந்தியா பதில்

**சிந்தியா! ஜே.வி.பி.யின் புதிய தலைவர் அநுர குமார திசநாயக்க அக்கட்சி பற்றிய கடும்போக்கை சமாளிக்க வழிசமைப்பாரா?**

**எம்.றொனால்ட், மன்னார்.**

அவர் சார்ந்த கட்சியினர் வெளியிட்டு வரும் கருத்துக்கள் கடந்த காலங்களில் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளுக்கு எதிரானவையாக இருந்தது உண்மையே. அதுவே உமது இந்தக் கேள்விக்கும் காரணமாக அமைகின்றது.

ஆனால், அவரது கட்சி வாக்குகளை எதிர்பார்ப்பது பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இருந்தே ஆகும்.

எனவே இனங்களுக்கிடையில் ஆரோக்கியமான புரிந்துணர்வு ஏற்படும் வரை அநுர குமார திஸநாயக்கவிடம் இருந்து பாரிய மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

**சிந்தியா! முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அவரது ஆட்சிக்காலத்தில் சமாதானத்துக்கே முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளாரே?**

**பு.செந்தூரன், வவுனியா.**

அம்மையாரின் காலத்தில்தான் கனரக ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப் பட்டன. பாதுகாப்புச் செலவீனம் கற்பனை செய்யமுடியாதளவுக்கு எகிறியது.

றிவிரச, ஜெயசிக்குறு, சத்ஜெய என்று பாரிய நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

எனினும், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து வரலாற்றில் இடம்பிடித்துவிடவேண்டும் என்ற விருப்பம் அம்மையாருக்கு இருந்தது உண்மைதான். அதற்காகச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் உண்மைதான்.


**சிந்தியா! இந்தியாவில் மாநிலங் களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போன்றே இலங்கையிலும் எதிர் பார்க்கின்றாராமே சம்பந்தன்?**

**சி.சாரதா, காலி.**

கடந்த பல ஆண்டுகளாக சம்பந்தரின் முன்னாள் சகபாடியும் கூட்டணியின் தலைவருமான சங்கரியார் சொல்லி வருவது யாதெனில், "இந்திய மொடல் வேண்டும்" அந்த மொடலின்மீது சம்பந்தருக்கு இப்போதுதான் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்டளவில் அதிகாரங் களுடன் கிடைத்துள்ள மாகாண சபையையே நடத்தமுடியாமல் ஒப்புக்குத் தீர்மானங்கள் இயற்றுவதும், பழியை இன்னொருவர்மீது போட்டுவிடுவதும் என்று காலத்தை ஓட்டுகிறார்கள்.

இந்நிலையில் இந்தியன் மொடலுக்கு ஆசைப்படுவது கொஞ்சம் அதிகம்தான். (வயதும் போய்விட்டது)



**சிந்தியா! அமெரிக்கா ஒவ்வொரு நாடுகளையும் இரகசியமாக தொழில் நுட்ப ரீதியில் புலனாய்வு செய்கிறதாமே?**

**து.யசோதரன், கண்டி.**

அமெரிக்காவிற்கு தொடர்ந்தும் முதன்மை இடத்தில் இருக்கவேண்டும் என்பதில் தீராத வெறி இருக்கிறது.

ஆனால், உலக நாடுகளுடன் போட்டிபோட்டு அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கு போதிய வலு இல்லை. எனவேதான் குறுக்குவழியால் ஏனைய வர்களை இழுத்து வீழ்த்தியாயினும் தன்னை நிலைநிறுத்த முயற்சிக்கிறது.இது அமெரிக்காவிற்கே ஆரோக்கியமானதல்ல.

**சிந்தியா! சச்சினுக்கு வழங்கிய பாரத ரத்னா விருது மேடையில், மக்களுக்கு சேவை செய்வதாக வாக்குக் கொடுத் துள்ளாரே. விருதுக்கு முதல் இதைப் பற்றி ஒரு மேடையிலும் கூறவில்லையே. ஏன்?**

**ஜே.டொறின், கொழும்பு –06.**

ஏற்கெனவே இந்திய நாடாளு மன்றத்தில் கௌரவ உறுப்பினராக இருக்கின்றார். அந்தப் பதவியை வைத்து மக்களுக்கு எதுவும் செய்ததாகச் செய்திகள் இல்லை. இந்நிலையில் பாரத ரத்னாவை வைத்து என்னத்தைச் செய்யப்போகிறாராம்.

**சிந்தியா! மழை வருவதற்கு முன் எறும்பு இனங்கள் தமது முட்டைகளையும் காவிக்கொண்டு சென்று வேறு இடத்தில் பாது காப்பாக இருக்கின்றன. எவ்வாறு உணர்ந்து கொள்கின்றன?**

**எஸ்.கே.தேவன், யாழ்ப்பாணம்.**

படைத்தவன் எல்லா உயிர் களிடத்திலும் அன்பு நிறைந்தவன். உருவாக்குவதும், அழிப்பதும் மட்டுமல்ல, பாதுகாப்பதும் படைப்பவனின் கடமை அல்லவா? உணர்த்துவது அவன் கடமை.

உணர்ந்துகொள்வது உயிர்களின் கடமை. அது எறும்புகளுக்கும் நமக்கும் எல்லா உயிர்களுக்கும் பொருந்தும்.

**சிந்தியா! பேஸ்புக் ஒரு சமூக நோயாக மாறிவிட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றனவே?**

**சி.காருண்யா, மானிப்பாய்.**

ஆம். ஆய்வுகள் அப்படித்தான் தெரிவிக்கின்றன. ஆனால், அதனை சமூக நோய் - சமூக ஊக்கி என இரண்டு வகையாகவும் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

அது பயன்படுத்துகின்ற எம் போன்றவர்களின் கரங்களில்தான் தங்கியிருக்கின்றது என்பதுதான் எனது கருத்து.


ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

" நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை. "

**ஒபாமா:-** மிஸ்டர் மகிந்த! போனால் போகட்டும் உலகமயமாக்கலில் கொஞ்சம் பொறுத்துப் போவோம் என்று பார்த்தால் தொடர்ச்சியாக எம்மை அவமதித்து நடக்கின்றீர்கள். விசாரணை செய்யுங்கள் என்றால் வீராப்பாக இருக்கிறீர்கள். குற்றவாளியைத் தண்டியுங்கள் என்றால் கண்டும்காணாமல் நடக்கிறீர்கள்.

**மகிந்த:-** (புன்முறுவலுடன்) எங்கள் நாடு இறைமையுள்ளது. தனித்துவமானது. மக்களின் ஆட்சி இங்கு நடக்கிறது. உம்மைப் பற்றி நாம் ஏன் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஒபாமா:-** நாங்கள் சொல்வதைக் கேட்டிருக்கவேண்டும். நாம் சொல்வது அன்றி அணுவும் அசையக்கூடாது.

**மகிந்த:-** எங்களுக்கு உத்தரவு போட நீங்கள் யார்?

**ஒபாமா:-** ஹ...ஹா...ஹா... நாங்கள் சுட்டு விரல் அசைத்தால் இந்த உலகம் சுற்றுவதை நிறுத்திவிடும்.

**மகிந்த:-** உலகம் சுற்றுவதை நிறுத்துவது இருக்கட்டும், நீங்கள் உலக மக்களின் காதுகளில் பூச்சுற்றுவதை நிறுத்துங்கள்.

**ஒபாமா:-** உம்மோடு எமக்கென்ன பேச்சு. செய்கிறீரா?, இல்லையா?

**மகிந்த:-** முதலில் நீங்கள் செய்யுங்கள். உலகை மக்களை கொல்வதை நிறுத்துங்கள். உலகம் எங்கும் உளவு பார்ப்பதை நிறுத்துங்கள். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மற்றவர் விடயங்களில் மூக்கை நுழைப்பதை நிறுத்துங்கள்.

**ஒபாமா:-** ஓ மை கோட், இதைத்தான் முன்னர் சதாமும் சொன்னார். நடந்தது தெரியும்தானே?

**மகிந்த:-** நியாயத்தை யார் சொன்னாலும் அது ஒரே விதமாகத்தான் இருக்கும்.

**ஒபாமா:-** மிஸ்டர் மகிந்தா! அப்பாவி மக்களை கொன்று குவிக்கும்படி புத்தபிரான் உங்களுக்குச் சொல்லித் தந்தாரா?

**மகிந்த:-** தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்று காந்தி சொல்லிக் கொடுத்தது நீர் அறியவில்லையா?

**ஒபாமா:-** ஓ... ஹோ... நீர் அவரிடம் போய்விட்டீரா? அதுதான் கையில் கம்பு வைத்துக் கொண்டு திரிந்தாரா? பேசியது அன்பு வழி, பிடித்தது கம்பு நுனி! போகட்டும் உங்களைக் கொல்ல வரும் பசு யார் என்று அறியலாமா?

**மகிந்த:-** பசுவல்ல அது. கழுகு! பக்கத்து நாடுகளில் வட்டமிடுகிறது. அப்பப்போ எங்களின் நாட்டுக்கு மேலாகவும் வந்து மோப்பமிட்டுச் செல்கிறது. அங்கிருந்தபடி எங்கள் நாட்டைப் பார்த்து சதித்திட்டம் தீட்டுகிறது.

**ஒபாமா:-** ஏதேதோ சொல்கிறீர்கள். உங்கள் ஆட்சியில் விரைவில் சங்கடங்கள் வரப்போகிறது. முதலில் அதைப்பாரும்.

**மகிந்த:-** உள்நாட்டுத் தேர்தலில் நாம் கிடக்க, உமது மேய்ச்சலுக்கு ஜெனீவாவில் வழிபண்ணி விடுவீராக்கும்!

**ஒபாமா:-** பொருளாதாரத்டை போடுவோம்.

**மகிந்த:-** பேஷ் பேஷ்...

**ஒபாமா:-** நட்புறவை நிறுத்துவோம், உலகக் கண்டனத்தைத் திரட்டுவோம்.

**மகிந்த:-** நீங்கள் சொல்லும்படி உலகம் ஆடிய காலம் மலையேறிவிட்டது.

**ஒபாமா:-** வட் டு யூ மீன்?

**மகிந்த:-** ஈராக்கில் போர் முடிந்தது என்கிறீர்கள், ஆனால் முடியவில்லை. சிரியாவில் எல்லாம் சுபம் என்கிறீர்கள். நடக்கவில்லை. லிபியாவில் ஜனநாயகம் மலர்ந்தது என்கிறீர்கள். காணவே கிடைக்கவில்லை. எமக்கு உலகம் ஆதரவு கொடுக்காது என்கிறீர்கள். நிச்சயம் கிடைக்கும்.

**ஒபாமா:-** இறுதியாக என்ன கூறுகிறீர்?

**மகிந்த:-** நண்பராக இரும். எஜமானாக நினையாதீர். விருந்தினராக வந்து செல்லும். விரோதியாக உள்நுழையாதீர்.

**ஒபாமா:-** இலங்கைத் தீவைச் சுற்றி நாங்கள் இருக்கின்றோம்!

**மகிந்த:-** அதை நாங்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

**ஒபாமா:-** இதுதான் முடிவா?



**மகிந்த:-**
முடிந்த முடிவு!
(பாடுகிறார்)
அமெரிக்கா
என்னடா
பிரிட்டன் என்னடா
ஆதிக்கம் தேடும்
உலகத்திலே!
ஆணையிடுவதில்
அர்த்தம் என ம்னடா
சரிசமமான
நாட்டினிலே!
போடா டேய்.....!

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

## விதியால் முடமான மதியாளர்



வெல்ஸின் சிந்தனையிலே புதிய புதிய கருத்துக்கள் ஒளிவிட்டன. திடீரென்று நள்ளிரவில் எழுந்து உட்கார்ந்து, கொண்டு உள்ளத்திலே தோன்றிய சிந்தனைப் பொறிகளைத் தன் குறிப்புப் புத்தகத்திலே குறித்துக் கொள்ளுவார். ஒன்றுக்கும் உதவாதவர், சோம்பேறி, மந்தபுத்தி, மக்கு என்று ஜவுளிக் கடையிலிருந்து விரட்டப்பட்ட இவர் தன்னுடைய நோட்டுப் புத்தகங்களிலே நூற்றைம்பது வருஷங்கள் தொடர்ந்து எழுவதற்கான ஆதாரங்களையும் குறிப்புக்களையும் சேகரித்துவைத்திருந்தார்.

இவர் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தன்னுடைய இலக்கியங்களைச் சிருஷ்டிக்கும் திறமைபெற்றவர். தன்னுடைய லண்டன் தொழிற்சாலையிலும் உட்கார்ந்து எழுதுவார்; ரயிலில் போகும்போதும் எழுதுவார். மத்தியதரைக் கடலின் பீச்சிலே குடையின்கீழ் உட்கார்ந்தபடியும் எழுதுவார்.

மாலையிலே நண்பர்களுடன் அளவளாவுவார். வெல்ஸுக்கு நண்பர்கள் என்றால் உற்சாகமளிக்கும் ஒயினைப் போல, யாராவது நண்பர்களுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தால் தான் அவருக்குத் திருப்தியாக இருக்கும். எச்.ஜி.வெல்ஸின் புத்தகங்களுக்கு இலக்கியவானிலே ஒரு தனிப்பட்ட மதிப்பு உண்டு. அபாரமான கற்பனைத்திறனுக்குப் பெயர் போனவர் வெல்ஸ். இவரது பல நாவல்களைத் திரைப்பட மாகவும் ஆக்கி இருக்கிறார்கள். 60 வருசங்களுக்கு முன் 1946 இல் இவர் காலமானார். கொடிய விதியின் இரும்புப் பிடியிலிருந்து தன் மனோபலத்தினால் விடுதலை பெற்று வாழ்ந்த மேதை இவர்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(13.02.2014 தொடக்கம் 19.02.2014 வரை)

### மேடம்

காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும், பொருட்செலவுகளும் உண்டாகலாம். வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும். விட்டுபோன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன்வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குக் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள். மற்றவர்களுக்காக ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். தந்தை - மகன் உறவில் இருந்துவந்த பிரச்சினைகள் தீரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களை பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சிலகாரியங்களை சாதித்துக் கொள்ளுவீர்கள். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாக வாய்ப்புகள் உள்ளது. செல்வச் செல்வாக்கு, புகழ் கூடும். பொதுப் பணித்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோர்கள், பொதுப்பணித் துறையை சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள், வக்கீல்கள் அச்சுத் தொழில் செய்வோர்கள் ஆகியோர்கள் நல்ல பலன் அடைவார்கள். ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனகிழ்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது.

### மிதுனம்

உற்றார், உறவினர்களால் மனச்சஞ்சலம் வந்துசேரும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். கணவன் - மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபம் தவிர்த்தல் நல்லது. தேவாலயத் திருப்பணிகளில் கலந்துகொண்டு தொண்டாற்றுவதன்மூலம் மனநிறைவு ஏற்படும். பிள்ளைகளால் பொருள்வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காணாமற் பொருட்செலவுளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப்பழகவும். உடம்பில் மேகம், உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பரிசு மற்றும் பாராட்டுதல்களையும் பெறக்கூடிய காலமாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் செய்தொழிலில் பங்காளிகளால் எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும் காலமாகும். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. தந்தை - மகன் உறவுகள் நன்றாக இருக்கும். புதிய நண்பர்கள் சேர்கையால் எதிர்பாராத தன இலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்றுக் காலதாமதம் ஏற்படலாம். மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்களும் நன்மை அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### சிங்கம்

உடம்பில் சுரம் உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். கூட்டுத்தொழில் முயற்சிகளில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. இதுவரை இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச்சந்தோசம் அடையலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். தூரத்து உறவினர்களின் வரவால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள். நீண்ட தூரப் பயணங்களின்போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள். விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்கு பலிதமாகும்.

### கன்னி

குடும்பத்தில் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் சற்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். லோட்டரி போன்ற விசயத்தில் பணம் பொருள்களை ஏமாற்றம் அடை யாமல் இருக்கவும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகவும் எச்சரிக் கையுடன் இருப்பது நல்லதாகும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்க போட்ட திட்டங்கள் தடையின்றி நிறைவேறும்.

### துலாம்

பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். நீண்டதூரப் பயணங்களின் மூலம் சந்திக்கவேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம். தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகளால் மருத்துவச்செலவுகள் வந்துசேரும். வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் சிறந்ததாகும். குழந்தைகளால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். திருமணம் போன்ற சுப காரிய நிகழ்ச்சிகளில் மிகுந்த கவனமுடன் இருக்கவும்.

### விருச்சிகம்

செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் கவனம் தேவை. உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். தாய்வழிச் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்றுவருதல் நல்லது. உடம்பில் சளி, அலர்ஜி மற்றும் சீதளம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். புதியதாகக் கடன்வாங்க செய்த முயற்சிகளில் வெற்றி பெறச் சற்றுக் கால தாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும். அடிமையாட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். தேவை இல்லாமல் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. செய்தொழிலில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தவிர்க்கவும். குலதெய்வ வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

### மகரம்

வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். தென் திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மிகுந்த பிரயாசையின் மேல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சமாளித்து கொள்வீர்கள். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும். நெருப்பு தொழில், நிலபுலன்களை வாங்குவோர் விற்போர்கள், பொதுப்பணித் துறையை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் இலாபம் அடைவீர்கள். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும்.

### கும்பம்

காணாமற்போன பொருட்கள் சம்பந்மில்லாத நபர்களால் வீடு வந்துசேரும். வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. காதல் சம்பந்தமான விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். பொருளாதார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவி வழிச் சொந்தபந்தங்களால் மாற்றம் உண்டாகி மனநிறைவை அடைவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்துமுடிப்பீர்கள். புதிய வீடு நிலம் வாங்க எதிர்பார்த்திருந்த கடன் கேட்ட பணம் கை வந்துசேரும். தாயின் உடல் நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

கணவன் - மனைவி உறவுகளில் பிரச்சினைகள் வந்து நீங்கும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உத்தியோக துறையினர்கள் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுத்தொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம். உடம்பில் தலை மற்றும் முகம் ஆகிய உபாதைகள் வந்து தீரும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும்.

Regd. as a News Paper at the G.P.O. (QD/86/NEWS/2012)






## தங்க உள்ளாடை

சுமார் 11 கோடி ரூபாக விலைமதிப்புமிக்க இந்த டு பீஸ் உள்ளாடை 3 கிலோகிரோம் தங்கத்தினைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த உயர்தர வடிவமைப்பு விற்பனைக்காக வடிவமைக்கப்படவில்லை. இந்த உள்ளாடையை மத்திய சீனாவில் ஹபேய் மாகாணத்தின் வுஹான் நகரிலுள்ள கோல்ட் ஸ்மித் நிறுவனத்தினால் சுமார் 6 மாதங்கள் செலவு செய்து உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த நிறுவனம் சுமார் 5 மில்லியன் யுவான்களை செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த உள்ளாடையை மொடல் ஒருவர் அணிந்துகொண்டு கோல்ட்ஸ்மித் காட்சியறையில் கவர்ச்சிகரமாக வலம்வந்து காட்சிப்படுத்தினார். அன்றைய நாள் முழுவதும் வாடிக்கையாளர்களைக் கவர்ந்த டு பீஸ் மற்றும் மொடலினை பலரும் தங்களது தொலைபேசியினூடாக புகைப்படம் எடுத்துள்ளனர். முழுமையாக தங்கத்தினால் ஆடை வடிவமைக்கப்படுவது இது முதற்தடவையல்ல.



## பிரமிப்பு

நீங்கள் காணுகின்ற இந்துபடி கிணறு கேரளா மாநிலம் கண்ணூர் நகரத்திலிருந்து 14 கி.மீ தூரத்தில் கண்ணூர்-கூத்துபரம்பா நெடுஞ்சாலையில் உள்ள பேரளசேரி எனும் சிறு நகரில் இந்தப் படிக்கிணறு அமைந்துள்ளது. இந்த பிரமிக்கவைக்கும் கிணற்றின் தோற்றம் ராஜஸ்தானிய படிக்கிணறுகளை ஒத்திருக்கிறது. படிக்கிணறுகள் பெரும்பாலும் அந்தக் காலங்களில் மழை நீரை சேமித்துவைக்கும் பொருட்டு உருவாகப்பட்டாலும், மிக நேர்த்தியாக நம் கலாசாரத்தையும், வரலாற்றுப் பெருமையையும் எடுத்துக்காட்டும் உன்னத கலை வடிவங்களாக இன்று நம்மிடையே மிஞ்சியுள்ளது.



## முயற்சி...

சீனாவைச் சேர்ந்த 63 வயதான Nie Yongbing என்பவர் தனது மூக்கினைப் பயன்படுத்தி கார் ரியூப்களில் காற்றை நிரப்பி பலரது கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்துவருகின்றார்.

இதில் விசேட அம்சம் என்னவென்றால் ஒரே நேரத்தில் 4 ரியூப்பளில் இருவர் வீதம் ஏறி நிற்கச் செய்து அவற்றினை காற்றினால் நிரப்பும் அளவிற்கு சக்தி வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## அபூர்வம்

பொதுவாக ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் காணப்பட்டால் அவர்களில் பிறந்தநாளை நினைவில் வைப்பது என்பது சற்று கடினமே. ஆனால் பிரித்தானியாவில் கும்பிறியாவில் கிளியேட்டர் மூர் எனும் இடத்தைச் சேர்ந்த பீற்றர் டன் (24) எமிலி சக்றுஹாம்(22) என்ற தம்பதிகளுக்கு அக்கவலையே இல்லை. ஏனென்றால் இவர்களுக்கு பிறந்த 4 குழந்தைகளுமே ஒரு திகதியில் தனது பிறந்த நாளைக் கொண்டுகின்றனர்.

இத்தம்பதிகளின் மூத்த மகனான சாம்(5), மற்றும் இரண்டாவதாக பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளான புரூக்(2) மற்றும் நிகோலி ஆகியோர் ஜனவரி மாதம் 12ஆம் திகதியே தமது பிறந்த நாளைக் கொண்டாடினர்.

இவர்களின் நான்காவது மகனான ரேயன் கடந்த 12ஆம் திகதி பிறந்துள்ளான். இவ்வாறு ஒரு தாய்க்கு பிறந்த 4 பிள்ளைகளும் ஒரே நாளில் பிறந்த நாளைக் கொண்டாடுவது 133225 பிறப்புகளுக்கு ஒரு பிறப்பு என்ற வீதத்தில் இடம்பெறும் அபூர்வ நிகழ்வாகும்.



## யோகா

எமது உடலை இறுதிவரை நோய்கள் நெருங்காவண்ணம் ஆரோக்கியமாக பேணுவதற்கு பல்வேறு முறைகளை நாம் கையாண்டு வருகின்றோம். அவற்றுள் முதன்மையானது யோகாப் பயிற்சி என்றால் மிகையாகாது.

அதற்குச் சான்றாக யோகாப் பயிற்சியில் ஈடுபடுகின்ற வயோதிபர்கள் பலரும் ஆரோக்கியத்துடன் நம்முன் வாழ்ந்துவருகின்றனர். அவர்களில், தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் கடந்த ஆண்டிற்கான யோகா சம்பியன் ஷிப் போட்டியில் கலந்துகொண்டு ஜமாய்த்துக் கொண்டிருப்பதையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 01 வியாழக்கிழமை (13.02.2014) பக்கங்கள் IV ஓசை - 135

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு

## அனைவரும் இணைய வேண்டுமென்கிறது இந்தியா



(புதுடில்லி)

இலங்கையில் தொடர்ந்து வரும் இனச்சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் அந்நாட்டு அரசாங்கம் அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துத் தரப்பினரும் இணைந்து அனைவரது ஒத்துழைப்புடனும், சிறந்த தீர்வொன்றை அடைய முன்வருவதே சிறந்த வழியாகுமென இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள உயர்மட்ட ஊடகவியலாளர்கள் 20 பேர் அடங்கிய குழு, இந்திய அரசின் அழைப்பின் பேரில் புதுடில்லி சென்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் இந்த ஊடகவியலாளர்கள் நேற்று மாலை சந்திப்பொன்றை மேற்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா ஆரம்பத்தில் உறுதியாக இருந்தது. இச்சட்டத் திருத்தம் என்பது ஓர் ஆரோக்கியமான ஆலோசனை iv பக்கம் பார்க்க...

## முல்லைத்தீவில் விபத்து; கண்டி இளைஞர் பலி

முல்லைத்தீவு பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் கண்டி, அக்குறனை பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது ஹில்மி (வயது-24) என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் முல்லைத்தீவு நகரில் வியாபார நிலையமொன்றை நடத்திவரும் தனது நண்பருடன் முல்லைத்தீவுக்கு வருகை தந்துள்ளதுடன், அவர் iv பக்கம் பார்க்க...

## நியூஸிலாந்து செல்ல முயற்சி; சிறுவர்கள் உட்பட 75 பேர் கைது

### கடற்புலி அம்பியும் அடக்கம்

சட்டவிரோதமான முறையில் நியூஸிலாந்து செல்ல முயன்ற 75 பேரில் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கடற்படை உறுப்பினரான அம்பி என்றழைக்கப்படும் கிளிநொச்சி, பளை பிரதேசத்தைச் சேர்ந்த கணபதி நிமலதாஸ் என்பவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்தொடர்பில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

iv பக்கம் பார்க்க...

## ஜனாதிபதியை சந்தித்தார் ஐ.நா. உதவிச் செயலர் "சூ"



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா.வின் உதவிச் செயலரும், யு.என்.டி.பி.யின் ஆசிய பசுபிக் பணிப்பாளருமான ஷாயோயிங் சூ நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யுத்தம் இடம்பெற்று நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடக்கு மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு காணப்பட்ட தீர்வு மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி எடுத்து விளக்கினார்.

ஜனாதிபதியுடனான சந்திப் iv பக்கம் பார்க்க...

## அரசுடன் இணைந்து செயற்பட்டால் கூட்டமைப்பு பயனை அடையலாம்

### நோர்வே தூதுவரிடம் யாழ்.ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே பயனை அடைய முடியும். அரசும் அதனையே விரும்புவதாக நேற்றைய தினம் தன்னைச் சந்தித்த நோர்வேத்தூதுவர் கிரேசன் லோசனிடம் யாழ்.மறைமாவட்ட ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக யாழிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் நேற்று மாலை யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரம் ஆண்டகையை யாழ். இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, வடமாகாண சபையின் செயற்பாடுகள் என்ன, அவை மக்களுக்கு திருப்தியளிக்கின்றனவா என்று ஆயரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஆயர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாண சபையில் அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை காணப்படுகின் iv பக்கம் பார்க்க...

## சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் விரைவில் அமுல்

சாட்சிகள் மற்றும் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டங்கள் விரைவில் அமுல்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் விசேட சட்ட மூலத்தை உருவாக்கும் பணிகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் இந்த வரைவுச் சட்டத்தை நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் சட்டவாக்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்த காலத்தில் இடம்பெற்ற iv பக்கம் பார்க்க...

## வடக்கின் அபிவிருத்தி குறித்து நோர்வே தூதுவர் - முதல்வர் பேச்சு

(யாழ்ப்பாணம்)



வடமாகாண அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்துடன் வடமாகாணசபை, ஐக்கிய நாடுகள் சபை என்பன இணைந்து பணியாற்றுவது சம்பந்தமாகவும் வடமாகாணத்தில் எவ்வகையான அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவது என்பது குறித்தும் ஆராயும் முகமாகவே நோர்வேத் தூதுவர் கிரேசன் லோசன் நேற்று தம்மிடம் பேசியதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் வடகமாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நடைபெற்ற நோர்வே தூதுவருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு இந்தச் சந்திப்பு குறித்து விளக்கமளிக்கையிலேயே முதலமைச்சர் iv பக்கம் பார்க்க...

# புத்தூர் ஊறணி கிராமத்தின் குடிநீர் பிரச்சினை குறித்து ஆராய்வு

புத்தூர் ஊறணி கிராமத்தின் குடிநீர்ப்பிரச்சினை தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை புத்தூர் ஊறணி கிராமத்திற்கு விஜயம் செய்த வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்மக்களுடைய குடிநீர்ப்பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து அறிந்து கொண்டார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், உண்மையாக தமிழ் மக்களையும், எமது பிரதேசத்தையும் நேசிக்கின்ற தலைவர் என்றால் அது எமது தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவாகத் தான் இருக்கமுடியும்.

உங்களுக்கு தாகத்திற்கு குடிப்பதற்கு குடிநீர் இல்லை, காலைக்கடமைகளை முடிப்பதற்கு மலசலகூட வசதிகள் இல்லை, நிரந்தரமாக குடியிருப்பதற்கு வீடுகள் இல்லை இதற்காக எல்லாம் குரல் கொடுக்காதவர்களிற்கு நீங்கள் அனைவரும் தேசியம் என்ற சொல்லிற்கு வாக்களித்திருக்கிறீர்கள்.

எனவே நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்பட்டால் உங்களுடைய பிரதேசம் அபிவிருத்தி அடையும் என்று கூறிய அவர் உங்களுடைய குடிநீர் பிரச்சினை தொடர்பாக எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடைய கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். இச்சந்திப்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர் ம.சந்திரசேகரமும் உடனிருந்தார்.

# கிளிநொச்சி இ.போ.ச. சாலையிலிருந்து முல்லைத்தீவிற்கு சேவை இல்லை

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்துச் சேவையின் பேருந்துகள் எவையும் கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவிற்கு சேவைக்கு அனுமதிக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சேவையின் கிளிநொச்சி சாலையிலிருந்து புதுக்குடியிருப்பு வரைக்கும் இரு பேருந்துச் சேவைகளே நடைபெற்று வருகின்றன. இச்சேவையினை முல்லைத்தீவு வரை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லையென தெரியவருகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வரைக்கும் நாள் ஒன்றிற்கு தனியார் பேருந்துகள், இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேருந்துகள் உட்பட 35 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் கிளிநொச்சி சாலையிலிருந்து முல்லைத்தீவுக்கு ஒரு சேவைக்குக் கூட அனுமதிக்கப்படவில்லை. ஆனால் ஐந்து தனியார் பேருந்துகளுக்கும் ஐந்து இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியுமென்றும் இதைவிட இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையில் ஈடுபட முடியுமென்றும் உள்ளபோது இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கே)

# சட்டவிரோத மரக்கடத்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மை நாட்களாக சட்டவிரோதமாகக் கடத்திச்செல்லப்படும் மரக்கடத்தல்கள் அனுமதிப்பத்திரம் அற்ற மரம் அரிவு காலைகள் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு வருகின்றன.

வள்ளிபுனம், கைவேலி, உடையார்கட்டு, இரணைப்பாலை போன்ற இடங்களில் சட்டவிரோதமான முறையில் மரங்களைக் கடத்திச்சென்ற பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று வள்ளிபுனம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக இயங்கி வந்த மரம் அரிவு காலைகள் முற்றுகையிடப்பட்டு பெறுமதி வாய்ந்த முதிரை மற்றும் பாலை மரங்கள் மீட்கப்பட்டுள்ளன. (கே)


## சிறு விளம்பரம்

### குரு சாத்திரம்

ஆண் குழந்தை வேண்டுமா? பெண் குழந்தை வேண்டுமா? நீங்கள் விரும்பும் குழந்தைச் செல்வத்தை பெற்றெடுத்துக் கொள்வதற்கு எம்மிடம் குடும்பத்துடனும் இருவரின் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0778019323.

(C/3345)





# சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடித்தவர்கள் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளினால் யாழ். பண்ணை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சுருக்கு வலைத்தொகுதி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதனைப் பயன்படுத்தி மீன்பிடித்த மன்னாரைச் சேர்ந்த இரண்டு மீனவர்களும் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ். கடற்றொழிலாளர்கள் சிலருடன் இணைந்து பண்ணை கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி இவர்கள் இரண்டு படகுகளில் மீன்பிடிப்பதாக புலனாய்வுப் பிரிவினர் மூலமாக தகவலறிந்த யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் இவர்கள் இருவரையும் பிடித்ததுடன், இவர்களிடமிருந்து இரு பிளாஸ்ரிக் படகுகள், பெருமளவு மீன்களையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து இவர்கள் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதையடுத்து இவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிமாவட்ட மீனவர்கள் பலர் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தடைசெய்யப்பட்ட தொழில்முறையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த திணைக்கள அதிகாரி, இவ்வாறு தடைசெய்யப்பட்ட றோலர், தங்கூசி வலை, டைனமைற், சுருக்குவலை போன்றவற்றின் மூலமாக உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் வெளிமாவட்ட மீனவர்கள் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கைகளுக்கு துணைபோகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதுடன், விழிப்பாக இருக்குமாறும் கேட்டுள்ளார்.

இவ்வாறு துணைபோவபர்கள் உட்பட சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸாரின் உதவியுடன் பிடிக்கப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் எச்சரித்துள்ளார். (பா)


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 230 | திகதி 2014.02.11 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 12 14 19 35 | ஆங்கில எழுத்து: Y

பரிசுத் தொகை ரூபா. 12,631,940/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 220 | 220,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 373 | 373,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9930 | 595,800/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5173 | 206,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 129760 | 2,595,200/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18856 | 377,120/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 12,631,940/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,818,040/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,885,920/-

2014.02.14ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/3339) web : www.dlb.lk




யாழ். குடாநாட்டிற்கு நேற்றைய தினம் வருகைதந்த நோர்வேத் தூதுவர் கிரேசன் லோசன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது வடக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆளுநர் விரிவாக விளக்கினார். (பட உதவி: நந்தகுமார்)

# கலைத்தூது கலையகத்தில் "இயற்கை ஆடுகளம்" நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத்தூதரகமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து வழங்கும் 'இயற்கை ஆடுகளம்' நடன அளிக்கைகள் நாளை மாலை 5.00 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய ஐம்பூதங்கள் பற்றி தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்வுக்கான நடனங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

'இயற்கை ஆடுகளம்' நிகழ்வுக்கான நட்டுவாங்கத்தை ஈழத்தின் புகழ்பெற்ற நடன ஆசிரியர்களான கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன், திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் மற்றும் திருமதி சுதர்சினி கரன்சன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

குரலிசையை சங்கீத கலாவித்தகர் ம.தயாபரன், நுண்கலைமாணி சிவராஜா சிவதர்ஷிகா ஆகியோரும், மிருதங்க இசையை இசைமாணி சி.துரைராஜா, வயலின் இசையை கலைஞான கேசரி அம்பலவாணர் ஜெயராமன், கீபோட் இசையை திருமறைக் கலாமன்ற இசைத்துறை இணைப்பாளர் இசைத்தென்றல் ம.யேசுதாசன் ஆகியோர் வழங்குவர். (27)

# மீள்குடியேறிய மக்களின் தேவைகள் துணுக்காயில் கணிசமானளவு பூர்த்தி

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இற்றைவரை மீள்குடியேறிய 3,647 குடும்பங்களின் தேவைகள் கணிசமானளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.


மேலும், இங்கு இவ்வருட இறுதியினுள் 456 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் நேற்றுக் கூறினார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள பிரதேசங்களில் 3 ஆயிரத்து 647 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 419 பேர் மீள்குடியேறினர்.

இங்கு இதுவரையில் ஆயிரத்து 698 புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், நேப் திட்டத்தின் கீழ் 235 வீடுகளும், யு.என.கபிரேட் நிறுவனத்தால் 250 வீடுகளும் இந்திய அரசாங்கத்தின் மாதிரி வீட்டுத் திட்டத்தில் 50 வீடுகளும் யு.எஸ்.ஏ. நிறுவனத்தின் நிதியில் 71 வீடுகளும், இந்திய வீட்டுத் திட்டத்தில் ஆயிரத்து 92 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், யுத்தத்தினால் பகுதியளவில் சேதமடைந்த 460 வீடுகளும் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்காக புதிய கிணறுகளை அமைத்தல், ஏற்கனவே உள்ள கிணறுகளை புனரமைத்தல் ஆகியவையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், பனை தென்னை வள அபிவிருத்தி சபைத் தலைவருமான பசுபதி சீவரட்ணத்தின் தாயாரின் இறுதி நிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), கட்சியின் சுவிஸ் கிளை அமைப்பாளர் திலக், வலி. வடக்கு அமைப்பாளர் அன்பு ஆகியோர் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## நவநாகரிகமான முறையில் வந்து குளிர்பானம் திருடிய பெண்கள்

(தெல்லிப்பழை)

நவநாகரிகமான முறையில் வியாபார நிலையமொன்றில் பொருட்கள் வாங்க வந்த இரண்டு பெண்கள் அங்கிருந்த இரண்டு குளிர்பானப் போத்தல்களைத் திருடி அகப்பட்டுக் கொண்ட சம்பவமொன்று தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள வியாபார நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இரு பெண்கள் வியாபார நிலைய உரிமையாளரிடம் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த பெண்கள் கேட்ட பொருள் ஒன்றினை எடுப்பதற்காக வியாபார நிலைய உரிமையாளர் நிலையத்தின் பின்பக்கம் சென்றவேளை, குறிப்பிட்ட இருபெண்களும் கடையின் முன்னால் இருந்த இரண்டு பெரிய குளிர்பானப் போத்தல்களைத் திருடி மோட்டார் சைக்கிளின் இருக்கையின் கீழுள்ள பொருள் வைக்கும் இடத்தில் வைத்துள்ளனர்.

இதனைத் தூரத்தே நின்று அவதானித்துக்கொண்டிருந்த சில இளைஞர்கள் உடனடியாக ஓடி வந்து உரிமையாளரிடம் இது பற்றித் தெரிவித்துள்ளனர். உரிமையாளர் குறிப்பிட்ட பெண்களின் மோட்டார் சைக்கிளின் இருக்கையின் கீழ்ப்பகுதியினைச் சோதனை செய்து பார்த்த போது 2 குளிர்பானப் போததல்கள் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளார்.

தொடர்ந்து உரிமையாளர், இருவரும் பெண்கள் என்ற காரணத்தினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யாமல் கடுமையாக எச்சரிக்கை செய்து அவர்களைச் செல்ல அனுமதியளித்தார்.

## கள்ளப்பாடு மீனவரிடமிருந்து கருவாடு கொள்வனவு செய்த ஹாவோ



(முல்லைத்தீவு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் குழுவின் ஆசிய பசுபிக் தலைவருமான ஹாவோ சூ, நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்குச் சென்றதுடன், அங்கு சுய தொழிலில் ஈடுபட்டு வரும் கள்ளப்பாடு மீனவர்களிடமிருந்து கருவாடு கொள்வனவு செய்துள்ளார்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தினால் முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்று, கள்ளப்பாடு பிரதேசத்தில் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையினையும் ஐ.நா, உதவிச் செயலாளர் நாயகம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐ.நா.வின் மனிதநேய இணைப்பாளரும், யு.என்.டி.பி.யின் வதிவிடப் பிரதிநிதியுமான சுபி நேந்தி, யு.என்.டி.பி.யின் இலங்கைக்கான பணிப்பாளர் ரஷீனா பில்கிரமி, யு.என்.டி.பி.யின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் கணேசராஜா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல உதவித் திட்டங்களை இலங்கை அரசினூடாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஐ.நா. சபையின் உதவிச் செயலாளர் மீனவர்களிடம் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் குறித்த பிரதேசத்தில் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் கிலோ ஐஸ் கட்டி தயாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (40)

## உப உணவுச் செய்கைக்கு உழுந்து, எள்ளு வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் ஆயிரத்து 20 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்தும், 360 ஏக்கர் நிலப்பரப்பில் எள்ளும் பயிரிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பாடவிதான உத்தியோகஸ்தர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களில் காலபோக நெற்செய்கையுடன், உழுந்து, நிலக்கடலை, எள்ளு உள்ளிட்ட உபஉணவுச் செய்கைகள் மேற்கொள்ளப்படுவது வழமை.

அந்த வகையில் இவ்வருடம் விவசாயிகளினால் 1,020 ஏக்கரில் உழுந்து செய்கை செய்யப்பட்ட அதேவேளை, உலக உணவு ஸ்தாபனத்தினால் 630 ஏக்கர் நிலத்தில் பயிரிடுவதற்கான எள்ளு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 360 ஏக்கர் நிலத்தில் எள்ளு இதுவரையிலும் பயிரிடப்பட்டுள்ளது.

மிகுதி பிரதேசங்களில் எள்ளினைப் பயிரிடும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## உடுவில் புதுமடம் பகுதியில் வீடொன்று தீ மூட்டி எரிப்பு



உடுவில் தெற்கு, புதுமடம் ஜே/182 கிராம அலுவலர் எல்லைப் பகுதியில் வீடொன்று தீ மூட்டி எரியூட்டப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்த வீட்டின் பெண் கிராம அலுவலர் பணிமனையில் உதவியாளராகப் பணிபுரிகின்றார். குறித்த பெண் வேலைக்காக கிராம அலுவலர் பணிமனைக்குச் சென்றுள்ளதையும், கணவன் வேலைக்குச் சென்றுள்ள நிலையிலும், அருகிலுள்ள சகோதரியின் வீட்டிலும் யாருமில்லாத சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராம அலுவலர் பணிமனையில் உதவியாளராகப் பணி புரியும் பெண்ணின் மீதான தனிப்பட்ட பகையின் காரணமாகவே தீ வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தீயூட்டல் காரணமாக வீடு முற்றாகச் சேதமடைந்ததுடன், வீட்டிலிருந்த உடைகள், உறுதி உட்பட்ட பெறுமதியான ஆவணங்கள் அனைத்தும் எரிந்து போயுள்ளது. அத்துடன் வீட்டினுள் பாதுகாப்பாக இருந்த நகைகளில் சிலவும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகளைப் பொலிஸார் ஸ்தலத்திற்கு வந்து மேற்கொண்டனர்.சந்தேகத்தின் பேரில் சிலர் தேடப்பட்டு வருவதாக பொலிஸ நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. (48)

## பணிப்பெண்களாகச் செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு, வீட்டுப் பணிப் பெண்களாகச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்களின் தொகை 40 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்களரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்வோரின் குடும்பப் பின்னணி தொடர்பான தகவல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்குச் செல்வதற்காக வரையறுக்கப்பட்டுள்ள வயதெல்லை என்பன இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறாத பெண்களுக்கு உள்நாட்டிலேயே தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் இணைந்து புதிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யப் பணிப்பு

உரிய் தரப்பின் அனுமதி இன்றி தனியார் பல்கலைக் கழகங்களுக்கு பட்டங்களை வழங்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பட்டங்களை வழங்குவதற்கு அது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க சபைகளிடம் அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதனை இரத்துச் செய்யும் வகையில், தனியார் பல்கலைக்கழகங்கள் அனுமதி இன்றிப் பட்டங்களை வழங்க முடியும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவினால், வர்த்தமானி அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம், இலங்கை மருத்துவசபை, பொறியியலாளர்கள் நிறுவகம் போன்றவை எதிர்ப்பை வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## சத்திரத்துச் சந்தியில் மின் தடையால் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மின்தடை காரணமாக சிறிது நேரம் ஒளிர மறுத்த வீதி சமிக்ஞை விளக்குகளால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்கினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் சத்திரத்துச் சந்திப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் வீதிச் சமிக்ஞை விளக்குகள் திடீரென்று ஒளிர மறுத்ததன் காரணமாக விதிமுறைகளுக்கு அமைய பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் செய்வதறியாது நான்கு பக்கமும் ஒரே நேரத்தில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

இதற்கு நகரில் மின் தடை ஏற்பட்டமையே காரணம் என்று தெரியவந்தது. எனினும் சிறிது நேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியதை அவதானிக்க முடிந்தது. (பா)

## வடக்கின்...

இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐ.நா.வின் உதவிச் செயலாளர் தலைமையிலான குழுவினருடனான சந்திப்பின் தொடர்ச்சியாகவே நோர்வே தூதுவருடனான சந்திப்பு அமைந்திருந்ததாகவும் தெரிவித்த முதலமைச்சர் நோர்வே அரசாங்கம் வடமாகாணத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதுடன், மற்றைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்தின் பிரச்சினைகள் வித்தியாசமானவை போர் ஓய்ந்ததின் பின்னர் இங்கு 49 ஆயிரம் விதவைகள் உருவாகியுள்ளனர்.

கல்வி சம்பந்தமாகவும் பிரச்சினைகள் உள்ளதாகத் தெரிவித்த முதலமைச்சர், பொருளாதார ரீதியில் எத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்பட முடியும் என்பது குறித்தும் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் கேள்விக்குப் பதிலளித்த முதலமைச்சர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித

## அரசுடன்...

றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ச்சியாக அரசு முரண்பாட்டுடன் இருக்கின்றது.

எனவே வடமாகாண சபை செயற்பாடுகளைச் சரியாக முன்னெடுத்துச் செல்வதில் கஷ்டநிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டியதாக ஆயர் கூறினார்.

அத்துடன், வடமாகாண சபையில், வடமாகாண சபை உறுப்பினர்களினால், அரசுக்கு கோபம் ஏற்படும் வகையிலான பிரேரணைகள் முன்வைக்கப் படுகின்றன. அதனால், அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவி செய்யும் விதத்தில் நடந்து கொள்வதில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே பயனை அடைய முடியும். அதனையே அரசும் விரும்புகின்றது.

அத்துடன், நேற்று முன்தினம் யாழிற்கு வருகை தந்த ஐ.நா அதிகாரியிடம், இடம்பெயர்ந்த மக்களுக்கான வாழ்வாதார முயற்சிகள் செய்யப்பட வேண்டும். பொரு ளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு பிற நாடுகள் உதவ முன்வர வேண்டுமென்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துரைத்துள் ளார் என்று நான் கூறினேன்.

அதேவேளை, தமிழ் மக்களின் விருப்பம் என்ன என்று கிரேற்லோசன் என்னிடம் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரில் காணாமற் போனோர்களின் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தினை முன்வைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள்.

அதனால், காணாமல் போனோர்களிற்கான தகுந்த பதிலை அரசாங்கம் தரும், அதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம், நீதி கிடைக்குமென எதிர்பார்க்கின்றார்கள்.

அதேவேளை, போர் நிறைவடைந்த பின்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் போதைப் பொருள் பாவனை, மது பாவனை உட்பட பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. இதனால், கல்விமான்கள், புத்திஜீவிகள், பெற்றோர்கள் என பலரும் கவலையடைந்துள்ளனர். இதனைக் கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டுமென்றும் எடுத்துக் கூறினேன். (25)


## சேவைநலன் பாராட்டு



1. எஸ்.பத்மநாதன் (பொறியியல் பகுதி ஊழியர்)
2. எஸ்.சிவகுமார் (சாரதி)
3. வி.சோமசுந்தரம் (போக்குவரத்து உதவி முகாமையாளர்)
4. எம்.புஸ்பதேவன் (சாலை பரிசோதகர்)
5. எஸ்.இரத்தினசிங்கம் (காப்பாளர்)
6. ரி.வேலுப்பிள்ளை (காப்பாளர்)

ஆகியோர் இலங்கை போக்குவரத்துச் சபை பருத்தித்துறை சாலையில் அளப்பரிய மக்கள் சேவையாற்றி தமது 55 ஆவது அகவையில் இளைப்பாறுவதை இட்டு அவர்களை மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

போக்குவரத்து தொழிற்சங்கம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
பருத்தித்துறை சாலை,
பருத்தித்துறை

(C/3407)


உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் திட்டம் எதுவும் தமக்கு இல்லை எனவும் நால்வாரின் நாங்கள் நிர்வாக அலுவல்களில் மட்டுமே தற்போது கவனம் செலுத்துகின்றோம். அரசியல் பிரச்சினைகள் குறித்து எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

ஆனால் பெண்களது விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக வடமாகாண சபை உறுப்பினர்கள் அனந்தி சசிதரனுக்கு மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (பா)

## சாட்சிகளைப்...

சில சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டம் மிகவும் அவசியமானது என சர்வதேச சமூகம் இலங்கைக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் தடவையாக இந்த உத்தேச சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இந்தச் சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்த ஆர்வம் காட்டவில்லை.

உரிய நேரத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தினால் குறித்த உத்தேசச் சட்டம் பற்றிய விடயங்கள் கிடப்பில் போடப்பட்டன. அதன் பின்னர் புதிதாக சட்டமொன்றைச் சமர்ப் பிக்க அரசாங்கம் தீர்மானித்திருந்த நிலையில் சர்வதேச அழுத்தங்களின் காரணமாக அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. விரைவில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

## ஜனாதிபதியை...

பின்போது அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம், ஐ.நா.வின் அபிவிருத்தித் திட்ட முன்னேற்றம் தொடர்பாக உதவிச் செயலர் கலந்துரையாடியதுடன், எதிர்வரும் காலத்தில் எவ்வகையான உதவிகள் தேவைப்படுவதாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனிவிரத்ன மற்றும் ஐ.நா.வின் இலங்கைக்கான இணைப்பாளர் சுபிசேன நண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நியூஸிலாந்து...

சட்டவிரோதமான முறையில் நியூஸிலாந்துக்குச் செல்ல முயன்ற மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 75 பேரை பேருவளை, மொரகல்ல எனுமிடத்தில் வைத்து நேற்று அதிகாலை 1.15 மணிக்கு பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் ஆண்கள் 60 பேரும், பெண்கள் 9 பேரும், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் மூவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்துள்ளமையால் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாவது ருவென்ரி20 இலங்கை 'த்ரில்' வெற்றி

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற பரபரப்பான முதலாவது ரி20 போட்டியில் இலங்கை அணி 2 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்ஷானை விரைவில் இழந்தாலும் குசால் பெரேராவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 7 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு முனையில் குசால் பெரேரா ஓட்டங்களைக் குவித்தாலும் மறு முனையில் அவருக்கு பக்கபலமாக யாரும் ஆடவில்லை. இறுதிக்கட்டத்தில் குலசேகர அதிரடியாக ஆடி 31 ஓட்டங்களைப் பெற்றார். துடுப்பாட்டத்தில் குசால் பெரேரா 64, சண்டிமல் 18, திசார பெரேரா ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மோர்ரசா, ஷகிப் அல் ஹசன், அரபாத் சனி தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் அணியும் விரைவாக ஓட்டங்களைக் குவித்தது.

இருப்பினும் அவ்வணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இறுதிப் பந்தில் வெற்றிக்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அதிரடியாக ஆடிய அனமுல் ஹக் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் பங்களாதேஷ் தோல்வியைத் தழுவ நேரிட்டது. துடுப்பாட்டத்தில் தமிம் இக்பால் 30, ஷகிப் அல் ஹசன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பெரேரா, குலசேகர தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக குசால் பெரேரா தெரிவானார். இதன் மூலம் இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. அடுத்த போட்டி நாளை இடம் பெறவுள்ளது.

## நாடாளுமன்ற...

தானே தவிர, இது திணிக்கப்பட்ட விடயமல்ல. அன்றைய காலத்தில் இரு நாட்டு அரசாங்கமும் இணங்கியதாலேயே இச்சட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆக, இணக்கமில்லாமல் அதனை நாங்கள் இலங்கை அரசிடம் திணிக்கவில்லை. நாங்கள் எதனைச் செய்தாலும் அது இருநாட்டு உறவினையும் பாதிக்காமலே செய்வோம் என்றார்.

87களில் இந்திய அமைதி காக்கும் படையினரை இலங்கை அரசு கோரியது. நாங்கள் வழங்கினோம். மறுபடியும் அமைதி காக்கும் படையினரை திருப்பி அழைக்குமாறு பணித்தார்கள். எந்தவித மறுப்புமின்றி நாங்கள் அதனைச் செய்தோம்.

எமது இழப்புகளைக் காரணம்காட்டி, தீர்வொன்று காணும் வரை அமைதி காக்கும் படை இலங்கையில்தான் இருக்குமென நாங்கள் அடம்பிடிக்கவில்லை. அவர்கள் விருப்பத்திற்கு நாங்கள் வரவேற்பளித்தோம். அதேபோல், இப்போது வீட்டுத் திட்டம் போன்றனவும் அப்படித்தான்.

ஆகையினால் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி எம்மீது பழிபோடக் கூடாது. அச்சட்ட மூலத்தினை ஆராய்ந்து பார்க்கும் உரிமை இலங்கை அரசுக்கு இருக்கிறது. ஆனாலும் சிலர் 13 பிளஸ், 13 மைனஸ் என்று பலவிதமாக பேசிவருகிறார்கள்.

நடைமுறை சாத்தியங்களுக்கு இணங்க, எந்தவொரு அரசாங்கமும் தமது சட்டமூலத்தை மாற்றியமைக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஆகையினால், 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இலங்கை அரசுக்கு பரிசீலிக்கும் உரிமை இருக்கிறது.

13 ஆவது திருத்தம் மற்றும் அரசியல் தீர்வு பற்றி நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆலோசித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என இலங்கை அரசு கூறுகிறது. இது நல்ல விடயம்தான். ஆனாலும், சிலர் அக்குழுவில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கூறி வருகிறார்கள். எம்மைப் பொறுத்த வரையில், நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து, அனைவரது ஒத்துழைப்புடனும் சிறந்த தீர்வொன்றை அடைய முனைவதே சிறந்தவழி எனத் தோன்றுகிறது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படும் பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது பற்றி நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை. மனித உரிமை பேரவை என்பது தனியொரு நாட்டுக்குரியதல்ல. இதில் பல நாடுகள் இருக்கின்றன. ஆகையினால் அனைத்து நாடுகளின் இராஜதந்திர நகர்வுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

உயிரிழப்பு, மனித உரிமை மீறல்கள் என்பன சாதாரண விடயமல்ல. இதனை தாங்கிக்கொள்ளும் சக்தி எல்லோருக்கும் இருக்காது. ஆகையினால், அதற்குரிய நடைமுறைகள் இருப்பது அவசியம் தான். ஆனாலும், ஒரு நாட்டின் இறைமைக்கு பாதகம் இல்லாமல் அந்த நகர்வு இருக்க வேண்டும். இலங்கைக்குள் குழப்பம் நீடிப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது என்றார்.

30 வருடகால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் அந்த வரலாறு பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைப் பின்னொட்டியே போர்க்குற்ற விசாரணை பற்றியும் பேசப்படுகிறது.

பயங்கரவாதத்தினை இல்லாதொழிக்க நீண்டகாலம் எடுத்தது உண்மைதான். அதற்காக, மனிதஉரிமை விவகாரங்களையும் நீண்டகாலம் இழுத்தடித்து, பதிலளிக்காமல் இருக்கலாம் என நினைப்பதும் சாத்தியமாகாது. அவ்வளவு காலத்திற்கு இந்த விவகாரத்தினை இழுத் தடிக்க முடியாது. ஆகையினால், உரியகாலத்தில், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வொன்று கண்டிப்பாக கிடைக்க வேண்டும்.

பல நாடுகளை அணுகி, தமக்கான ஆதரவினைபெற இலங்கை முயற்சிக்கலாம். அது அவர்களின் உரிமை. அதுமட்டு மல்லாமல், அனைத்து நாடுகளு டனும் நெருங்கிய உறவினை பேண முயல்வதே இலங்கை அரசுக்கு நல்வழியாக அமை யும் என்றார்.

இந்திய விசா நடைமுறை யில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பற்றி விரிவாக விவாதித்து வருகிறோம். அதில் இலங்கை வர்த்தகர்கள், பயணிகள் வந்தவுடன் விசா (on arrival visa) நடைமுறை பற்றி சங்கடப்படுகிறார்கள். ஆகையினால், இதுபற்றி நாங்கள் தொடர்ந்தும் நல்ல முடிவினை வழங்க விவாதித்து வருகிறோம்.

சில பாதுகாப்பு சிக்கல்கள் காரணமாக, இவ்வாறான விசா நடைமுறையினை இலங்கைக்கு வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும், மிக விரைவில் இந்தப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.